# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-18 Issue-4 ஏப்ரல்-2025 ரமழான்-ஷவ்வால் 1446




நிறவெறியும், தீண்டாமையும்

## காஸா-பாலஸ்தீன் மீட்புப்போர்...

### இஸ்ரேல் முழு தோல்வி! நடந்ததென்ன?



## அரசியல் சூழ்ச்சியும்... சாதி சதியும்... விசாரணை போக்குகளும்...



தீண்டாமையும் இஸ்லாமும் -பெரியார் 1

بسم الله الرحمن الرحيم

# வைகறை வெளிச்சம்

ஏப்ரல்-2025 ■ ரமழான்-ஷவ்வால் 1446

வரலாற்றுத் தடத்தில் ...
இஸ்லாமியப் பார்வையில்...
நிகழ்வுகளின் உண்மையான மறுபக்கம்...
படியுங்கள்... பரப்புங்கள்...
பாதுகாத்து வையுங்கள்...


■ தனிஇதழ் - ரூ. 40
■ ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ. 480
■ வெளிநாடு - ரூ. 5000

**வைகறை வெளிச்சம்**
சந்தா செலுத்துங்கள்

VAIGARAI VELICHAM
62889509

Collect payments from any of these apps


மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன்-49:13.

## உள்ளே...!








தீண்டாமையும் இஸ்லாமும் - 16
செய்தி ஊடகங்கள் உண்மையின் பக்கமா? அல்லது வெறுப்பின் தளமா? - 17
இனியும் இதுபோல் நீதித்துறை எழுமா? - 27
ஸாலிஹீன் மருத்துவக் கல்லூரி விழா - 30
ஏப்ரல்; கூரியூர் ஜின்னா ஷஹீத் மாதம் - 32
தீண்டாமை ஒழிய ஒரே வழி... - 35
சிறுபான்மையினருக்கு ஒதுக்கப்படும் நிதி குறைந்து வருவது ஏன்? - 39
பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 41
நான் மதீனாவில் கண்டதும் கேட்டதும் - 49
சிலுவைப் போர் 2.0 - 53
மகளிர் மன்றம் - 56
மருத்துவம் - 60
தலையங்கம் - 62


All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only



# காஸா–பாலஸ்தீன் மீட்புப்போர்...

## இஸ்ரேல் முழு தோல்வி! நடந்ததென்ன?

**ஒன்றாய்** இருந்த பாலஸ்தீன பெருநிலத்தை இரண்டாய் பிளக்கும் தீர்மானம் (181) ஒன்று ஐக்கிய நாடுகள் சபையில் நவம்பர் 25, 1947இல் கொண்டு வரப்பட்டது. அன்றுவரை மொத்த பாலஸ்தீனமும் இஸ்லாமிய உலகுக்குச் சொந்த மானதாகவே இருந்தது.

அப்போது ஐக்கிய நாடுகள் சபையில் 57 நாடுகளே உறுப்பினர்களாக இருந்தன.

பாலஸ்தீன பெருநிலத்தை இரண்டாகப் பிளக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட, 33 வாக்குகள் வேண்டும். ஆனால், அமெரிக்காவின் ஆதிக்கத்தின் கீழ் 25 நாடுகளே இருந்தன.

தீர்மானம் 25 நவம்பர் 1947இல் வாக்கெடுப் புக்கு வந்தது.தோற்றது. அத்தோடு பாலஸ்தீனை பிளக்காமல் விட்டிருக்க வேண்டும். ஆனால், பாலஸ்தீனை பிளந்தே ஆக வேண்டும் என்பதில் அமெரிக்கா குறியாக இருந்தது.

அமெரிக்கா தனது முழு பலத்தையும் பிரயோகித்து மீண்டும் ஒருமுறை வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனக் கட்டாயப்படுத்தியது. வாக்கெடுப்பு 29.11.1947 அன்று நடக்கும் என்ற நிலை. இது, பிறந்த நாள் முதலே ஐக்கிய நாடுகள் சபை ஐக்கிய அமெரிக்க சபை எனச் செயல்பட்டது என்பதை ஒங்கி முழங்கும் நிகழ்வு.

இரண்டாவது வாக்கெடுப்பு 29.11.1947க்குச் சென்றது. இதனிடையே எட்டு நாடுகள் அமெரிக்காவால் மிரட்டப்பட்டன.

லைபீரீயா, நைகார்ஹுவா ஆகிய நாடுகள் மிரட்டப்பட்டன.

சில நாடுகளுக்கு உதவி என ஆசை வார்த்தை (ஹைத்தீ, பிரான்ஸ், பெல்ஜியம், லக்ஸ்சம்பர்க், நெதர்லாந்து)

(பிலிப்பைன்ஸ்)-ன் பிரதிநிதி அமெரிக்காவுக்கு.

தாய்லாந்து நாட்டிற்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது.

இப்படி அடாவடித்தனங்களால் பிளக் கப்பட்டதுதான் பாலஸ்தீனம். அத்தோடு ஜீயோனிஸ்ட்டுகளின் தீவிரவாதங்களும் இணைந்துகொண்டன.

இந்தியாவை மிரட்டினார்கள். ஆனால் இந்தியா பணியவில்லை.


vaigarai velicham official

**1947இன் தீவிரவாதமும், கெடுபிடிகளும் அப்படியே இன்றும் தொடருகின்றன.**

**பிளக்கப்பட்ட பாலஸ்தீனத்தில் காஸா பாலஸ்தீனத்திற்கு தரப்பட்டது பகுதி.**

1967இல் மூன்று அரபுநாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் நடந்த போரில் எகிப்தின் நிருவாகத்திலிருந்து காஸா பறிபோனது. இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொண்டது.

அன்று முதல் இன்றுவரை காஸாவின் மக்களை சிறை பிடிப்பது, சித்திரவதை செய்வது, கொலை செய்வது என இஸ்ரேலின் தீவிரவாதங்கள் தொடர்ந்தன.

இன்று இஸ்ரேலுக்கு எதிராகப் போர் செய்பவர்கள் அனைவரும் தங்கள் பெற்றோர் களை இஸ்ரேலின் கொலை வெறிக்கு பறி கொடுத்தவர்கள்தாம்.

அக்டோபர்-7, 2023இல் ஹமாஸ் முதலிய போராளிகள் காஸாவைச் சுற்றியுள்ளப் பகுதிகளில் திடீரெனப் புகுந்து 250 பேரை பிணைக் கைதிகளாக அழைத்து சென்றவர்கள்.

இது இஸ்ரேலுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. உலகிலேயே மிகவும் ஜாக்கிரதையாக இருக்கும் நாடு என்ற பட்டமும், எதையும் முன் கூட்டியே அறிந்திடும் நுண்மாண்நுழைபுலம் கொண்ட அபார நாடு என்ற பிம்பமும் உடைந்தது.

சாதாரணமாக இப்படி பிணைக் கைதிகளை கொண்டு வந்து இஸ்ரேலிய சிறைகளில் வாடும் பாலஸ்தீனக் கைதிகளை விடுப்பது வழக்கம்.

உண்மையைச் சொன்னால், இஸ்ரேலின் சிறைகளில் சித்தரவதைகளுக்கு ஆளாகி, செத்துக்கொண்டிருக்கும் அப்பாவி பாலஸ்தீன மக்களை விடுதலை செய்ய வேறு வழி இல்லை. இதற்கு முன்னரும் இதுபோல் பலமுறை கைதிகளை விடுவித்திருக்கின்றார்கள்.

காஸா பகுதி மக்களை இஸ்ரேல் படுத்தும் அவல நிலைகளையெல்லாம் கருத்திற்கொண்டு தான் ஐக்கிய நாடுகள் சபையின் இப்போதைய பொதுச் செயலாளர் ஆண்டோனியே குவிட்ரஸ் அவர்கள் இப்படிக் கூறினார்கள் :

அதாவது "ஹமாஸ் முதலாயப் போராளிகள் 56 Years of Suffocating occupation-ஐ மூச்சுத் திணறும் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போர் செய்கின்றார்கள். They are not fighting for nothing அவர்கள் காரணமில்லாமல் சண்டையிட வில்லை"

இதனால் ஐக்கிய நாடுகள் சபை, ஹமாஸ்-ஐ ஓர் தீவிரவாத அமைப்பு என அறிவிக்கவியலாது எனக் கூறிவிட்டது.

அக்டோபர்-7, 2023 அன்று 1400 பேரை போராளிகள் கொன்றுவிட்டதாக அறிவித்தார்கள் ஜியோனிஸ்ட்டுகள். பின்னர் அதனை 1300 பேர் என்றார்கள். பின்னர் உலக மனித உரிமை ஆர்வலர்களும், ஊடகங்களும், இப்போது இஸ்ரேலிய இராணுவமும் நடத்திய ஆய்வில் உண்மைகள் வெளிவந்தன.

அத்தனை கொலைகளையும் அன்று (2023 அக்டோபர்-7இல்) செய்ததை இஸ்ரேலிய இராணுவமே ஒத்துக்கொண்டார்கள்.

பல்வேறு கட்டடங்களிலும், போராளிகளால் வெளியே விடப்பட்ட Hostages என்ற அழைத்துச் செல்லப்பட்டவர்களும் இதையே சொன்னார்கள்.

இப்போது யோவ் கேலண்ட் என்ற அப்போதைய இஸ்ரேலிய இராணுவ அமைச்சர், நான்தான் Hannibal Direction என்ற எல்லோ ரையும் கொலை செய்யுங்கள் என்ற உத்தரவை அக்டோபர்-7, 2023 அன்று பிறப்பித்தேன் என ஒப்புக்கொண்டார்.

இப்போது இஸ்ரேலிய அதிகாரிகள், அதன் உளவுப் பிரிவான Unit 8200, உட்பட எல்லோரும் அக்டோபர்-7, 2023 அன்று சம்பவத்திற்கு பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள். இதைத்



தடுக்க தவறியது நெதயான்ஹூவின் மிகப்பெரிய தோல்வி என்பதையும் சேர்த்தே சொல்கிறார்கள்.

அன்று முதல் இன்று வரை காஸாவில் கொலை செய்யப்பட்ட 48,800 அப்பாவி பாலஸ்தீன முஸ்லிம்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி இது.

இந்தப் பின்னணியில்தான் நெதன்யாஹூவும் போர்க் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டார். அதேபோல் அன்றைய இராணுவ அமைச்சர் யோவ் கேலண்ட்டும் போர்க் குற்றவாளி. இது உலக நீதிமன்றம் ICCயின் உத்தரவு.

இஸ்ரேல் 521 நாள் தொடர்ந்து காஸாவில் போர் செய்தது. ஆனால், போராளிகள் பல்வேறு கொரில்லா தந்திரங்கள் வழி இஸ்ரேலை சரணடைய வைத்துவிட்டார்கள்.

ஜனவரி-19,2025இல் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது. Complete Victory என்ற கோஷம் Complete Surrunder என்றானது. அதாவது முழுவெற்றி முழு தோல்வியென முடிந்தது.

இதனை இஸ்ரேலிய அமைச்சர்களே ஒத்துக்கொள்கிறார்கள்.

இஸ்ரேலின் ஊடகங்களும் அப்படியே!

### இந்த 521 நாள் போரில் உலக மக்களின் விழிப்புணர்வு

1. யூதர்களில் பலர் யூதமதம் வேறு, ஜியோனிஸம் வேறு, யூதமதம் 2500 ஆண்டுகள் பாரம்பரியத்தைக் கொண்டது, ஜியோனிஸம் 150 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தது. எனவே காஸாவில் நடந்த கூட்டுப்படுகொலைகளுக்கும் எங்களுக்கும், எங்கள் யூத மதத்திற்கும் சம்மந்தமுமில்லை எனப் பிரகடனப்படுத்தினார்கள்.

2. இஸ்ரேல் என்பது ஜியோனிஸ்ட்டுகளின் உருவாக்கம். யூத வேதங்களின்படி யூதர்கள் தங்களுக்கென ஒரு நாட்டை நாடக்கூடாது. அது அறுதி மீட்பர் வந்த பிறகே நடக்கும் என்றும் அறிவித்தார்கள்.

3. யூதர்கள் தங்களுக்குள் Not in our name என்றொரு இயக்கத்தைத் தொடங்கி உலகெங்கும் நடத்தி வருகின்றார்கள். எங்கள் பெயரால் இந்த இனப்படுகொலைகளைச் செய்யாதீர்கள் என இஸ்ரேலுக்கு அறிவுறுத்தி வருகின்றார்கள். உலகெங்கும் ஜியோனிஸத்திற்கு எதிராக பிரச்சாரம் செய்து வருகின்றார்கள்.

4. அதேபோல் இன்னொரு அமைப்பு. அமெரிக்க யூதர்களால் நடத்தப்படுவது. அதன் பெயர் Jewish Voice for Peace. 1996 முதல் ஜியோனிஸசத்திற்கெதிராக இயங்கி வரும் அமைப்பு. இந்த அமைப்பு இஸ்ரேல் ஓர் ஆக்கிரமிப்பு நாடு. அது, விடுதலை, மனித உரிமை, இவற்றிற்கு அப்பாற்பட்ட ஒரு நாடு, அது நிற வெறியை செயல்படுத்தும் ஒரு நாடு என்றெல்லாம் அறிவித்து உலகெங்கும் போராடி வருகின்றார்கள். தனி பாலஸ்தீன நாடு இந்த இயக்கத்தின் இலக்கு.

5. ஏற்கெனவே BDS என்ற அமெரிக்க அமைப்பு, இஸ்ரேலுக்கு எதிரான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இப்படி யூதர்களே இஸ்ரேலுக்கு எதிராக உலகெங்கும் கிளர்ந்தெழுந்துள்ளது இஸ்ரேல் என்ற கொள்கைக்கு மகத்தான தோல்வி. தியாகங்கள் செய்த பாலஸ்தீன மக்களுக்கு கிடைத் வெற்றி.

6. இவற்றிற்கெல்லாம் மேலாக, யூத இராணுவத்தில் பணியாற்றிடும் ஆண்களும், பெண்களும் மீண்டும் இராணுவத்தில் சேர மறுத்து வருகின்றார்கள். அவர்கள் சொல்லும் காரணம், காஸாவில் கொலை செய்யப்பட்ட 48,800 மக்களுக்கும் கிடைத்த மகத்தான வெற்றி.

அந்தக் காரணம்

> **“நாங்கள், எங்களுக்கு ஒரு நாடு இருக்கின்றது அது இஸ்ரேல். அதை பாதுகாத்தே ஆக வேண்டும் என்ற அர்ப்பணிப்போடு இராணுவத்தில் சேர்ந்தோம். ஆனால் இப்போதுதான் புரிகின்றது, நாங்கள் பூர்வ குடிகளை விரட்டிவிட்டு ஆக்கிரமித்திருக்கின்றோம் என்பது, அந்த ஆக்கிரமிப்பை தக்க வைத்திட அநியாயமாக**

**போர் செய்கின்றோம். ஆகவே நாங்கள் பணிகளுக்குப் போகப் போவதில்லை. ”**

*7.* ஐக்கிய நாடுகள் சபை, இஸ்ரேல் ஓர் ஆக்கிரமிப்பு நாடு என அறிவித்திருப்பது மிகப்பெரிய அளவில் இஸ்ரேலிய மக்களின் கண்களைத் திறந்திருக்கின்றது. அதிகமான மக்கள் இஸ்ரேலை விட்டு வெளியேறிக்கொண்டே இருக்கின்றார்கள்.

*8.* Justice for Palestinians பாலஸ்தீன மக்களுக்கு நீதி என்றொரு அமைப்பு உலகெங் கிலும் இயங்கி வருகின்றது. இதன் இன்னொரு பெயர் இந்த் ரஜப் ஃபவுண்டேஷன் (HRF) இவர்கள் காஸாப் போரில் ஈடுபட்ட இஸ்ரேலிய இராணவத்தினர் உலகில் உல்லாசப் பயணம் வரும்போது, அந்த நாட்டிலுள்ள நீதிமன்றங் களில், போர்க்குற்றவாளி என புகார் செய்து கைது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இந்த இயக்கத்தினர் இஸ்ரேலிய இராணுவத் திற்கெதிராக திரட்டி வைத்திருக்கும் ஆதாரங்கள் அலாதியானவை. கூட்டுப்படுகொலை செய்துவிட்டு இஸ்ரேலிய இராணுவத்தினர் இனியும் தண்டனை பெறாமல் தப்பிக்க இயலாது என்ற நிலையை உருவாக்கி வருகின்றார்கள்.

*9.* உலகெங்கும் உள்ள மக்கள் (மாணவர்கள்-இளைய தலைமுறையினர்) ஒவ்வொரு சனிக் கிழமையும் பாலஸ்தீன மக்களுக்காக தங்கள் நாட்டில் அறப்போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள்.

உலகெங்கிலும் வாழும் இளைய தலைமுறையினர் குறிப்பாக ஐரோப்பாவில் வாழும் இளைய தலைமுறையினர் இஸ்ரேல் ஒரு ஆக்கிரமிப்பு நாடு என்பதையும், கூட்டுப் படுகொலைகளை செய்யும் நாடு என்பதையும் நன்றாகவே புரிந்துகொண்டார்கள்.








காஸா மக்களின் பொறுமை, அவர்கள் இழப்புகளை எதிர்கொண்ட விதம், இவை இளைய தலைமுறையினரை திருக்குர்ஆனின் பக்கமும் முஹம்மது (ஸல்) அவர்களின் வழிமுறைகளின் பக்கமும் திருப்பியிருக்கின்றன.

இவையெல்லாம் போராளிகளுக்கு கிடைத்த மகத்தான வெற்றி.

## போர் நிறுத்தம் ஏற்பட்டது எப்படி?

**அமெரிக்காவில்** அதிபருக்கான, அதாவது குடியரசு தலைவருக்கான தேர்தல் 2024ஆம் ஆண்டு நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் குடியரசு கட்சியின் சார்பில் டொனால்டு டிரம்ப் போட்டியிட்டார். அவரை எதிர்த்து ஜனநாயகக் கட்சியின் சார்பில் ஹமலா ஹாரிஸ் என்ற பெண் வேட்பாளர் நின்றார். இவர் 2000 முதல் 2024ஆம் ஆண்டு வரை அமெரிக்காவை ஆட்சி செய்த ஜனநாயகக் கட்சியில் துணை குடியரசு தலைவராக இருந்தவர். குடியரசு தலைவராக இருந்த ஜோவ் பைடன் உடல்நிலை காரணமாக மீண்டும் தேர்தலுக்கு நிற்கவில்லை.

அமெரிக்காவின் குடியரசு தலைவரின் பதவி காலம் நான்கு ஆண்டுகளே! ஆனால் அதே குடியரசு, தலைவர் - அதிபரை இரண்டாவது முறையும் தேர்ந்தெடுப்பது அமெரிக்காவில் வழக்கம். ஜோவ் பைடன் உடல் நிலையின் காரணமாக போட்டியிடவில்லை என்பதானல், அவருடைய துணை குடியரசுத் தலைவர், ஹமலா ஹாரிஸ் போட்டியிட்டார். அவைரத்தான் அமெரிக்க மக்கள் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். ஆனால் தேர்ந்தெடுக்கவில்லை. காரணம்?




பைடன் தொடர்ந்து இஸ்ரேலுக்கு ஆயுதங்களை வழங்கினார். கோடிக்கணக்கில் பணத்தை அள்ளிக் கொட்டினார். ஒரு கணக்கின்படி 107 லட்சம் கோடி டாலர்களை ஒரு வருடத்திற்கு கொடுத்தார்.

அமெரிக்கா இஸ்ரேலுக்கு வழங்கிய ஆயுதங்கள் மனித இனத்திற்கு எதிரானவை எனக்கூறி ஐ.நா. வால் தடுக்கப்பட்டவை.

இதையெல்லாம் கடந்து, தன்னை ஒரு ஜியோனிஸ்ட் என பகிரங்கமாக அறிவித்தார்.

ஒரு ஜியோனிஸ்ட் (யூத பயங்கரவாதியாக) இருக்க ஒருவர் யூதனாக இருக்க வேண்டியதில்லை என விளக்கம் வேறு சொன்னார்.

அவருடைய அமைச்சரவையில் அங்கம் வகித்த அன்டோனி பிளிங்கன் (Secretary of State) அக்டோபர்-7,2023 முதல் தொடங்கி, தான் பதவி இழந்த ஜனவரி-19,2024க்குள் 10 முறை இஸ்ரேலுக்கு பயணம் செய்தார். ஒவ்வொரு முறையும், நான் அமெரிக்காவின் வெளி விவகாரத் துறை அமைச்சராக இஸ்ரேலுக்கு வரவில்லை. மாறாக, ஒரு யூதன் என்ற அடிப்படையிலேயே இஸ்ரேலுக்கு வந்துள்ளேன் என்றார்.

அவர் இஸ்ரேல் காஸாவில் நடத்திய கூட்டுப்படுகொலைகளுக்குப் பணத்தை அள்ளிக் கொடுக்கும்போது பல விதிமுறைகளை மீறினார். அவற்றுள் ஒன்று. காங்கிரஸ் என்ற அமெரிக்காவின் நாடாளும் மன்றத்தின் ஒப்புதலுக்காக காத்திருக்கவில்லை. அமெரிக்காவின் நாடாளுமன்றத்தைப் பற்றிக் கவலைப் படவில்லை.

ஓர் குறிப்பிட்ட அளவுக்குமேல் அமெரிக்கா இஸ்ரேலுக்குப் பணத்தைத் தந்திட வேண்டும் என்றால் அமெரிக்கா நாடாளுமன்றத்தின் ஒப்புதல் அவசியம். அவர், அதாவது அன்டோனி பிளிங்கன் அதைப்பற்றிக் கவலைப்படவே இல்லை. அதைப் பற்றிய விமர்சனங்கள் அமெரிக்க நாடாளுமன்றத்தில் வந்தபோது, அதைச் சற்றும் சட்டை செய்யவில்லை. இப்படி எந்த விதிகளைப் பற்றியும் கவலைப்படாமல், யாருடைய எதிர்ப்பைப் பற்றியும் கவலைப் படாமல் நிதியை மட்டுமல்ல, ஆயுதங்களையும் அள்ளித் தங்குதடையின்றி கொடுத்து வருகின்றார்கள். அதனால் பாலஸ்தீனில் நடக்கும் படுகொலைகள் இஸ்ரேல்-அமெரிக்கா கூட்டுப்படுகொலைகள்.

அமெரிக்க மக்கள் இப்படி அமெரிக்காவின், தங்கள் பணம் ஆயுதங்களாகவும், பண உதவியாகவும், காஸாவில் பெண்களையும் குழந்தைகளையும் படுகொலை செய்வதற்குப் பயன்படுத்தப்படுவதை விரும்பிடவில்லை. அதனால் பைடனின் ஜனநாயக கட்சியை வெறுத்தார்கள்.

அமெரிக்க குடிமக்கள் அமெரிக்கா முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள்.

ஒவ்வொரு ஆர்ப்பாட்டத்திலும், பல லட்சம் மக்கள் குழுமினார்கள். பல பிரதான சாலைகள் மூடப்பட்டன.

தேர்தல் நவம்பர் 2024இல் நடக்கிவிருந்தது. அமெரிக்காவின் தேர்தல் "காஸா" வை மையமாகக் கொண்டுதான் நடக்கப் போகின்றது, என்பதை நன்றாகக் கண்டு கொண்டார். டொனால்ட் டிரம்ப். ஆகவே நான் தேர்ந்தெடுக்கப்பட்டால், காஸாவில் போர் நிறுத்தத்தைக் கொண்டு வருவேன் என்றார்.


vaigarai velicham official

தேர்தல் தொடக்கத்தில் கமலா ஹாரிசுக்கு அதாவது டிரம்ப்பை எதிர்த்து நின்ற கமலா ஹாரிசுக்கு சாதமாக இருந்த கருத்துக் கணிப்புகள் சரியத் தொடங்கின.

இதை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார் டிரம்ப். நான் ஆட்சிக்கு வந்தால் நிச்சயமாக போர் நிறுத்தம் என்றார். அத்தோடு காஸாவை கட்டி எழுப்புவேன் என்றார். இஸ்ரேலிடம் காஸாவை இடித்துத் தகர்த்ததற்கு இழப்பீடும் பெற்றுத் தருவேன் என்றார்.

இதில் அவருக்கு மக்கள் ஆதரவு அமோகப் பெருகியது.

அமெரிக்கா வாளர்களில் பலர் நாங்கள் யாருக்கும் வாக்களிக்கப் போவதில்லை என அறிவித்தார்கள். காரணம் கேட்டபோது, யாருக்கு ஓட்டுப் போட்டாலும், அவர்கள் பாலஸ்தீன் கூட்டுப்படுகொலைகளுக்கு பணமும் ஆயுதங்களும் தருபவர்களாக இருக்கின்றார்கள் என்றார்கள்.

இறுதியில் டொனால்ட் டிரம்ப்-க்கு வாக் களிப்பதாக முடிவு செய்தார்கள். காரணம் அவர் காஸாவில் யார் நிறுத்ததைக் கொண்டு வருவேன் என வாக்களித்தார். அத்தோடு இஸ்ரேலின் பணத்தில் காஸாவைக் கட்டியெழுப்புவேன் என்றார். அதனால் நடுவுநிலையாளர்களும் டிரம்ப்-க்கு வாக்களித்தார்கள்.

முஸ்லிம்களும் ஒட்டுமொத்தமாக டிரம்ப்-க்கு வாக்களித்தார்கள்.

Swing States"தேர்தல் நிலைமைகளைத் தலைகீழக மாற்றும், மாநிலங்கள் என்றொன்று அமெரிக்காவில் செயல்பட்டு வருகின்றது. இதைத்தான் சுவிங் ஸ்டேட் என அழைக்கின் றார்கள். இங்கே முஸ்லிம் வாக்காளர்கள்தாம் நிலைமையைத் தலைகீழாக மாற்றுகின்றார்கள். அந்த மாநிலங்களிலும் டிரம்ப் அதிகமாக வாக்குகளைப் பெற்றார்.

இதில், அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்துவது என்னவென்றால், யூதர்களைச் சார்ந்த ஒரு குழு, டிரம்புக்கு வேலை செய்தது. காரணம் காஸாவில் போர் நிறுத்தம் வரும் என்பதால். இந்த யூதர்கள், தங்கள் மதத்தின் பெயரால், அப்பாவி பெண்களும், குழந்தைகளும் கூட்டுப்படுகொலை செய்யப்படுவதை விரும்பவில்லை.

ஆக "காஸா"வில் போர் நிறுத்தம் என்பதைக் காட்டி அனைவரின் வாக்குகளையும் அமோகமாகப் பெற்று வெற்றி பெற்றார் டிரம்ப்.

### போர் நிறுத்தத்திற்கு முன்

ஆனாலும் அவர் போர் நிறுத்தத்தை கொண்டு வருவதற்கு முன் காஸா-ஹமாஸ் பற்றிய கள ஆய்வு ஒன்றை மேற்கொண்டார். அதில் ஹமாஸை - இஸ்ரேலால் வெல்ல முடியாது என்பதைக் கண்டு கொண்டார். இதையே பைடன் அமைச்சரவையின் அன்டோனி பிளிங்கனும் சொன்னார்.

ஆனால், சர்வதேச கிரிமினல் - இஸ்ரேலின் பிரதமர் நெதன்யாஹூ, தான் ஹமாஸின் பெரும் பகுதியை அழித்து விட்டதாக அறிவித் தார். அன்டோனி பிளிங்கன் ஒத்துக்கொள்ள வில்லை. ஹமாஸ்-இல் பலர் அழிக்கப்பட்டிருக் கின்றார்கள். ஆனால் அதைவிட அதிகமான இளைஞர்களை மீண்டும் தங்கள் படைப் பிரிவில் சேர்த்து இருக்கின்றார்கள். அவர்களுடைய போர் செய்யும் திறன் அப்படியே இருக்கின்றது என்றார்.

அத்தோடு பல இராணுவ நோக்கர்கள், ஹமாஸ்-ஐ அழிக்க இயலாது என்றார்கள். அதனால் இனி போர் நிறுத்தமே வழி என்ற முடிவுக்கு வந்தார். டிரம்ப் தன் மத்திய கிழக்குப் பிரதிநிதியாக ஸ்டீவ் விட்காஃப் என்பவரை நியமித்தார். தான் பதவி ஏற்பதற்கு முன்பே ஜனவரி-17,2025 இப்போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைழெுத்திடச் செய்தார்.

இஸ்ரேலை இதன்வழி அவர் இஸ்ரேலைக் காப்பாற்றி விட்டார் என்பதே உலக நோக்கர்களின் கருத்து.

போர் நிறுத்த ஒப்பந்தம் ஜனவரி-19,2025 செயலில் வந்தது. டிரம்ப் ஜனவர்-20,2025இல் பதவி ஏற்றார்.

போர் நிறுத்த ஒப்பந்தம் - இது மூன்று கட்டங்களைக் கொண்டது. ஒவ்வொரு கண்டமும் 42 நாள்கள் என்று முடிவு. மூன்று 42 நாள்கள் முடியும்போது, இஸ்ரேல் காஸாவை - விட்டு முற்றாக வெளியேறியிருக்கும். காஸா தனியாக, முழு விடுதலைப் பெற்ற பகுதியாக மாறும். அங்கிருந்துதான் Independent Palestine தொடங்கும். இது தனி பாலஸ்தீன நாட்டை நடப்பில் கொண்டுவர விரும்பும் 143 நாடுகளின் திட்டம்.

இந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பெயர் - General Principles of the agreement between Isreal and Palestine an sides in Gaza, on the

**மேற்குகரை**

இஸ்ரேல், இப்பொழுது காஸா கைவிட்டுப் போகும் என்பதை அறிந்து, மேற்கு கரையில் அதே போர்க்குற்றங்களை நிறைவேற்றி வருகிறது.

சிரியாவின் சில பகுதிகளை ஆக்கிரமித்து வைத்துள்ளது.

லெபனானின் ஹிஸ்புல்லாவுடன் செய்த ஒப்பந்தங்களை 1400 முறை மீறியிருக்கிறது.

லெபானில் தனக்கென ஒரு பாதுகாப்பு வளையத்தை (Buffer Zone) ஏற்படுத்த தொடர்ந்து போர் செய்து வருகிறது. அங்கும் தோல்விதான்.

**பாலஸ்தீனர்களுக்கு தனி நாடு**

இஸ்ரேல் ஓர் ஆக்கிரமிப்பு நாடு. அது ஒரு வருடத்தில் ஆக்கிரமிப்புகளிலிருந்து வெளியேற வேண்டும் என அறிவித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபை.

பாலஸ்தீனர்களுக்கு ஒரு தனி நாடு என்ற தீர்மானம் 143 வாக்குகளைப் பெற்று நிறைவேற றப்பட்டது ஐ.நா.வில். பல நாடுகள் தனி பாலஸ்தீனை அங்கீகரித்துள்ளன.

உலக நீதிமன்றம் ICJ International Court of Justice வீற்றிருக்கும் ஹேகுவில், ஹேகு இயக்கம் என்றொன்று தொடங்கப்பட்டுள்ளது. இந்த இயக்கம் காகிதத்தில் அல்லாமல் நிலத்தில் பாலஸ்தீன நாடு என்றொன்றை நிலை நாட்டியே ஆக வேண்டும் என இலக்கு வைத்து இயங்கத் தொடங்கி உள்ளன.

இவையெல்லாம் போராளிகளின் துணிவு, தியாகம் இவற்றின் விளைவு. இஸ்ரேல் பாலஸ்தீன் நிலப்பரப்பு பூமிப் பந்தில் இருந்ததில்லை என்றொரு வரலாற்றை எழுத 100 ஆண்டுகளாக மேற்கொண்ட முயற்சிகளுக்கு பேரிடி!

**- MGM**

exchange of prisioners and the restoration of sustainable calm.

காஸாவிலுள்ள பாலஸ்தீன பகுதிக்கும், இஸ்ரேலுக்கும் இடையிலான ஒப்பந்தம், இது சிறைவாசிகளை விடுதலை செய்யும் ஒப்பந்தம். அத்தோடு நிரந்தர அமைதியையும் கொண்டு வரும்.

இந்த ஒப்பந்தத்தின் நான்கு இலட்சியங்கள்

1. நிரந்தர போர் நிறுத்தம்

2. இஸ்ரேலியப் படைகள் (கஸ்ஸா) காஸா பகுதியிலிருந்து பின் வாங்கிட வேண்டும்.

3. காஸாவை மீண்டும் கட்டியெழுப்பிட வேண்டும்.

4. காஸாவுக்குள் நுழைந்திட இருக்கும் வாயல்கள் அனைத்தையும், துறந்துவிட வேண்டும்.

அதன்மூலம் மக்களும், மக்களுக்குத் தேவையான பொருள்களும் எல்லா இடமும் சென்றிட வழி வகுக்க வேண்டும்.

இதில் முதல் கட்டமாக இஸ்ரேலியப் படைகள் முற்றாக மேற்குப் பக்கம் ஒதுங்கிட வேண்டும். மக்கள் அதிகமாக புழங்கிடும் பகுதியில் இஸ்ரேலிய இராணுவம் இருக்கவே கூடாது. இதில் காஸா பள்ளத்தாக்கும் அடங்கும். இந்த காஸா பள்ளத் தாக்குப் பகுதியில்தான் இஸ்ரேலியப் படைகள் “நெட்ஸாரிம்” என்றொரு பாதுகாப்பு வளையத்தை உருவாக்கி இருந்தன. அதிலிருந்தும் இஸ்ரேலியப் படைகள் வெளியேறிட வேண்டும்.

இஸ்ரேலின், விமானங்கள், உளவு பார்க்கும் விமானங்கள், காஸாவின் மேல் பறக்கக் கூடாது. சில குறிப்பிட்ட மணிநேரங்களைத் தவிர.

காஸாவின் மக்கள் எந்தப் பகுதியிலிருந் தெல்லாம் இடம்பெயர செய்யப்பட்டார்களோ அவர்கள் அந்தந்தப் பகுதிக்குச் சென்றிட அனுமதிக்கப்பட வேண்டும்.

நெட்ஸாரிம் என்றொரு பகுதியை உருவாக்கி வடக்குக் காஸாவுக்கும் தெற்கு காஸாவுக்குமிடையே ஓர் தடுப்பை உருவாக்கியது. இதனால் இஸ்ரேலின் குண்டு வீச்சுகளின்போது, வடக்கு காஸாவிலிருந்து தெற்கு காஸாவிற்கு, தெற்கு காஸாவிற்கு வந்த மக்கள் மீண்டும் வடக்குக் காஸாவிற்கு போக வேண்டும். அதற்கு எந்தத் தடையுமிருக்கக் கூடாது.

போர் நிறுத்தத்தின் கடைசிப் பகுதியில் இஸ்ரேல் முற்றாக காஸாப் பகுதியிலிருந்து வெளியேறிட வேண்டும்.

ஜனவரி 19-இல் தொடங்கிய இந்தப் போர் நிறுத்தம் முதல் கட்டத்தின் ஒரு பகுதிவரை ஒருவிதமாக நகர்ந்தது. இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தத்தை நாளொன்றுக்கு மூன்று முறை நான்கு முறை என மீறிக்கொண்டே இருந்தது.

அதுவரை 1993 சிறைவாசிகள், இஸ்ரேலிய



vaigarai velicham official



சிறைகளில் வாடிய பாலஸ்தீன முஸ்லிம்கள் விடுதலை செய்யப்பட்டிருந்தார்கள்.

23 அழைத்துச் செல்லப்பட்டவர்கள், அதாவது அக்டோபர்-7,2023 ஹமாஸில் அழைத்துச் செல்லப்பட்டவர்கள், பிணைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள். வடக்கு காஸாவிலிருந்து வெளியேறிய மக்கள் வடக்கு காஸாவுக்குள் மீண்டும் சென்றார்கள்.

காஸாவில் காயமடைந்த சுமார் 2000 குழந்தைகள் வெளிநாடுகளுக்குச் சிகிச்சைக்குச் சென்றார்கள். தங்கள் துணையுடன்.

ஒரு கட்டத்தில் - ஹமாஸ் ஐந்து அழைத்துச் செல்லப்பட்டவர்களையும் ஐந்து அழைத்துச் செல்லப்பட்டவர்களில் இஸ்ரேல் கொலை செய்த நான்கு பேரின் உடல்களையும் இஸ்ரேலிடம் ஒப்படைக்க வேண்டும். இஸ்ரேல் 640 பாலஸ்தீன சிறைவாசிகளை விடுதலைச் செய்திட வேண்டும்.

போராளிகள் தாங்கள் ஒத்துக்கொண்டதைப் போல் உயிரோடு 5 பிணைக் கைதிகளையும் நான்கு பேரின் உடல்களையும் ஒப்படைத் தார்கள்.

இஸ்ரேல் தனது சிறையிலிருந்து 640 பேரை பாஸ்காவில் ஏற்றி காஸா அனுப்ப தயாராக இருப்பது போல் காட்டியது. ஆனால் பிணைக் கைதிகள் தன்னை வந்து அடைந்தபோது, விடுதலை செய்திருக்க வேண்டிய 640 பேரையும் மீண்டும் சிறைகளுக்கு அழைத்துச் சென்று அடைத்துவிட்டது.

காரணம் கேட்டபோது, ஹமாஸ் பிணைக் கைதிகளை வெளியே விடும்போது, இஸ்ரேலை யும், இஸ்ரேலிய இராணுவத்தையும் உலக அரங்கில் அவமானப்படுத்துகின்றார்கள் எனக் காரணம் சொன்னது.

இப்படிப் பல கீழறுப்பு வேலைகளைச் செய்துகொண்டே இருந்தது இஸ்ரேல்.

இறுதியில் மார்ச்சு 18, 2025ஆம் நாள் அதிகாலை முதலே காஸாவின் அப்பாவி மக்கள் மீது தாக்குதலைத் தொடங்கியது.

இன்றளவும் 1130 அப்பாவி பெண்களையும், குழந்தைகளையும் கொலை செய்துவிட்டார்கள்.

**போரை நீடிப்பதற்கான காரணம்?**

அக்டோபர்-7, 2023இல் நடந்த நிகழ்வு களுக்குப் பின் இஸ்ரேல் ஹமாஸ் மீது போர் அறிவித்தது. போரை அறிவித்தபோது, போராளி குழுக்களால் அழைத்துச் செல்லப்பட்டவர்களை மீட்கவே இந்தப் போர் என்றது.

ஆனால், இஸ்ரேலிய நீதிமன்றங்கள் நெதன்யாஹூவை சிறைப்பிடிக்க ஆணைகளைப் பிறப்பித்தன. காரணம் அவர்மீது மூன்று பெரிய குற்றச்சாட்டுகள் இருந்தன. அவை...

**1. இராஜ துரோகம், 2. ஊழல்,**
**3. பாலியல் குற்றம்**

இதில் முதல் இரண்டு வழக்குகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டு அவருக்கு தண்டனை வழங்கப்பட்டிருந்தது. அதற்காக அவர் சிறை செல்ல வேண்டும். அந்த நேரத்தில் இந்தப் போர் மூண்டதால் போரைக் காட்டி சிறைக்குச் செல்வதை தள்ளிப்போட்டுக் கொண்டே இருக்கின்றார். காரணமில்லாமல் அவர் போரை நீடிப்பதற்கு இதுவே முக்கியமானக் காரணம்.

ஏனெனில் அவர் எந்த நிபந்தனைகளை அவர் ஜனவரி-17,2025இல் ஒத்துக்கொண்டாரோ, அதே நிபந்தனைகளை அவர் முதல் நாளே ஒத்துக்கொண்டிருக்கலாம். குறைந்த பட்சம் மே 2024இல் ஒத்துக்கொண்டிருக்கலாம். அப்படி ஒத்துக்கொண்டிருந்தால், பல பெண்கள், குழந்தைகள், கைதிகள் ஆகியோர் காஸாவில் காப்பாற்றப்பட்டிருப்பார்கள்.

பிணைக் கைதிகள் - என்ற அழைத்துச் செல்லப்பட்டவர்கள்கள் பலரது உயிர்கள் காப்பாற்றப் பட்டிருப்பார்கள். அத்தோடு பல இஸ்ரேலிய இராணுவத்தினரும் காப்பாற்றப் பட்டிருப்பார்கள்.

காஸாவிலிருக்கும் இஸ்ரேலிய இராணு வத்தினர் பலர், நாங்கள் எந்த இலட்சியமுமற்ற ஒரு போரை நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

எங்களால் குழந்தைகளையும், பெண் களையும்தான் கொலை செய்ய முடிகின்றது. இது போர் அல்ல எனக் கூறியுள்ளார்கள்.

இதையே, எல்லா சர்வதேச நோக்கர்களும் கூறி வருகின்றார்கள்.

**மு.குலாம் முஹம்மத்**
ஆசிரியர், வைகறை வெளிச்சம்





# அரசியல் சூழ்ச்சியும்... சாதி சதியும்... விசாரணை போக்குகளும்...

**தலித்** மக்கள் மீது நடைபெறும் வன்கொடுமைகளுக்கு எதிராக நம்முடைய அரசு எந்திரங்கள் எப்படி செயல்படுகின்றன, வேங்கைவயல் வன்கொடுமை சம்பவத்தில் சட்ட ரீதியாக அரசு செய்த குளறுபடிகளை தெளிவு படுத்தவே இதை எழுதுகிறேன்.

கடந்த 24 மற்றும் 25 டிசம்பர் 2022 தேதிகளில் வேங்கைவயல் கிராமத்தை சேர்ந்த 5 தலித் குழந்தைகள் கடுமையான காய்ச்சல் மற்றும் வாந்தி போன்ற உடல் ரீதியான பாதிப்புகளால் அவதிப்படுகின்றனர். அதற்கு குடிநீர் தான் காரணம் என்று மருத்துவர்கள் கூறி இருக்கின்றனர். இந்த நிலையில் மறுநாள் 26 டிசம்பர் அன்று குடிநீர் அதிக துர்நாற்றமும் கலங்களாகவும் வந்து இருக்கிறது. இதனால் 26 டிசம்பர் அன்று காலை 7 மணிக்கு முத்து கிருஷ்ணன், சுதர்சன், முரளிராஜா ஆகிய இளைஞர்கள் தண்ணீர் தொட்டியில் ஏறி பார்த்து இருக்கின்றனர். மலம் மிதக்கப்பட்டு இருந்து இருக்கிறது. அந்த மலத்தை பிரபாகரன் என்பவரின் அலைபேசியில் புகைப்படம் எடுக்கப்பட்டு இருக்கிறது.

அந்த மலத்தை முரளிராஜா ஒரு கொட்டாங்குச்சியில் வாரி பிளாஸ்ட்டிக் கவரில் போட்டு எடுத்து வந்து உள்ளார். இதனால் முத்துகிருஷ்ணன் (1), சுதர்சன்(2), முரளிராஜா (3), பிரபாகரன் (4) ஆகிய நான்கு பேரும் வழக்கில் சாட்சிகளாக சேர்க்கப்படுகின்றனர்.

முத்துகிருஷ்ணன் முதலில் பார்த்தார் என்பதற்காக அவரது அண்ணன் கண்ணதாசனுக்கு (5) ஏதேனும் விபரம் தெரியும் என்று அவரையும் சேர்க்கிறார்கள். மலத்தை நீரில் கலந்த கும்பலுக்கு எதிராக புகார் கொடுத்த கனகராஜ் (6) வழக்கில் சேர்க்கப்படுகிறார். இந்த கிராமத்தில் விபரமாக பேசக்கூடிய முருகன் என்பவரின் மகன் உமேஸ்வரன் (7) மற்றும் 15 வயது சிறுவன் ராஜ்குமார் (8) ஆகியோரும் சாட்சிகளாக சேர்க்கப்படுகின்றனர்.

தற்போதைய பஞ்சாயத்து தலைவர் பத்மாவின் கணவர் முத்தையாவுக்கும் தலித் மக்களுக்கும் இடையே முரண்பாடு இருக்கிறது. தலித் மக்களுக்கு தற்போதைய பஞ்சயாத்து நிர்வாக ரீதியாக எந்த உதவியும் செய்யவில்லை என்கிற வருத்தம். முன்னாள் பஞ்சாயத்து தலைவரும் தற்போதைய ஒன்றிய கவுன்சிலர்


vaigarai velicham official

ரேவதி கணவர் சிதம்பரத்திற்கும் தலித் மக்களுக்கும் இடையே நல்ல உறவு இருக்கிறது.

முன்னாள் பஞ்சாயத்து தலைவரின் தூண்டுதல் பேரில் தலித் இளைஞர்கள் மலத்தை கலந்து இருப்பார்கள் என்று வழக்கினை முடிக்க போலீஸ் நினைக்கிறது. ஆனால் அதற்கான ஆதாரம் இல்லை. ஆகவே தலித் இளைஞர்களிடத்தில் அந்த முன்னாள் பஞ்சாயத்து தலைவர் தூண்டுதல் பெயரில் செய்தோம் என்று சொல்லிவிடுங்கள். உங்களை விட்டுவிடுகிறோம் என்று கூறி விசாரணையில் கடுமை காட்டி இருக்கின்றனர்.

சிறுவனை தவிர்த்து மற்றவர்களின் அலைபேசி எண்களை சைபர் கிரைம் கொண்டு ஆய்வு செய்து உள்ளனர். அனைவரின் வங்கி கணக்குகளின் பண பரிவர்த்தனை விபரங் களை பிரிண்ட் எடுத்து உள்ளனர். ஆகவே போலீஸ் விசாரணையை முழுமையான கண்ணோட்டத்தில் பார்க்காமல் தலித்துகள் தான் செய்து இருப்பார்கள் என்று முடிவுக்கு வந்து அணைத்து விபரங்களையும் சேகரித்து உள்ளனர்.

குறிப்பாக முத்துகிருஷ்ணன் தனியார் நிறுவனம் ஒன்றில் கடனை வசூலிக்கும் பணியில் ஈடுபட்டு உள்ளார். கடன் வாங்கியவர்கள் பணத்தை செலுத்தி உள்ளனர். இவர்கள் எல்லோரும் யார் பணம் கொடுத்து உங்களை இயக்குகிறார்களா? என்று கேட்டதற்கு அவர்கள் எல்லோரும் கடன் வாங்கியவர்கள் என்று கூறி ஆதாரங்களை கொடுத்து இருக்கிறார். போலீஸ் அமைதியாகி போனார்கள். அதே போன்று உமேஸ்வரனிடம் நீ 15,000 அனுப்பி இருக்கிறாயே அது யாருக்கு மலத்தை கலந்த ஆட்களுக்கு கூலியா என்று கேட்க, அது இன்சூரன்ஸ் பணம் என்று கூறி இருக்கிறார். அதற்கான ஆதாரம் கொடுக்க போலீஸ் கப்சிப்.

முன்னாள் பஞ்சாயத்து தலைவரோடு உங்களுக்கு ஏன் நெருக்கம்? அவர் வேறு சாதி காரர்தானே? எதற்கு அப்பா என்று சொல்லி அழைக்கிறீர்கள்? வயதில் பெரியவர். எந்த சாதி பாகுபாடும் காட்டாமல் பழகுவார்.ஆனால் தற்போதைய பஞ்சயாத்து தலைவர் மீது உங்களுக்கு என்ன கோபம்? அவர் எங்களுக்கு எதுவும் செய்யவில்லை. கடந்த 15 ஆகஸ்ட் 2022 அன்று கிராம சபை கூட்டத்தில் குடிநீர், சுடுகாட்டுக்கு பாதை போன்றவை கேட்ட போது எனக்கு நீங்கள் ஓட்டு போடவில்லை. அதனால் உங்களுக்கு எதுவும் செய்ய முடியாது என்றார். எங்களிடம் சாதி பாகுபாடுடன் நடந்து கொண்டார். அப்படி என்றால் முன்னாள் பஞ்சயாத்து தலைவரின் தூண்டுதல் பெயரில் தான் மலத்தை தண்ணீரில் கலந்தீர்கள்? அப்படித் தானே? எங்களை யாரும் மலத்தை கலக்க சொல்லவில்லை. நாங்களும் மலத்தை கலக்க வில்லை. மலத்தை கலந்தது யார் என்று தெரியாது. இதுதான் விசாரணையின் அடிப்படை கேள்விகள் மற்றும் பதில்கள்.

ஆனால் விசாரணையில் போலீஸ் நடந்து கொண்டதுதான் அத்துமீறல். காலை 9 மணி என்று சம்மன் கொடுத்து வெள்ளணூர் காவல் நிலையத்திற்கு அழைத்து உட்காரவைத்துவிட்டு இரவு 9 மணிக்கு விசாரணை ஆரம்பிப்பது. தனித்தனி விசாரணை. 6-10 போலீஸ் என்று சூழ்ந்து கொண்டு விசாரணை. வீடியோவை ஆன் செய்துவிட்டு விசாரிக்கும்போது மரியாதையாக பேசுவது. ஆப் செய்துவிட்டு சொல்லுடா நீதானே மலத்தை கலந்தாய். அதற்கான ஆதாரம் இருக்கிறது என்று மிரட்டுவது ஆபாசமாக பேசுவது போன்ற மீறலில் ஈடுபட்டு இருக்



கின்றனர். வீடியோ பதியும்போது 4 போலீஸ் பெண் போலீஸ் என்று இருப்பார்கள்.வீடியோ பதிவு செய்யாதபோது நிறைய போலீஸ் சூழ்ந்து கொண்டு மிரட்டி இருக்கின்றனர். உண்மையை சொன்னால் உனக்கு 2 லட்சம் பணமும் அரசு வேலையும் கிடைக்கும் என்று எல்லாம் கூறி இருக்கின்றனர். ஒரு இளைஞரை தலையில் தட்டி இருக்கின்றனர். விசாரணை இரவு 12.30 வரை சென்று இருக்கிறது. அவன் உண்மையை சொல்லிவிட்டான். நீதான் கலந்து இருக்கிறாய் என்று மாற்றி மாற்றி கேள்வி கேட்டு அழ வைத்து உள்ளனர்.

கடந்த 11 ஜனவரி அன்று நான் வெள்ளனூர் காவல் நிலையத்திற்கு நேரடியாக சென்றேன். விசாரணையின் முதன்மை அதிகாரி உள்ளிட்ட போலீசார் இருந்தனர்.அவரிடத்தில் எதற்கு இரவு 12 மணிவரை விசாரணை செய்திர்கள்? என்றேன். பதட்டமாக பேசிவிட்டு எழுந்து ஒரு அறைக்குள் சென்றுவிட்டார். இப்படி பதட்டத்துடன் இருக்கும் ஒரு அதிகாரி எப்படி புலன் ஆய்வு செய்ய முடியும்? எங்கள் மக்கள் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அல்ல. பாதிக்கப் பட்டவர்கள் / சாட்சிகள். ஆகவே அவர்களை கண்ணியத்துடன் நடத்த வேண்டும் என்றேன். அப்போது இரண்டு காவல் உயர் அதிகாரிகள், கைகளை பிடித்து கொண்டு சார் இதை பெரிது படுத்தாதீர்கள் என்றார்கள். அவர்களிடத்தில் நான், சம்மன் அனுப்பி விசாரிக்கும்போது சரியான நேரத்தில் விசாரிக்க வேண்டும். அதுதான் முறை. இப்படி மிரட்டினால் எப்படி உண்மை கிடைக்கும் என்று கேட்டதற்கு நாங்கள் மிரட்டவில்லை சார் என்றார்கள். அதன் பிறகு பாதிக்கப்பட்ட மக்களை கண்ணியமாக நடத்தினார்கள் என்று பாதிக்கப்பட்ட இளைஞர்கள் கூறினார்கள்.

அண்ணா நீங்கள் மட்டும் வரவில்லை என்றால் நாங்கள்தான் தண்ணீரில் மலத்தை கலந்தோம் என்று கூறி வழக்கினை முடித்து இருப்பார்கள் என்று கூறி அழுதார்கள்.

இரண்டு பெண் போலீசார் தலித் குடியிருப் புக்கு சென்று அங்கு உள்ள தலித் பெண் களிடத்தில், உங்கள் குல சாமி கோவிலுக்குதான் சென்று வருகிறோம். அங்கு சாமியாடி குற்ற வாளிகள் உங்கள் இடத்தில்தான் இருக்கிறார்கள் என்று சொன்னிச்சு.விபதியை எடுத்து கொண்டு உண்மையை சொல்லுங்கள் என்று கூறி இருக்கின்றனர். இதன் பெயர்தான் நேர்மையான வெளிப்படையான விசாரணையா?

விசாரிக்கப்பட்ட 15 வயது சிறுவனிடம் இரண்டு பெண் போலீஸ் அதிகாரிகளும் அன்புடன் நடந்து கொண்டனர்.பாராட்டு கிறேன். ஆனால் அந்த சிறுவனை எதற்கு விசாரிக்க வேண்டும்? அய்யப்பன் என்பவரின் கிணற்று அருகே 4 மாதங்களுக்கு முன்பு அந்த சிறுவனும் இரண்டு ஆதிக்க சாதி சிறுவர்களும் காலை கடன்கள் கழித்தார்கள் என்கிற குற்றசாட்டு. அது உண்மையும் அல்ல. இருப்பினும் அதற்கும் இந்த சம்பவத்திற்கும் என்ன சம்பந்தம்?

போலீசார் ஒன்றினை புரிந்து கொள்ள வேண்டும். தலித் தரப்பில் வாக்குமூலம் அளிக்க வந்தவர்கள் சாட்சிகள் / பாதிக்கப்பட்டவர்கள். ஆகவே அவர்கள் குற்றவாளிகள் அல்ல. குற்றம் சாட்டப்பட்ட ஒருவரையே அவருக்கு எதிராக சாட்சியம் அளிக்க வற்புறுத்த கூடாது என்கிற நிலையில் பாதிக்கப்பட்ட மற்றும் சாட்சிகளிடம் நீங்கள்தானே செய்தீர்கள் என்று கூறுவது உச்சகட்ட விசாரணை மீறலாகும். இதுபோன்ற கொடூர வன்கொடுமைக்கு இந்தியாவில் எங்கும் இப்படி யாரும் விசாரணை மேற்கொண்டது இல்லை.எந்த ஆதாரமும் இல்லாமல் இந்த குடி நீர் தொட்டி தலித் குடியிருப்பில் உள்ளது

ஆகவே இவர்கள்தான் செய்து இருக்க வேண்டும் என்று சந்தேகத்தின் பெயரிலும் போலிஸாருக்கு இருந்த அழுத்தம் மற்றும் சாதிய மனோபாவம் ஆகியவற்றின் அடிப்படையில் வழக்கினை எளிதாக முடித்துவிடலாம் என்று திட்டம்போட்டு இந்த விசாரணை நடந்தது.

உண்மையில் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி புதுக்கோட்டை டி.எஸ்.பி.அவர்தான் விசாரிக்க வேண்டும். ஆனால் டி.எஸ்.பி.யை விட அந்த சிறப்பு தனி படை குழு எப்படி விசாரிக்கலாம்? சாட்சிகளை /பாதிக்கப்பட்ட வர்களை தேச விரோதிகள் போன்று உட்கார வைத்து 6 - 10 போலீஸ் விசாரிப்பது நியாயமா? தனிப்படை விசாரணை குற்றவாளிகளுக்கா? பாதிக்கப்பட்டோருக்கா?

தலித் தரப்பிற்கு ஆதரவாக இருக்க கூடிய அந்த முன்னாள் பஞ்சயாத்து தலைவர் முக்குலத்தோர் சமுதாயம். மிகவும் கண்ணியத் துடன் அன்புடன் தலித் இளைஞர்களிடம் பழகி இருக்கிறார். அவர்களுக்கு நிறைய உதவி களும் செய்து இருக்கிறார். ஆனால் இவருக்கும் தற்போதைய பஞ்சயாத்து தலைவர் கணவருக்கும்





பிரச்னை.அதற்காக தலித் தரப்பில் மலத்தை கலக்க சொல்லி நீங்களே குடியுங்கள் என்று சொல்லுவாரா? தலித்துகளும் அதை குடித்து இருப்பார்களா? தற்போதைய பஞ்சயாத்து தலைவரின் சாதி மக்கள்தான் அங்கு பெரும் பான்மையாக இருக்கின்றனர். அதற்கு பயந்து கொண்டு போலீஸ் அச்சப்படுகிறதா என்று தெரியவில்லை.

சாமியாடி பெண் மற்றும் இரட்டை குவளை முறையை பயன்படுத்திய இரண்டு குற்றவாளி களும் கைது செய்யப்பட்டனர். தாசில்தார்தான் புகார்தாரர். ஆனால் அவரே அங்கு தீண்டாமை இல்லை என்று அறிக்கை கொடுக்கிறார்.என்ன முரண் இது?

அவர்கள் இருவரும் பிணை கேட்கும்போது அரசு தரப்பில் எதிர்ப்பு இல்லை.நீதி மன்றமும் இரண்டு வழக்கறிஞர்களை நியமித்து நேரடியாக விசாரணை செய்து அறிக்கை கொடுங்கள் என்று கேட்டதற்கு உப்பு சப்பு இல்லாத அறிக்கை அது.

பாதிக்கப்பட்ட தலித் மக்களையே குற்றவாளி களாக மாற்றி சமூகத்தில் அவர்களது பெயரை கெடுக்கும் சதி எங்களுக்குத் தெரியாதா? இது எவ்வளவு பெரிய அநீதி? இந்த அரசியல் சாதி சதியைத்தான் நாங்கள் உடைத்து இருக்கிறோம். இப்போது மட்டும் எப்படி பல கோணங்களில் விசாரிக்கப்படுகிறது. இது ஏன் ஆரம்பத்தில் செய்யப்படவில்லை. அப்பாவி மக்களிடம் இப்படி நடந்து கொள்ளுவது நியாயம் அல்ல. ஏற்கனவே அவமானப்பட்டு இருக்கும் அவர்களிடத்தில் கரிசனையும் நீதியின் மீதான நம்பிக்கையையும் ஏற்படுத்த வேண்டும்.

தீண்டாமை இல்லை என்றால் கடந்த *29 டிசம்பர் 2022* அன்று தலித் மக்கள் கோவிலுக்கு சென்றதற்காக கோவிலை கழுவி விட்டார்களே? அதன் பெயர் என்ன? அதற்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டதா?

அதே நேரத்தில் தற்போது விசாரணை பரந்துபட்ட அளவில் மற்ற கோணங்களையும் விசாரிப்பதாக அறியவருகிறேன்.வரவேற்கிறேன்.

விசாரணை என்பது சட்ட பூர்வமாக விஞ்ஞான பூர்வமாக இருக்க வேண்டும். எஸ்.சி.எஸ்.டி. வன்கொடுமை தடுப்பு சட்டம் பாதிக்கப்பட்டோருக்கும் அவர்களை சார்ந்து இருப்போருக்கும் சாட்சிகளுக்கும் அதிக உரிமைகளை வழங்கி இருக்கிறது. அவர்களை அச்சறுத்தல் செய்ய கூடாது. அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறது. குறிப்பாக வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் அத்தியாயம் 4(A) பாதிக்கப்பட் டோர் சாட்சிகள் உரிமைகளை விபரங்களை விசாரணை அதிகாரிகள் படிக்க வேண்டும். இந்த விசாரணை வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் நிலையிலிருந்து மேற்கொள்ளாமல் குற்ற வழக்கின் நிலையிலிருந்து மேற்கொள்ளுவது விசாரணை பிழை என்பேன்.

ஒரு குற்றத்தை குறித்து சந்தேகம் கொள்ளுவது வேறு. அதற்கு உரிய ஆதாரங்கள் சாட்சிகள் இருக்க வேண்டும். ஆனால் நீதான் செய்தாய் என்று வற்புறுத்தக் கூடாது.அப்படி செய்தால் அது நேர்மையான விசாரணை அல்ல. வெளிப்படையான விசாரணையும் அல்ல. இறுதியாக பாதிக்கப்பட்டோர் பக்கம் நிற்பதுதான் அறம். வழக்கினை திசை திருப்பி அவர்களை குற்றவாளிகள் கூண்டில் ஏற்றுவது மிகப்பெரிய பிழை.

இதனை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன்.

இறுதியாக பல்வேறு விதமான சாதி தீண்டாமை கொடுமைகள் இந்த கிராமத்தில் நடக்கின்றன. அதற்கு மாவட்ட ஆட்சி தலைவரும் எஸ்.பி.யும் நேரடி சாட்சிகள். இப்படி இருக்க அதன் பின்னணியில் விசாரணை செய்யாமல் இருக்க உங்களை எது தடுக்கிறது?

**எவிடென்ஸ் கதிர்**

*14 ஜனவரி 2023 அன்று எழுதியது.*

# தீண்டாமையும் இஸ்லாமும்



**இந்து** மதத்தில் தீண்டாமையானது பலமான இடம் பெற்றிருக்கிறது என்பதை எந்த இந்துவும் இதுவரை மறுக்கவே இல்லை. அப்படி மறுப்பவர்கள் தாங்கள் யோக்கியமான இந்துவா, இந்து சாஸ்திரங்களை புராணங்களை வேத சாஸ்திரங்கள் என்பவைகளை கடவுள் வாக்குகள். கடவுள் நடவடிக்கைகள் என்பவைகளை அப்படியே ஒப்புக்கொள்ளுபவர்களா அல்லது தங்களுக்கு இஷ்டமானபடி சமயத்துக்கு மக்களை ஏய்ப்பதற்கு ஆக பேசுபவர்களா? என்பதை முதலில் நாணயமாய் முடிவு செய்து கொள்ள வேண்டும். ஜாதி பேதங்களையும், தீண்டாமையையும் ஒழிக்க இந்து மதம் இடம் கொடுக்குமானால் இந்து மதத்துக்கும் இஸ்லாம் மதத்துக்கும் வேறு என்ன வித்தியாசம் இருக்கிறது என்று நாம் பந்தயம் கட்டி கேட்கின்றோம்.

மதத்தின் பேரால் வயிறு வளர்த்து மரியாதை சம்பாதித்துத் திரியும் சோம்பேறிகள், எல்லா மதங்களிலும் இருக்கலாம். அதனால் மத தத்துவ ஆதாரங்களின்படி தீண்டாமையும், ஜாதி வித்தியாசமும், பேதமும் இஸ்லாம் மதத்தில் இல்லை என்பதையும் இந்து மதத்தில் இருப்பதோடு அல்லாமல் அமுலிலும் மிக்க கொடுமையான தத்துவத்துடன் இருந்து வருகிறது என்பதையும் நாம் எங்கும் நிரூபிக்க முடியும்.

இந்த நிலைமையில் தீண்டாதார் என்று இழிவாய் கருதப்படும் மக்கள் ஜாதி பேதத்தையும் தீண்டாமையையும் முக்கியத்துவமாய்க் கொண்ட இந்து மதத்தைவிட்டு அதில்லாத மதத்துக்குப் போவதால் என்ன கெடுதியென்று கேட்கின்றோம்.

முஸ்லீம் மதத்துக்கு போனால் உயர்ந்த முஸ்லீம் பெண் கொடுப்பானா? என்று ஒரு தலைவர் கேட்கிறார். ஆனால் இந்து மதத்தில் இருந்தால் மாத்திரம் இவர் தன் பெண்ணைக் கொடுக்கக்கூடுமா என்று நாம் கேட்டால் அது அதிகப் பிரசங்கித்தனமாய்விடும் என்று அஞ்சுகிறோம்.

பெண்கொடுப்பது வாங்குவது கர்னாடகக் காலம் ஆகப்போகிறது. புதிய உலகில் அவனவனுக்குப் பிடித்தது தானாகவே ஜோடி சேரப்போகிறது. அப்படியே சில இடங்களில் சேர்ந்தும் வருகிறது.

ஆனால் ஒரு தீண்டாதவன் முஸ்லீமானாலும் ஒரு கூட்ட தீண்டாதவர்கள் முஸ்லீம்களானாலும் அவர்களைப் பொறுத்தவரை தீண்டாமை அந்த நிமிடமே ஒழிந்துவிடுகிறது மாத்திரம் நேரில் பிரத்தியக்ஷத்தில் பார்த்து வருகிறோம்.

*குடியரசு, துணை தலையங்கம், **9-8-1936***



vaigarai velicham official




# செய்தி ஊடகங்கள்

## உண்மையின் பக்கமா? அல்லது வெறுப்பின் தளமா?

மார்ச் மாதம் தொடர்ச்சி...

**பிப்ரவரி** *20, 2020 அன்று, ஹல்லா போல் (ஆஜ் தக்) இன் மற்றொரு எபிசோட் “ஜெஹர் போலேங்கே, ஜெஹர் சோலேங்கே! (அவர்கள் விஷம் பேசுவார்கள், விஷத்தைக் கலக்குவார்கள் / விஷம் செய்வார்கள்) என்ற தலைப்பில் ஒளிபரப்பப்பட்டது. விவாதத்தின் போது, குழு* (panelists) *உறுப்பினர்களில் ஒருவர் கூறினார்:*

*எதிர்ப்பாளர்கள் அல்காவ்-வாட், உஸ்கே பாத் கட்டர்-வாட், உஸ்கே பாத் ஆடங்க்-வாட், உஸ்கே பாத் இஸ்லாமிய ஸ்டேட் கி டிமாண்ட், யே பஹுத் ஹை அவுர் உஸ்கோ பெஹ்லி ஸ்டேஜ் பே ஹி ரோக் தேனா சாஹியே.*

*அதாவது, போராட்டக்காரர்கள் பிரிவினை வாதத்தை கோருவார்கள், அதன்பிறகு அடிப் படைவாதம், பின்னர் பயங்கரவாதம், அதன் பிறகு இஸ்லாமிய அரசு, இது மிகவும் தீவிரமான பிரச்சினை, இது முதல் கட்டத்திலேயே நிறுத்தப்பட வேண்டும்.*

*அக்பருதீன் ஓவைசி, பக்தியார் கில்ஜி அவுர் முகமது கோரி கோ அப்னா பாப் மாந்தே ஹைன். (அவர்கள் அக்பருதின் ஒவைசி, பக்தியார் கில்ஜி மற்றும் முகமது கோரி அவர்களின் தந்தைகளாக கருதப்படுகின்றனர்.)*

*போராட்டக்காரர்கள், குழு உறுப்பினர்களால் ஜிஹாதிகள் என்று மேலும் அழைக்கப்பட்டனர். இந்தக் கருத்துகள் எதையும் தொகுப்பாளர் கண்டிக்கவில்லை அல்லது எதிர்க்கவில்லை.*

*இந்த நிகழ்ச்சிகள்* CAA *எதிர்ப்பு ஆர்ப் பாட்டக்காரர்களால், குறிப்பாக ஷாஹீன் பாக் சதித்திட்டம் தீட்டப்பட்ட வன்முறைக்கு லேபிள்களை உருவாக்க முயற்சித்ததாகத் தெரிகிறது. இஸ்லாமிய தீவிரமயமாக்கலைப் பின்பற்றுவது முஸ்லிம்களை “மற்ற எதிரி” என்று சித்தரிப்பதை கூர்மைப்படுத்தவும், இஸ்லாத்தையே வன்முறையின் வெளிச்சத்தில் சித்தரிக்கவும் உதவியது.*

*ஆதாரமற்ற சதி கோட்பாடுகள் மூலம் போராட்டங்களை சட்டவிரோதமாக்குதல்*

*இந்த சேனல்கள், போராட்டங்களை உள்நாட்டு சதியாகவும், எதிர்க்கட்சிகள் அல்லது சர்வதேச சக்திகளால் திட்டமிட்ட வன்முறை முயற்சியாகவும் வரையறுத்தன. இதன் மூலம், போராட்டங்களை பிரதமர் மோடிக்கு எதிரான சதியாகவும்,* CAA-NRC *மூலம் அபாயங்களை ஏற்படுத்தும் முயற்சியாகவும் காட்டும் முயன்றுள்ளது.*

*2019 டிசம்பர் 19-ம் தேதி, ஹகீகத் க்யா ஹை (இந்தியா டிவி) என்ற நிகழ்ச்சி* Enemy for Modi *‘தங்கா பிரிகேட்’... டர் கே ஆகே ஸியாசத் ஹை” (மோடிக்கான எதிரி, கலவரக் குழு... பயத்திற்கு அப்பாற்பட்ட அரசியல்) என்ற தலைப்பில் ஒளிபரப்பப்பட்டது. மேலும் திரையில் தோன்றிய வாசகங்கள் நேரடியாக போராட்டங்களை மோடிக்கு எதிரானதாகக் காண்பிக்கப்பட்டது.*

*போராட்டங்களை “கலவரங்களுடன்”*




ஒப்பிடும் போக்கு இங்கேயும் தோன்றுகிறது:

மோடி கே சாரே துஷ்மன் ஆக்டிவ், சம்ஜோ நா பைஜான், (மோடியின் அனைத்து எதிரிகளும் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள், உங்களுக்குப் புரியவில்லையா, சகோதரரே.)

முகோதா முசல்மான் கா திமாக் மோடி விரோதி மோர்ச்சே கா, (முஸ்லிமின் முகமூடிக்குப் பின்னால் மோடி எதிர்ப்பு கூட்டணியின் மனம் உள்ளது.)

மோடி கே கிலாஃப் டங்கா ஒழுங்கமைக் கப்பட்டு நிதியுதவி அளிக்கப்பட்டது. (மோடிக்கு எதிரான கலவரங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு நிதியுதவி அளிக்கப்படுகின்றன.)

நிகழ்ச்சியின் தொகுப்பாளர் மேலும் கூறியதாவது:

All India Anti Modi மோர்ச்சா பனகர் தேஷ் பர் மே பிரதர்ஷன் சுரு.

(அவர்கள் அகில இந்திய மோடி எதிர்ப்பு பிரச்சாரத்தை உருவாக்கி நாடு முழுவதும் போராட்டங்களைத் தொடங்கியுள்ளனர்.)


ஹர் ராஜ்ய மெய் மோடி விரோதி தால் பிரதர்ஷன் மே ஷமில் கியா கயா. (ஒவ்வொரு மாநிலத்திலும், அவர்கள் மோடியின் எதிர்ப்பாளர் களின் கூட்டத்தை உள்ளடக்கியுள்ளனர்.)

மோடி விரோதி மோர்ச்சே மே முசல்மானோ கோ மோடி கா தர் திகாயா. (இந்த அணி வகுப்புகளில் அவர்கள் முஸ்லிம்களுக்கு மோடியின் பயத்தை காட்டினார்கள்.)

சி.ஏ.ஏ. கே பஹானே நரேந்திர மோடி பர் நிஷானா சாத் ரஹா ஹை (சிஏஏ-வை ஒரு சாக்காகப் பயன்படுத்தி, மோடியைச் சுற்றி ஒரு இலக்கு தொங்கவிடப்படுகிறது.)

முஸ்லீம்+அஃப்வா = அகில இந்திய மோடி எதிர்ப்பு இயக்கம் (முஸ்லிம்கள் + வதந்திகள் ஒரு அகில இந்திய மோடி எதிர்ப்பு இயக்கம்.)

Issme musalman ஹை, அவுர் பர்தே கே பீச்சே புரா சஞ்சலன் மோடி எதிர்ப்பு குட் கர் ரஹா ஹை. (முஸ்லிம்கள் இதில் ஈடுபட் டுள்ளனர், ஆனால் திரைக்குப் பின்னால், முழு நடவடிக்கையும் மோடி எதிர்ப்பு குழுக்களால் நடத்தப்படுகிறது.)




இந்த போராட்டங்கள் மோடிக்கு எதிரான வையாக, கிட்டத்தட்ட ஒருமையில், அடை யாளம் தெரியாத ஒரு குழுவுடன் இணைந்து செயல்படும் முஸ்லிம்கள் மீது பழி சுமத்தப் பட்டதைக் குறிக்கிறது. இந்தக் கதை, எதிர்க்கட்சி

பிரதமரை குறிவைக்கக்கூடிய ஒரு கருவியாக அவற்றை முன்னிறுத்தி, இதுதான் உண்மையான நோக்கம் என்று சுட்டிக்காட்டி, சிகிகி எதிர்ப்பு போராட்டங்களை இழிவுபடுத்தியது.

டிசம்பர் 25 அன்று டி.என்.ஏ. (ஜீ நியூஸ்) நிகழ்ச்சியில், “டுக்டே-டுக்டே கும்பல்” சமூக ஊடகங்கள் மூலம் வன்முறையை ஊக்குவிக்க முயற்சிப்பதாக தொகுப்பாளர் குற்றம் சாட்டி னார். இது CAA எதிர்ப்பு போராட்டக்காரர் களுடன் இணைந்து செயல்படுவதாகத் தெரிகிறது.

தொகுப்பாளர் பின்வருமாறு கூறினார்:

தேஷ் கா டுக்டே-டுக்டே கேங் ஏக் சௌ சட்டீஸ் கோடி பாரதியோன் கோ கும்ரா கர்னே கி பூரி கோஷிஷ் கர் ரஹே ஹை

(நம் நாட்டின் துக்டே-துக்டே கும்பல் 136 கோடி இந்தியர்களை முட்டாளாக்க முயல்கிறது.)

இஸ் கேங் கே சதாஸ்ய ஜோ சடகோன் பர் ஹி பாதர்பாஜி நஹி கர்தே, அப் வோ சோஷியல் மீடியா மே பி வஹி கர் ரஹே ஹை,

(முன்பு தெருவில் கல்லெறிபவர்களாக இருந்த இந்தக் கும்பலைச் சேர்ந்தவர்கள் இப்போது சமூக வலைதளங்களிலும் அதையே செய்கிறார்கள்.)

விரோத் பிரதர்ஷன் கே நாம் பர் தேஷ் மே ஹின்ஸா ஃபேலனே கி சஜிஷ் மே தோ தரிகே கே லோக் ஷாமில் ஹை. வோ லோக் ஜோ ஹாத்தோ மெய் லத்தி, பத்தர், பெட்ரோல் பாம் லே கர் சட்கோ மே புசோன் அவுர் ட்ரெயினன் மெய்ன் ஆக் லகாய், போலீஸ் பார் பெட்ரோல் பாம் ஃபெகி அவுர் ஷெஹர் அவுர் காவ்ன் கே லோகோ கோ பரேஷன் கியா... துஸ்ரே வோ லாக் தி, ஜோ ஹின்சா ஃபேலானே கே லியே பத்தர் கா நஹோசியல், வி சார் ஒக்சியல் அ நஹிஹால் aurmanchseh vicharik hinsa faelaneka kam karrahehai.

அதாவது வன்முறையை பரப்பும் சதியில் இரண்டு வகையினர் உள்ளனர். தெருக்களில் தடியடி, கற்கள், பெட்ரோல் குண்டுகளை ஏந்தி, பேருந்து, ரயில்களை கொளுத்துபவர்கள், போலீசார் மீது பெட்ரோல் குண்டுகளை வீசுபவர்கள், நகர, கிராம மக்களின் வாழ்க்கையை சீர்குலைப்பவர்களும் உள்ளனர். மற்ற வகை நபர்கள் கல்லால் அல்ல, சமூக வலைதளங்களிலும் வன்முறை எண்ணங்களை பரப்பி வன்முறையை பரப்புகின்றனர்.

துக்டே-துக்டே கும்பலை உருவாக்குபவர்கள் யார் என்பது குறித்து எந்த தகவலும் இல்லை.

ஜனவரி 3, 2020 அன்று, Republic Bharat பூச்தா ஹை பாரத் எபிசோடில், எதிர்க்கட்சிகள் CAA-வைச் சுற்றி அரசியல் விளையாடுவதை கடுமையாக விமர்சித்தனர். எதிர்க்கட்சிகள் வன்முறையை ஊக்குவிப்பதாக அது மறைமுகமாக கூறியது. இந்த எபிசோட் பின்வரும் தலைப்புகளுடன் ஓடியது:




CAA pe vipaksh ka jhoot benakab... jhoot ke dam par vipaksh ki rajneeti hinsa failayy to hisaab do.

(எதிர்க்கட்சிகள் CAA-வில் பொய் சொல் கின்றன. எதிர்க்கட்சிகளின் அரசியல் பொய்களை அடிப்படையாகக் கொண்டது. வன்முறை பரவலுக்கு பொறுப்பேற்க வேண்டும்.)

நிகழ்ச்சியின் போது, பாகிஸ்தானியர்கள் மற்றும் வங்கதேசத்தினர் இந்தக் கூற்றை ஆதரிக்க எந்த ஆதாரமும் இல்லாமல் வன்முறையைத் தூண்டுபவர்களில் ஒரு பகுதியாகக் குறிப்பிடப் பட்ட உரை, “பாகிஸ்தான் சே ஆயே தேஷ் ஜலானே வாலே... தில்லி ஹின்சா மே 15 வங்கதேசிகள்” என்று குறிப்பிட்டது. (பாகிஸ் தானில் இருந்து மக்கள் நாட்டை எரிக்க வந்துள்ளனர்... டெல்லி வன்முறையில் 15 வங்கதேசத்தினர் உள்ளனர்.)

ஜனவரி 4, 2020 அன்று, “CAA போராட்டங்கள் முஸ்லிம்களை தவறாக வழிநடத்தும் மோடி எதிர்ப்பு சதியா?” என்ற தலைப்பில் இந்தியா

அப் ஃப்ரண்ட் (டைம்ஸ் நவ்) எபிசோட் #CAAntiModi சதித்திட்டமா?" என்ற ஹேஷ்டேக் குடன் ஒளிபரப்பப்பட்டது.

அதில் ஒரு குழு உறுப்பினர் இப்படி கூறினார்:

"இது மீண்டும் இந்த CAA எதிர்ப்பு போராட்டக்காரர்கள் உண்மையில் என்ன என்பதை அம்பலப்படுத்துகிறது. மோடி வெறுப்பில் தர்க்கரீதியான, பகுத்தறிவற்ற, முற்றிலும் வெறித்தனமாகவும், வியக்கத்தக்க வகையில் பாசாங்குத்தனமாகவும் அவர்கள் மாறிவிட்டனர். நீங்கள் கூறியதுபோல் அவர்களுக்கும் தெரியும், மேலும் கடந்த ஒரு மாதமாக, 2012 மற்றும் 2015 இல் நாங்கள் நிரூபித்தபடி, காங்கிரசும் கம்யூனிஸ்டுகளும் அதே CAA-வை கோரினர், அதில் வங்கதேச சிறுபான்மையினர், குறிப்பாக முஸ்லிம் அல்லா தவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்பட வேண்டும். மேற்கு பாகிஸ்தானில் இருந்து லட்சக்கணக்கான இந்து அகதிகள் உயிருக்குப் போராடி காஷ்மீரில் குடியேறியபோது, 370வது பிரிவின் காரணமாக குடியுரிமை, வேலைகள், கண்ணியம், அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டபோது, 70 ஆண்டுகளாக அவர்கள் முற்றிலும் அமைதியாக இருந்தார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். CAA இந்திய முஸ்லிம்களைப் பற்றியது அல்ல என்பதை அவர்கள் அறிவார்கள். ஆனாலும், மேலாதிக்க வாதிகளின் இசைக்கு ஏற்பவும், 'லா இலாஹா இல்லல்லாஹ்' மற்றும் 'இந்துன் சே ஆசாதி' போன்ற மதவெறி கொண்ட கோஷங்களுக்கு ஏற்பவும், கடவுள் வழங்கிய 'ரிஷ்டா' என்ற கருத்தைத் தூண்டும் விதமாகவும் இந்தியா எரிய வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். பின்னர் பயந்து, அவர்கள் தங்களை வெளிப் படுத்திக் கொள்கிறார்கள், அவர்கள் தேசிய கீதத்தைப் பாடத் தொடங்குகிறார்கள்."

ஜனவரி 15, 2020 அன்று, "காங்கிரஸ்-பாகிஸ்தான் லாகூரில் CAA கூட்டத்தை நடத்து கின்றனவா?" என்ற தலைப்பிலும் #Lahore Conspiracy என்ற ஹேஷ்டேக்கிலும், The Debate (Republic TV) இன் ஒரு அத்தியாயம் ஒளிபரப் பப்பட்டது. திரையில் அச்சிடப்பட்ட உரை, "ISI வழியாக லாகூர் முதல் ஷாஹீன் பாக் வரை?".

நிகழ்ச்சியின் போது, தொகுப்பாளர் கூறினார்:

"இதைத் திட்டமிடும் ஆபத்தான மனதைப் புரிந்து கொள்ளுங்கள். அவர்கள் ஷாஹீன் பாக் நகரத்தை மாற்றுகிறார்கள். அவர்கள் ஷாஹீன் பாக் என்பதை ஒரு சொற்றொடராகக் கட்டமைக் கிறார்கள். சமீபத்தில் அவர்கள், கொல்கத்தாவின் ஷாஹீன் பாக், பெங்களூருவின் ஷாஹீன் பாக், புனேவின் ஷாஹீன் பாக் வேண்டும் என்று சொல்லத் தொடங்கியுள்ளதாக எனக்குச் சொல் லப்பட்டது. பாகிஸ்தானியர்களால் ஆதரிக்கப் படும் ஷாஹீன் பாக் அரசியல் வணிக மாதிரியை உருவாக்க அவர்கள் விரும்புகிறார்கள்."

"பின்னர் அவர்கள் புனே மே ஏக் ஷாஹீன் பாக் ஷுரூ ஹரோ, கொல்கத்தா மே ஷாஹீன் பாக் ஷுரூ கரோ என்று சொல்ல விரும்புகிறார்கள். அவுர் வஹான் பேய் சரே முசல்மானோ கோ புலாவ். அங்குள்ள அனைத்து முஸ்லிம்களையும் அழைத்து முஸ்லிம்களிடம் சொல்லுங்கள், அவர்களில் பலர் கல்வி கற்காமல் இருக்கலாம், அவர்களில் பலருக்கு உண்மைகள் தெரியாமல் இருக்கலாம், முஸ்லிம்களின் மனதில் பதிய வையுங்கள். முஸ்லிம்களிடம் உங்கள் குடியுரி மையை இழக்கப் போகிறீர்கள் என்று சொல்லுங்கள். அவர்களிடம் பொய் சொல்லுங்கள், அவர்களைப் பயன்படுத்துங்கள், வெளிப்படையாகப் பயன்படுத்துங்கள், அவர்களைத் தூண்டிவிடுங்கள், மக்களைப் பெறுங்கள், அவர்களுக்கு 500 ரூபாய் கொடுங்கள், தினமும் அவற்றைப் பெறுங்கள்... இது ஒரு பிரான்சைஸ் மாதிரி, இது ஒரு பிரான்சைஸ் மாதிரி பெண்களே, தாய்மார்களே, நாம் அனைவரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதை எதிர்த்துப் போராட வேண்டும்."

மோடி அரசாங்கத்தையும் நாட்டையும் சீர்குலைக்க எதிர்க்கட்சிகள், வெளிநாட்டு வீரர்கள் மற்றும் முஸ்லிம்களால் திட்டமிடப்பட்ட ஒரு பெரிய சதித்திட்டம் குறித்த இந்த மிகப்பெரிய கூற்றுக்கள், மறைமுகமான குற்றச்சாட்டுகளுக்கு அப்பால், எந்தவொரு புறநிலை தகவலாலும் ஆதரிக்கப்படவில்லை.

முஸ்லிம் போராட்டக்காரர்கள் சட்டம் பற்றி தவறாக அறியப்பட்டதாகவும், நாட்டின்


vaigarai velicham official




நலன்களுக்கு எதிராக செயல்படும் மக்களால் தவறாக வழிநடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது. இதில் குறிப்பிடத்தக்கது என்ன வென்றால், பொதுமக்களின் கருத்தை ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் கையாளும் வகையில், எந்தவொரு உறுதியான ஆதாரமும் இல்லாத நிலையில், போராட்டங்களை அவமதிக்கும் நோக்கில் சேனல்கள் ஆதாரமற்ற கருத்துக்களை ஒளிபரப்புவது போல் தோன்றியது.

### CAA எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை வலுக்கட்டாயமாக முடிக்க அழைப்பு

2020 ஜனவரி மாதம் நடுப்பகுதியில் இருந்து, ஷாஹீன் பாக் ஆர்ப்பாட்ட இடத்தை மூடுவதற் கான அழைப்புகள் சில நிகழ்ச்சிகளில் எழுந்தன. டெல்லியின் சரிதா விஹார் (Sarita Vihar) வாசிகள், அவர்கள் பகுதியிலுள்ள காவல் துறையின் தடுப்புகளை அகற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்தது. அந்த தடுப்புகள், அண்டை பகுதியில் நடைபெறும் போராட்டங்களின் காரணமாக அமைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது). இதைத் தொடர்ந்து, ஜனவரி 21, 2020 அன்று தி டிபேட் (The Debate) (Republic TV) நிகழ்ச்சியில், சரிதா விஹாருக்கும் ஷாஹீன் பாகுக்கும் இடையே இந்து-முஸ்லிம் மோதல் (Hindu-Muslim narrative) உருவாக்கப்பட்டது.

ஷாஹீன் பாகில் சரிதா விஹாரின் உதவி அழைப்பு கேட்கப்படவில்லையா? என்ற தலைப்பில், #IndiaWithSaritaVihar என்ற ஹேஷ்டேக் (hashtag) உடன் நிகழ்ச்சி ஒளிபரப் பப்பட்டது. திரையில் பேசப்பட்ட உரை:

"A call for help from the citizens." (பொது மக்களிடமிருந்து உதவிக்கான அழைப்பு.)

தொகுப்பாளர் (anchor) கூறியது:

"டெல்லியில் ஷாஹீன் பாகிற்கு அருகில் சரிதா விஹார் என்ற குடியிருப்பு பகுதி உள்ளது... சரிதா விஹாரில் உள்ள குழந்தைகள், ஷாஹீன் பாகில் நடைபெறும் முடிவற்ற வன்முறையான போராட்டங்களால் பயமுறுத்தப்பட்டு, துன்புறுத்தப்படுகிறார்கள்."

"தேசிய விரோதிகள் (anti-nationals) மற்றும் டுக்டே-டுக்டே காங் (tukde-tukde gang) உறுப் பினர்கள் சரிதா விஹார் மக்களை கேலி செய் கிறார்கள்... ஷாஹீன் பாக் என்பது (Shaheen Bagh) ஹிந்து எதிர்ப்பு (anti-Hindu), இந்திய எதிர்ப்பு (anti-India), பண வெறியோடு, வாய்ப்பு களைப் பயன்படுத்தும் முற்றிலும் அரசியல் சார்ந்த இயக்கத்தின் மையப் பகுதி."

"ஜின்னா ஆதரவு (pro-Jinnah) கருத்துகள் மிக மோசமாக வெளியிடப்படும் ஷாஹீன் பாக் ஏன் இப்போது பிரபலமாகிறது?"

"ஷாஹீன் பாகில் நடைபெறும் வன்முறைக்கு (violence) பொறுப்பு உடைய ஒரு குழு இருந்தால், நான் இன்றிரவு அனைத்து பார்வை யாளர்களையும் சரிதா விஹாருக்கு ஆதரவு அளிக்க அழைக்கிறேன். சரிதா விஹார் என்பது

இன்று டெல்லியிலும் நாடுமுழுவதும் தொடர்ந்து நடைபெறும் வன்முறையால் பாதிக்கப்படும் மக்களின் பிரதிநிதியாக (metaphor) உள்ளது. சரிதா விஹார் பகுதி முழுவதும் பயமுறுத்தப்படு கிறது. எல்லோருமே அந்த இடம் பிடிக்க பட்டுவிட்டதாகக் கூறுகிறார்கள். நீங்கள் ஒரு வார்த்தை பேசினால், சரிதா விஹாரில் உள்ள உங்கள் வீட்டிற்கு வந்து தாக்குவோம் என்று அவர்கள் சொல்கிறார்கள்."

தொகுப்பாளர் கூறும் முறையானது, ஷாஹீன் பாகையும் சரிதா விஹாரையும் (Shaheen Bagh vs Sarita Vihar) எதிராக நிறுத்தும் விதமாக அமைந்தது. இது இரண்டு சமூகங்களை நேரடியாக எதிராக நிறுத்தவில்லை என்றாலும், "பயமுறுத்தப்படுதல்" "பிடிக்கப்படுதல்" போன்ற சொற்கள் ஊடாக ஒரு தீவிரச் செய்தியை பரப்ப முற்பட்டது.

*2020* பிப்ரவரி மாத நடுப்பகுதியில், போராட்டக்காரர்களை எதிர்க்க வன்முறை தேவையானது என்று நேரடியாகச் சொல்லப்பட வில்லை. ஆனால், "அரசாங்கத்திற்கு எதிராக வன்முறை ஏற்படாமல் தடுப்பதற்காக" என்ற விளக்கத்துடன், போராட்டக்காரர்களை எதிர்த்து வன்முறையை பயன்படுத்த வேண்டும் என்ற அசைவு உணர்த்தப்பட்டது.

பிப்ரவரி *17, 2020* (February 17, 2020) அன்று பூச்சா ஹை பாரத் (Poochta Hai Bharat) (Republic Bharat) நிகழ்ச்சியில் தொகுப்பாளர் கூறியது:

"Is desh ki janta Shaheen Bagh ke khilaf hai... dharna band karna padega warna ukhaade jaoge... jab tak dange na ho, ye log chup nahi honge, ham dange nahin hone denge."

"இந்த நாட்டின் மக்கள் ஷாஹீன் பாகிற்கு (Shaheen Bagh) எதிராக இருக்கிறார்கள்... ஆர்ப்பாட்டத்தை நிறுத்த வேண்டும், இல்லையெனில் அவர்கள் விரட்டப்படுவார்கள்... கலவரம் நிகழும் வரை அவர்கள் அமைதியாக இருக்க மாட்டார்கள். ஆனால், நாம் கலவரத்தை ஏற்படவிட மாட்டோம்."

பூச்சா ஹை பாரத் (Poochta Hai Bharat) நிகழ்ச்சியின் மற்றொரு எபிசோட் "ஷாஹீன் பாக் காரணமாக இந்துக்கள் தூண்டப்படுகிறார்களா? - (Shaheen Bagh ke Bahane Hinduon ko Bhadkaya Ja Raha Hai) என்ற தலைப்பில் *2020* பிப்ரவரி *20* அன்று ஒளிபரப்பப்பட்டது. இது வடகிழக்கு டெல்லியில் கலவரம் வெடித்ததற்கு மூன்று நாட்களுக்கு முன்பு ஒளிபரப்பப்பட்டது. அப்போது தொகுப்பாளர் கூறியதாவது:

"Kya nagrikta kanoon ke naam danga karaane ki dhamki?"

*(குடியுரிமை சட்டத்தின் பெயரில் கலவரம் ஏற்படுத்தும் அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறதா?)*

"Shaheen Bagh ke bahaane Hinduon ko dhamkaya jaa raha hai?"

*(ஷாஹீன் பாக் காரணமாக இந்துக்கள் அச்சுறுத்தப்படுகிறார்களா?)*

"Musalmano ko bhadkaakar desh ke batware ki saazish?"

*(முஸ்லிம்களை தூண்டி நாட்டை பிளவுபடுத்தும் சதித் திட்டம் அமைக்கப்படுகிறதா?)*

"Kya voh Shaheen Bagh ke aad men dange ki dukaan kholanaa chahte?"




*(ஷாஹீன் பாகின் பெயரில் கலவரங்களை ஏற்படுத்த திட்டமிடுகிறார்களா?)*

"In logon ne pahale sadak jam karaayaa, sarkar aur Supreme Court ke khilaf khada honaa sikhaya, vahi log ab dange kaa plan taiyaar kar rahe hain."

*(இவர்கள் முதலில் சாலை மறியலை (road block) ஏற்படுத்தினார்கள். பிறகு அரசு மற்றும் உச்சநீதிமன்றத்திற்கு (Supreme Court) எதிராக போராட ஊக்குவித்தார்கள். இப்போது அதே மக்கள் கலவரத்திற்கான திட்டத்தை தயாரிக் கிறார்கள்.)*

நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பேச்சாளர்

களும் (panelists) தீவிரமான கருத்துக்களை வெளியிட்டனர்:

"Musalman hi dange karte hai desh me."

*(இந்த நாட்டில் கலவரங்களை ஏற்படுத்து கிறவர்கள் முஸ்லிம்கள் மட்டுமே.)*

"Dangaiyon ko goli marni chahiye."

*(கலவரக்காரர்களை சுட்டுக்கொல்ல வேண்டும்.)*

இந்த வன்முறைக்கு தூண்டும் அழைப்புகள் மில்லியன் கணக்கான பார்வையாளர்களுக்கு ஒளிபரப்பப்பட்டன. இவ்வாறு வன்முறையை தூண்டும் கருத்துக்கள் ஒளிபரப்பப்பட்டபோதும், அதற்கு எந்த வித தடையும் அல்லது நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதன் மூலம், அவை மௌன ஒப்புதல் (tacit credence) பெற்றதாக கருதப்படும் நிலை ஏற்பட்டது.

**வெளியான குற்றச்சாட்டுகள் மற்றும் ஊடக விசாரணைகள்**

நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், வடகிழக்கு டெல்லி கலவரத்திற்குப் பின்னரும் ஊடகங்களில் பரவிய செய்திகளைப் பற்றிய முக்கியமான விஷயங்களை முன் வைத்தன.

குற்றச்சாட்டுகளுக்குள்ளான இருவர் டெல்லி உயர்நீதிமன்றத்தில் (Delhi High Court) மனு தாக்கல் செய்தனர். அவர்களுக்கு எதிரான குற்றச் சாட்டுகள் ஊடகங்களுக்கு வெளியாவதை தடுக்க காவல் துறைக்கு உத்தரவு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. மேலும், ஊடகங்கள், நடுவர் இல்லாத ஒரு சூழலில் "மெய்நிகர் விசாரணை" (virtual trials) நடத்து வதாக குற்றம் சாட்டப்பட்டது.

தேவங்கனா கலிதா தனது மனுவில், டெல்லி காவல்துறையின் குற்றப்பிரிவு குறிப்பிட்ட சில தகவல்களை ஊடகங்களுக்கு கசியவிட்டதாகக் குற்றம் சாட்டினார்.

அவரது மனுவின் முக்கிய அம்சம்,

ஜூன் 2, 2020 தேதியிட்ட "சுருக்கமான குறிப்பு" (Debrief Note) இலிருந்து உருவானது, இது டெல்லி காவல்துறையால் பல்வேறு ஊடக நிறுவனங்களுக்கு வரைவு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது என்று கண்டறியப் பட்டது. தேவங்கனா கலிதா எதிர் டெல்லி காவல்துறை வழக்கில் நீதிமன்றம் தனது உத்தரவில் சர்ச்சைக்கு விரிவான பின்னணியை வழங்குகிறது.




அந்தக் குறிப்பில், அன்றைய தினம் இரண்டு டெல்லி வன்முறை வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்போவதாக காவல்துறை பகிர்ந்து கொண்டது. அதில் ஒன்று "ஜாஃப்ராபாத் கலவர வழக்கு FIR எண். 50/2020". அந்தக் குறிப்பில் பிஞ்ச்ரா டோட் குழுவைச் சேர்ந்த இரண்டு பெண்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் அவர்கள் ஜாஃப்ராபாத் மெட்ரோ நிலையம் அருகே கலவரத்தை ஏற்படுத்த சதித்திட்டம் தீட்டுவதில் தீவிரமாக ஈடுபட்டதாகவும், ஒரு பெரிய சதித்திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

நியாயமான விசாரணைக்கான கலிதாவின் உரிமை பாரபட்சமானது என்றும், நிரபராதி என்று கருதப்படும் அவரது உரிமை பறிக்கப் பட்டதாகவும் அவரது வழக்கறிஞர் வாதிட்டார். குறிப்பில் உள்ள குற்றச்சாட்டுகளை நம்பி பல அச்சு, தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடக ஆதாரங்கள் அவரை குற்றவாளி என்று முத்திரை குத்தியதாக அவர் வாதிட்டார்.

2020 ஜூன் 10-ஆம் தேதி, டெல்லி போலீசாருக்கு, மனுதாரரின் (தேவங்கனா கலிதா) அல்லது மற்ற குற்றச்சாட்டுக்குரியவர்களின் மீதான குற்றச்சாட்டுகள் மற்றும் சாட்சியங்கள் தொடர்பான எந்தவொரு அறிக்கைகளையும், தகவல்களையும் ஊடகங்கள் அல்லது சமூக ஊடகங்களில் பரப்புவதை தடைசெய்யுமாறு

உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. குறிப்பாக, இந்த தடை தேவங்கனா கலிதாவை மட்டும் அல்லாமல் “மற்ற குற்றச் சாட்டுக்குரியவர் களையும்“ பொருந்தும் வகையில் விதிக்கப் பட்டது.

இந்த ஆரம்ப நிலையில், குற்றப்பிரிவு துணை கமிஷனர் (DCP) மூலம் பரவிய தகவல்களின் மூலத்தை வெளிக்கொணருமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

குற்றப்பிரிவு சார்ந்த துணை கமிஷனர் (DCP) குற்றப்பிரிவு அதிகாரிகளால், மூன்றாம் தரப்பினருக்கு, பத்திரிகையாளர்களுக்கு அல்லது சமூக ஊடகங்களில் எவ்வித தகவல் பரவி யுள்ளதா என்பதைக் குறித்துப் தனிப்பட்ட அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டது.

பின்னர், டெல்லி போலீசார், அவர்களின் தகவல் குறிப்புகளை வெளியிட்டு பரப்பியதைக் கோர்ட்டில் ஒப்புக்கொண்டனர். தேவங்கனா வழக்கில் 2020 ஜூலை 27 அன்று இறுதித் தீர்ப்பளிக்கும்போது, உயர்நீதிமன்றம் “குறிப்பை” ரத்து செய்ய மறுத்தது. மேலும், குற்றச் சாட்டுக்குரியவர்களின் அல்லது சாட்சிகளின் பெயர்களைக் குறிப்பிடும் எந்தவொரு தகவலையும் குற்றச்சாட்டுகள் உரிய முறையில் உருவாக்கப்பட்டு விசாரணை தொடங்கும்வரை வெளியிடக்கூடாது என்று டெல்லி போலீசாருக்கு உத்தரவிட்டது.

டெல்லி போலீசார், தேவங்கனா மற்றும் அவரது சகாக்கள், டெல்லி போலீசாரின் குற்றச்சாட்டுகளை மறுப்பதற்காக ஒரு ஊடக பிரச்சாரத்தில் ஈடுபட்டதாக வாதிட்டனர். இதனால், போலீசார் தங்களின் நற்பெயரைக் காப்பாற்றவும், பொது நம்பிக்கையை நிலை நிறுத்தவும் அந்த குறிப்புகளை வெளியிட்டதாக கூறினர்.

இதற்கு பதிலளித்த நீதிமன்றம், ஒரு குற்றச் சாட்டுக்குரியவர் தம்மேலுள்ள குற்றச்சாட்டு களை எதிர்க்கும் உரிமை மற்றும் விசாரணை தொடங்குவதற்கு முன் குற்றச்சாட்டுக்குரியவரை பொது மக்களிடத்தில் குற்றவாளியாக அறிவிப் பதற்கிடையிலான வித்தியாசத்தை விளக்கி, பின்வருமாறு தெரிவித்தது:

“மனுதாரரின் ஆதரவாளர்கள் சமூக ஊடகங்களில் அவர் அநியாயமாக துன்புறுத்தப் படுகிறார், அல்லது அவரது விடுதலையை வலியுறுத்துகிறார்கள் என்பதினால், விசாரணை அமைப்புகள் அவரை குற்றவாளி என்று பிரகடனம் செய்வது பொருந்தாது. குற்றச் சாட்டுக்குரியவர் குற்றமற்றவர் என்று ஒரு கருத்தை உருவாக்க முயற்சிப்பது மற்றும் ஒரு அரசு அமைப்பு அதற்கு எதிர்மாறான கருத்தை உருவாக்க முயற்சிப்பதற்கிடையே அடிப்படை வேறுபாடு உள்ளது. குற்றச்சாட்டுக்குரியவர் குற்றமற்றவர் என்று ஒரு கருத்தை பரப்புவது, குற்றச்சாட்டுக்குரியவர் குற்றவாளி என்று பிரகடனம் செய்வதை விடுவிக்காது. ஒரு குற்றச்சாட்டுக்குறியவரை குற்றவாளியாக ஊடகங்களில் அறிவிப்பது, குற்றச்சாட்டுக் குறியவருக்கான குற்றமற்றதற்கான முன் நிலையை அழித்து விடும். ஆதரவாளர்கள் குற்றச்சாட்டுக்குரியவர் குற்றமற்றவர் என்று கூறுகிறார்கள் என்பதற்காக ஊடகங்களில் அவரை குற்றவாளியாக அறிவிப்பது ஏற்றுக் கொள்ள முடியாது.”

**நீதிமன்றம் மேலும் பின்வருமாறு தெரிவித்தது:**

“குற்றச்சாட்டுக்குரியவர் குற்றவாளி என்று பொது மக்களின் கருத்தை பாதிக்க முனையும் வகையில் தேர்ந்தெடுத்த தகவல்களை வெளி யிடுவது; குறித்த நபரின் நற்பெயரை அல்லது நம்பிக்கையை களங்கப்படுத்துவதற்காக மின்னணு ஊடகங்கள் அல்லது பிற ஊடகங் களைப் பயன்படுத்தி பிரச்சாரம் நடத்துவது; மற்றும் விசாரணை ஆரம்ப நிலையில் இருக்கும் போதே, “வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன”, “குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்” என்று சந்தேகத்திற்குரிய கூற்றுகளை முன் வைப்பது, இவை அனைத்தும் அனுமதிக்க முடியாதவை. இது நீதிமுறைகளை அநீதி செய்யக்கூடும் என்பதற்காக மட்டுமல்ல; குறித்த நபரின் மரியாதையைக் குலைக்கும் அல்லது அவரை அநியாயமான அவமானத் திற்குள்ளாக்கும் விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பதற்காகவும் இது தடைசெய்யப்பட வேண்டும்.”

இதுபோலவே, அசீப் தன்ஹா என்பவரும் Asif Iqbal Tanha v. State of NCT of Delhi வழக்கில், அவர் வடகிழக்கு டெல்லியில் நடந்த சமுதாய


vaigarai velicham official




கலவரங்களை ஏற்படுத்தியதாக ஒப்புக்கொண்டதாக கூறும் பல செய்தி அறிக்கைகள் குறித்து மனமுடைந்ததாக தெரிவித்தார். இந்த மனு டெல்லி உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

முடிவாக

மேற்கண்ட பகுப்பாய்வு, இந்த அறிக்கையில் ஆய்வு செய்யப்பட்ட காலக்கட்டத்தில், இந்த நிகழ்ச்சிகள்/சேனல்கள் பரப்பிய மீண்டும் மீண்டும் தோன்றும் கருத்துக்களை வெளிக்கொணருகிறது மற்றும் உறுதிப்படுத்துகிறது. சிஏஏ-எதிர்ப்பு போராட்டக்காரர்கள், குறிப்பாக ஷாகீன் பாக் போராட்டக்காரர்கள், சதியாளர்கள் மற்றும் வன்முறையாளர்களாக சித்தரிக்கப்படும் ஒருங்கிணைந்த கருப்பொருள்களின் வழியாக முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பு தொடர்ந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஊடகங்களின் பார்வைகள், மற்றும் ஆதாரமற்ற ஒப்பீடுகள் போன்றவை இந்தக் கூற்றுகளுக்கு அடிப்படையாக இருந்துள்ளன.

சிஏஏ-எதிர்ப்பு போராட்டக்காரர்கள் மீது, முதலில் ஒரு குழுவாகவும் பின்னர் தனிநபர்களாகவும் குற்றச்சாட்டுகள் விதிக்கப்பட்டுள்ளன. இவை மிகவும் பொறுப்பில்லாததாக இருக்கின்றன, குறிப்பாக குற்றச்சாட்டுகள் உருவாக்கப்பட்டதும் பரவியதுமான அளவைக் கருத்தில் கொள்கையில். இதன் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, டெல்லி உயர்நீதிமன்றம் "ஊடக விசாரணை" நடத்துவதை தடைசெய்யும் வகையில் கடுமையான எச்சரிக்கை வழங்கியது. மேலும், விசாரணை தொடர்பான ஆவணங்கள் அல்லது தகவல்களை ஊடகங்களுக்கு கசியவிடுவதை போலீசார் உடனடியாக நிறுத்த உத்தரவிட்டது.

நிகழ்ச்சிகளில் தொகுப்பாளர்கள் (anchors) மற்றும் பேச்சாளர்கள் பயன்படுத்திய மொழி, மற்றும் காட்சிப் பொருட்களின் வடிவமைப்பு, விரோதமான செய்தியையும் மற்றும் பரபரப்பை தூண்டும் பாணியையும் வெளிப்படுத்துகின்றன.

மேற்கண்ட பகுப்பாய்வு, "பயங்கரவாதி", "ஜிகாதி", "தங்காயி" (கலவரக்காரர்கள்), "துரோகி" போன்ற அவமானகரமான சொற்களை முஸ்லிம்களை வன்முறையுடன் மற்றும் தேசத்துக்கு எதிரானவர்களாக சித்தரிக்க பயன்படுத்தியதை விளக்குகிறது. பேச்சாளர்கள் முஸ்லிம்களைப் பற்றி பேசும்போது "அவர்கள்", "இந்த மக்கள்" என்ற வார்த்தைகளை பயன்படுத்தி, முஸ்லிம்களை ஒரே மதக் குழுவாக சித்தரித்து, அவர்கள் இந்துக்களுக்கு அல்லது நாட்டிற்கு எதிராக சதி செய்து வருகின்றனர் என்பதைக் குறிக்க முயன்றுள்ளனர்.

முஸ்லிம் சமூகத்திற்கான இந்த விரோத அணுகுமுறையை ஒட்டியவாறு, சிஏஏ-எதிர்ப்பு போராட்டம் மற்றும் போராட்டக்காரர்கள் வன்முறையுடன் தொடர்புடையவர்கள், சதிக்காரர்கள் என்பதைக் குறிக்கும் சொற்கள் உருவாக்கப்பட்டு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுள்ளன.

"டுக்கடே-டுக்கடே காங்க்", "தங்கா பிரிகேட்" போன்ற சொற்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். இதுபோன்ற அவமானகரமான சொற்கள் அல்லது வன்முறையை தூண்டும் கூற்றுகளை பேச்சாளர்கள் தொடர்ந்து பயன்படுத்தினார்கள். ஆனால், தொகுப்பாளர்கள் எவரும் இதைச் சீராய்ந்து எதிர்க்கவோ அல்லது தவறான தகவல்களை மறுக்கவோ தயாராக இல்லை.

நிகழ்ச்சிகளின் தலைப்புகள், விளக்க உரைகள் மற்றும் ஹாஷ்டேக்கள் ஆகியவை மேற்கண்ட கருத்துக்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தன. பல நிகழ்ச்சித் தலைப்புகள் கேள்வி வடிவில் sensationalist (பரபரப்பை தூண்டும்) பாணியில் அமைந்திருந்தன. தலைப்புகளின் உள்ளடக்கம் மற்றும் விளக்க உரைகள் பார்வையாளர்களை தூண்டும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தன. ஹாஷ்டேக்-களும் அதேபோல் பரபரப்பை தூண்டும், அவமானகரமான மற்றும் தவறான

தகவல்களைக் கொண்டிருந்தன. இவை அனைத்தும் சமூக ஊடகங்களில் தொடர்ந்து பரவ வகை செய்தன.

மேலும், இந்த நிகழ்ச்சிகள்/சேனல்கள் தூண்டிய வன்முறை, சதி, இஸ்லாமிய தீவிரவாதம் ஆகியவற்றுக்கும் போராட்ட இயக்கத்தின் பொது நிலைப்பாட்டுக்கும் இடையே அடிப்படை முரண்பாடு இருந்தது. போராட்டக்காரர்கள் சிஏஏ-என்ஆர்சி அவர்கள் குடியுரிமை உரிமைகளை பாதுகாப்பற்றதாக்கும் என்பதற்காக எதிர்ப்பதாக இருந்ததை ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. போராட்டத்தின் பல்வேறு அம்சங்களை சீராய்ந்து விமர்சிக்க இந்த சேனல்கள் தயாராக இல்லை.

இந்த நிகழ்ச்சிகள்/சேனல்கள் பரப்பிய வெறுப்பு செய்தி மற்றும் மொழிநடையின் ஒருமுகமான ஒற்றுமை கவனிக்கத்தக்கது. சிஏஏ-எதிர்ப்பு போராட்டங்களைப் பற்றிய அச்சங்களை உருவாக்கி, முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக வெறுப்பை தூண்டி, போராட்டங்களை வன்முறையால் முடிவுக்கு கொண்டுவருதல் நியாயமானதாக தோன்றும் சூழ்நிலையை உருவாக்குதல், இவை மிகப்பெரிய விளைவுகளாக நோக்கப்பட்டுள்ளன.

வரலாற்று ரீதியாக, வன்முறை என்பது பெரும் அளவிலான போராட்டங்கள் மற்றும் மக்கள் இயக்கங்களில் தொடர்ந்து பாதிக்கக் கூடிய அம்சமாக இருந்து வருகிறது. இதைப் பற்றிய மீடியா செய்தியறிக்கை மிகக் கவனமாக, பொறுப்புடன் மேலும் நுணுக்கமான முறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். போலீசாரின் அதிகப்படியான மற்றும் வன்முறையான நடவடிக்கைகள் உட்பட, வன்முறைக்கு காரணமான அனைத்து அம்சங்களையும் வெளிக்கொணரும் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு இது நடத்தப்பட வேண்டும்.

ஒரு பரபரப்பு தூண்டும் உரைநடை (sensationalist discourse), சட்டப்பூர்வமான மற்றும் நியாயமான அம்சங்களை அவதூறாக சித்தரிப்பதன் மூலம், மீடியா சேனல்கள் சம்பவத்தில் பகுதியாளராக மாறுவதை ஏற்படுத்துகிறது. இது சுயநீதிமன்ற செயல்பாடுகளுக்கு (vigilantism) வழிவகுக்கவோ அல்லது அதிக அதிகாரம் கொண்ட மாநில நடவடிக்கைகளுக்கான (high-handed state responses) அனுமதியை ஏற்படுத்தவோ வழிவகுக்கிறது.




எந்த வகையான வன்முறையை பற்றிய செய்திகளை வெளிப்படுத்தும் போது, சரியான பத்திரிகைத் தரங்கள் (journalistic standards) மற்றும் நிபுணத்துவம் (rigor) மற்றும் பொறுப்புடைமை (objectivity) ஆகியவற்றை முற்றிலும் பின்பற்றுவது மிக மிக முக்கியம். குறிப்பாக, ஒரு குறிப்பிட்ட குழுவை அல்லது சமூகத்தை குற்றம் சாட்டும் அல்லது அவமதிக்கும் பொதுவான தீர்ப்புகளை (generalized judgments) வழங்குவதை தவிர்க்க செய்தி நிறுவனங்கள் கவனமாக செயல்பட வேண்டும்.

தற்போதுள்ள ஒழுங்குமுறை வடிவமைப்புகள் (regulatory frameworks) ஒரு கட்டுப்பாட்டாக செயல்படுவதில் ஏற்பட்டுள்ள தோல்வி, இந்தப் பகுப்பாய்வின் மூலம் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

*இன்ஷா அல்லாஹ் தொடரும்.!*

Source: UNCERTAIN JUSTICE a Citizens Committee Report on the North East Delhi Violence 2020

*தமிழில்:* Adv. Jasmine Fathima



## இனியும் இதுபோல்

# நீதித்துறை எழுமா?

**8-4-2025 உச்ச நீதித்துறை என்னை ஆளும் பாசிஸ்ட்டுகள்,முழுமையாகவிழுங்கிடவில்லை என்பதைப் பிரகடனப்படுத்திய நாள்.**

*அன்றுதான், தமிழக ஆளுநர், ஆர்.என்.ரவியை சாட்டையால் அடித்த நாள்.*

*ஆமாம், தமிழக சட்டசபை யாத்தப் பல சட்டங்களை, தேவையில்லாமல், கால தாமதப் படுத்திக் கொண்டிருந்தார்.*

*10 சட்டங்கள் ஆளுநரால் ஒருமுறை திருப்பி அனுப்பப்பட்டு, மீண்டும் சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள்.*

*நடப்பிலிருக்கும் சட்டங்கள்படி, மீண்டும் நிறைவேற்றப்படும் சட்டங்களுக்கு - கவர்னர் உடனேயே அதற்கு ஒப்புதல் வழங்கிட வேண்டும்.*

*ஆனால், பாசிச பாரதீய ஜனதா கட்சியின் எடுபிடியாக இயங்கும் ஆளுநர் அதைச் செய்யவில்லை.*

*மூன்று சட்டங்களை அவர், குடியரசு தலைவரின் பார்வைக்கு அனுப்பி இருக்கின்றார். குடியரசு தலைவரின் அலுவலகமும் பாசிசத்தின் இன்னொரு பாசறை. அங்கே அந்தச் சட்டங்கள், தூங்கிக் கொண்டிருக்கின்றன. அல்லது குப்பைத் தொட்டி அலுவலகத்திற்கு அனுப்பப்பட வுள்ளது.*

*இந்நிலையில்தான் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கொன்றை தொடுத்தார்.*

*இந்த வழக்கில்தான் 8-4-2025 அன்று தீர்ப்பு வந்தது. அந்தத் தீர்ப்பில் ஆளுநருக்கு சம்மட்டி அடி.*

*1) கவர்னரின் நடவடிக்கைகள் யதார்த்த மானவை அல்ல.*

*2) அவர் வேண்டுமென்றே சட்டங்களை முடக்கிப் போடுகின்றார் கவர்னர்.*

*3) அவருடைய அதிகார வரம்பை கடந்து செயல்பட்டுள்ளார்.*

*4) சட்டத்தின் பார்வையில், அவர் தன் கடமையை நிறைவேற்றுபவராக இல்லை.*

*ஆகவே, அவர் ஒப்புதல் அளிக்காத சட்டங் களுக்கு ஒப்புதல் அளித்ததாக இந்த நீதிமன்றம் பிரகடனப்படுத்துகின்றது. அதேபோல் குடியரசு தலைவர் வீட்டிலும், இருக்கும் சட்டங்களுக்கும் ஒப்புதல் அளித்ததாகக் கருதப்படும்.*

*இதில் பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்கள்* Vice Chanceller *நியமிக்கும் சட்டம் ஒன்று இதில் மாநில அரசின் பரிந்துரையை கருத்தில்கொண்டு ஓர் துணை ஆளுநரை பல்கலைக்கழகத்திற்கு மாநில கவர்னர் நியமிப்பார்.*

*ஆர்.என்.ரவி இதில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தன்னைச் சார்ந்த சங்கிகளை நியமிக்கத் தொடங்கினார். அதனால் துணை பல்கலைக்ழக வேந்தர்களை மாநில அரசே நியமிக்கும் என்றொரு சட்டத்தை தமிழக சட்டசபை இயற்றியது. அதை முதலில் கிடப்பில் போட்டார். இரண்டாவது முறை சட்டமன்றம் சட்டத்தை நிறைவேற்றியது. அதை வேண்டுமென்றே குடியரசு தலைவரின்*

பார்வைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கே அது மருந்துக் கட்டிலில் தூங்கிக் கொண்டிருக்கின்றது.

உச்ச நீதிமன்றத்தின் 8-4-2025 தீர்ப்பில் இது சட்டமாக்கப்பட்டு விட்டது. இது குடியரசு தலைவருக்கே உச்ச நீதிமன்றம் கொடுத்த அடி அத்தோடு உச்ச நீதிமன்றத்தின் மேலாண்மையையும் நிலை நிறுத்தியது.

ஆகவே, இந்தத் தீர்ப்பு இரண்டு தனி மனிதர்களின் அதிகாரத்திற்கு அடிதந்து அணைக் கட்டி இருக்கின்றது. அவர்கள் இரண்டு மூன்று மாதங்களுக்கு மேல் எந்தச் சட்டத்தையும் கையில் வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. இந்தத் தீர்ப்பிற்கு பின் முடியாது.

இங்கே குறிப்பிட வேண்டியது, என்னவெனில் இந்தத் தீர்ப்பில் நீதிபதிகள், கொட்டி இருக்கும் சொற்கள் அவற்றின் வழி தந்திருக்கும் அடி, இவற்றை படிக்கின்ற ஆர்.என்.ரவி தன் பதவியை இராஜினாமா செய்திருக்க வேண்டும். தி இந்து இதழ் இதனையும் பொட்டில் அறைந்தார்போல் சுட்டிக்காட்டியுள்ளது.

இப்படி,

"In normal circumstances such a severe reprimand would have resulted in the resignation of the person in house conduct was under scrivtiny"

- The Hindu Edit, 10-4-2025

அதாவது, சாதார சூழ்நிலைகளில் இதுபோன்ற சுடுசொற்கள் சம்மந்தப்பட்டவரின் இராஜினாமாவில் சூழ்ந்திருக்கும்.

அதாவது, ஆர்.என்.ரவி இன்னும் பதவியிலும் அதனோடு பிணைந்த சுகங்களோடும் சொக்கிக் கிடப்பதை விட்டுவிட்டு, மூட்டையைக் கட்டிக் கொண்டு வீட்டுக்குப் போய்விட வேண்டும். ஆனால் சங்கிகளில் இதை எதிர்பார்த்திட இயலாது.

**தவறுவோருக்குத் தண்டனை**

நமது நீதிமன்றங்கள் எப்போதாவதுதான் இப்படி விழித்துக்கொள்கின்றன. ஆனால், இதிலும் என்னவெனில், தவறை கடுமையாகச் சுட்டிக்காட்டியபோதும், தண்டனைகளைப்





பிரகடனப்படுத்தவில்லை. இதனால் சூடு, சொரணையற்ற ஆன்.வி.க்கள் பதவியில் ஒட்டிக் கொள்கின்றார்கள். மீண்டும் அதே தவறுகளைச் செய்கின்றார்கள்.

எத்தனை முறை கடும் சொற்களால் சாடினாலும், சொரணை வருவதில்லை. அதனால் தண்டனையை உடன் சேர்த்து பிரகடனப் படுத்திட வேண்டும். இதைச் செய்யாத வரை இதுபோன்ற தவறுகள், தொடர் கதையாகவே தொடருகின்றன.

**கேரளம் - அகில இந்தியத் தாக்கம்**

8-4-2025இல் உச்ச நீதிமன்றம், பிரகடனப் படுத்திய அந்தத் தீர்ப்பு 2025இல் இந்தியாவில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உண்மையைச் சொன்னால் இந்தத் தாக்கம் உடனேயே செயலில் வந்துவிட்டது எனலாம். பி.ஜே.பி. ஆட்சி நடத்தாத மாநிலங்களில் இது உடனடி நிவாரணங்களை வழங்கிடும். இந்த மாநிலங்களில் கவர்னர்கள் சர்வாதிகரிகளாக அட்டூழியம் பண்ணுகிறார்கள்.

இந்தத் தீர்ப்பு வெளியே வந்தபோது, கேரள மாநிலம், அதன் ஆளுநருக்கு எதிராக ஓர் வழக்கை உச்ச நீதிமன்றத்தில் நடத்திக்கொண்டிருந்தார்கள். அது தலைமை நீதிபதி அவர்களின் நீதிமன்றத்தில் வந்தது.

அவர்கள் உடனேயே இந்த நீதிமன்றத்திற்கு தமிழக அரசு நடத்திய - இருவர் நீதிமன்றத்திற்கு மாற்றிடக் கோரினார்கள். அங்குள்ள கவர்னர் இராஜேந்தி விஸ்வநாத் அத்லிஹர் பதற்றத்தில் உச்ச நீதிமன்றம் கொண்டுசெல்ல உள்ளார்கள். The Hindu, 10-4-25


vaigarai velicham official

**கர்நாடக மாநிலம்**

இங்கேயும் ஆட்டங்கள், அங்குள்ள கவர்னர் தாவார்சந்த் திலாவட் என்பவரால் சிக்கலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. கர்நாடகா மாநிலமும் உச்ச நீதிமன்றத்தை அணுகுவதாக உள்ளது.

ஆக இனி பாசிச பாரதீய ஜனதா கட்சியில் ஆளுநர் அமர்க்களம் எடுபடாது.

உச்ச நீதிமன்றம் ஆளுநர், குடியரசுத் தலைவர் ஆகியோரும் சட்டத்திற்கு முன்னால் சமம். All are equal before law என்பதை நிலைநிறுத்தும் வகையில், தண்டனைகளைப் பிறப்பிக்க வேண்டும்.

**உத்திரப் பிரதேசத்தில்**

கஷ்மீரை அடுத்து அதிகமாக முஸ்லிம்களைக் கொடுமைப்படுத்துவதும், கொலை செய்யப் படுவதும், உத்திரப்பிரதேசத்தில்தான்.

இதனை பலமுறை உச்ச நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ள தமிழக மக்களின் வெற்றி முரசாக வெளிவந்த 8-4-2025 தீர்ப்பிற்குப் பின் அதே கிழமையில், நமது உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா அவர்கள், உத்திரப்பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கு அழிந்துபோய்விட்டது என அறிவித்திருக்கின்றார்.

சாதாரணமாக "Civil" சிவில் குற்றங்கள்கூட அங்கே மிகப்பெரிய கிரிமினல் குற்றங்களாக உருவெடுக்கின்றன எனக் கூறியுள்ளார். Law and Order சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டால் அதுவும், மாநில அரசின் தூண்டுதலால், அந்த அரசைக் கலைக்க குடியரசு தலைவருக்குப் பரிந்துரைக்கலாம். இதைச் செய்தால் ஆட்சியும், அதிகாரமும் பறிபோய்விடுமோ எனப் பேதலிப் பவர்கள் ஆட்சியாளர்கள் - குடியரசு தலைவருக்கு ஒரு கெடுவை விதித்து, இத்தனை நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்கலாம். இவற்றையெல்லாம் செய்தால்தான் உச்ச நீதிமன்றத்தின் கர்சனைகள் எடுபடும். பாதிக்கப்பட்ட சிறுபான்மையினருக்கு நிவாரணங்களை அள்ளித்தரும்.

ஆனால், இங்கேயும், வருத்தந்தான் தெரிவிக் கப்படுகின்றதே அல்லாமல் நிவாரணங்கள் இல்லை. வஃக்ப் சொத்துக்கள் அபகரிக்கப் படுவதற்கு எதிராகப் போராடிட போகின்ற வர்கள் இரண்டு லட்சம் ரூபாய்க்கு பாண்ட் எழுதி தந்திட வேண்டுமாம்.

**நாடாளுமன்ற தாக்குதல்**

டிசம்பர்-13, 2001இல் நமது நாடாளு மன்றத்தைத் தாக்கும் முயற்சி ஒன்று இடம் பெற்றது. அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டன எப்படி உள்ளிருப்பு வேலையோ அதேபோல் நமது நாடாளுமன்றத் தாக்குதலும் ஓர் உள்ளிருப்பு வேலைதான்.

முக்கியக் குற்றவாளிகள், கஷ்மீரின் Special task force (STE) சிறப்புப் படை, டெல்லியின் துணை கமிஷனர், ACP ரேபிர் சிங்.

ஆனால், இவர்களையெல்லாம் விட்டுவிட்டு, டெல்லி பல்கலைக்கழகத்தின் அரபு பேராசிரியர் SAR ஜீலானி அவர்களைத்தான் முதன்மைப் படுத்தினார்கள். அவர்தான் நாடாளுமன்ற தாக்குதலின் மூளை என்றார்கள். சொல் லொண்ணா சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப் பட்டார். அவருடைய குடும்பம் சீரழிக்கப் பட்டது. மனைவி மானபங்கப்படுத்தப்பட்டார்.

டெல்லி பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், நீதியைத் தேடுவதில் நாட்டம் கொண்டவர்கள். அனைவரும் SAR ஜீலானி அவர்களுக்கு நீதி தேடினார்கள்.

இரண்டு முன்னாள் மத்திய சட்ட அமைச் சர்கள், ஷாந்தி பூஷன் அவர்களும், இராம்ஜெத் மலானி அவர்களும் SAR ஜீலானிக்காக வாதாடினார்கள்.

இறுதியில் SAR - ஜீலானி குற்றமற்றவர் என நீதிமன்றத்தால் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஆனால், அவர் மீது பொய்யாக வழக்கை ஜோடித்தார்கள். வாழ்க்கை அழித்தவர்கள் மீது எந்த நடவடிக்கையுமில்லை. இதனை மூத்த வழக்கறிஞர், டெல்லியின் ACP துணை காவல் துறை ஆணையர் ரேபிர் சிங்கையும், நீதிபதி திங்காராவையும் சிறையில் தள்ளாதவரை இந்தியாவில் நீதி நிலைக்காது என்றார்.

இப்படி எத்தனையோ பொய் வழக்குகள் முஸ்லிம்கள் மீது கடந்த 75 ஆண்டுகளாக, 25 ஆண்டுகள், 30 ஆண்டுகள் என சிறையிலிருந்த பின் குற்றமற்றவர்கள் என வெளியே விடப் பட்டார்கள். ஆனால் பொய் வழக்கை, ஜோடித் தவர்கள் மீது எந்தத் தண்டனையும் இல்லை. இந்த நிலை நீக்கப்பட வேண்டும். பொய் வழக்குகளைப் புனைபவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.




# ஸாலிஹீன் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை முதலீட்டாளர்கள் சந்திப்பு மற்றும் பங்கு சான்றிதழ் வழங்கும் விழா

**பேராசிரியர் காதர் மொகிதீன்,**

**உச்சநீதி மன்ற முன்னாள் நீதியரசர் இப்ராஹிம் கலிஃபுல்லாஹ் ஆகியோர் பங்கேற்பு**

**ஸாலிஹீன்** மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை முதலீட்டாளர்கள் சந்திப்பு மற்றும் பங்கு சான்றிதழ் வழங்கும் விழா சென்னை புதுக்கல்லூரியில் (26-02-2025) புதன்கிழமை மாலை நடைபெற்றது. விழாவிற்கு நிறுவனத்தின் தலைவர் எம். அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது. விழாவிற்கு வந்த அனைவரையும் திட்ட மேலாளர் அல் அமீன் வரவேற்று பேசினார்.

விழாவில் திட்டத்தின் இணை செயலாளர் மில்லத் முஹம்மது இஸ்மாயில், நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆடிட்டர் ரஜாக், எம்.ஏ.எம். நிஜாம், ரஹ்மத்துல்லாஹ், அகமது ஷாகீர் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

நிறுவனத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் அபுல் ஹசன், திட்ட செயல் அலுவலர் ஒய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி மெஹ்ராஜ், திட்ட இயக்குனர் முகம்மது பாரூக் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

திட்டத்தின் தலைவர் எம். அப்துல் ரஹ்மான் இந்த அறக்கட்டளையின் செயல்பாடுகள் குறித்து பேசியதாவது: இதுவரை கடந்த வந்த பாதை மற்றும் நடக்க இருக்கும் பணிகள் குறித்து விளக்கி உரையாற்றினார்.




இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி நீதியரசர் எப்.எம். இப்ராஹிம் கலிஃபுல்லாஹ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதிகள் நீதியரசர்கள் கே.என். பாஷா, ஜி.எம். அக்பர் அலி, சென்னை பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் சாதிக் அவர்கள், ரிசர்வ் வங்கி முன்னாள் இயக்குநர் ஆர். சதக்கத் துல்லாஹ் அவர்கள், எம்.ஐ.இ.டி கல்லூரி நிறுவனர் முகம்மது யூனுஸ், சென்னை புதுக்




கல்லூரி செயலாளர் இலியாஸ் சேட் உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

பி.எஸ்.ஏ அஹமது புகாரி, திரைப்பட இயக்குனர் அமீர், புரொபஷனல் கூரியர் அகமது மீரான், சீனாதானா சையது அப்துல் காதர், ஷிஃபா ஷாபி, தென்காசி மாவட்ட செயலாளர் செய்யது பட்டாணி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில செயலாளர் காயல் மகபூப், தமுமுக பொதுச் செயலாளர் ஹாஜா கனி, மஜக பொதுச் செயலாளர் ஹாரூன் ரஷீத், ஐஎன்டிஜே துணை தலைவர் முனீர், வெல்ஃபேர் பார்ட்டி மாநில தலைவர் அப்துல் ரஹ்மான், விடுதலை சிறுத்தைகள் கட்சி - இஸ்லாமிய ஜனநாயக பேரவை மாநில செயலாளர் அப்துல் ரஹ்மான், கேஎம்சிசி சம்சுதீன், முகம்மது உப்பா உள்ளிட்ட ஸாலிஹீன் அறக்கட்டளை உறுப்பினர்கள், மருத்துவக்கல்லூரி முதலீட்டாளர்கள், பல்வேறு சமுதாய இயக்கங்களின் நிர்வாகிகள், உலமா பெருமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

ஸாலிஹீன் கல்வி வளாகத்தில் அமைய உள்ள கேரள தாருல் ஹுதா இஸ்லாமிய பல்கலைக் கழகத்தின் தமிழ்நாடு கிளைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், நாகூர் எம்.எஃப், ரவூப் அவர்களுடைய நிறுவனத்துடன் திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் அமைப்பதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. விருத்தாசலம் நாகூர் கனி அவர்களுடன் முதியோர் பராமரிப்பு இல்லம் அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

ரேடியன்ட் ஐஏஎஸ் அகாடமி இயக்குனர் ரஹ்மத்துல்லாஹ் ஆக்கத்தில் போட்டி தேர்வுகளில் பங்கேற்கும் பங்கேற்பவர்கள் பயனடையும் வகையில் உருவாக்கப்பட்ட இலவச கையேடு சமுதாய தலைவர் முனீருல் மில்லத் பேராசிரியர் காதர் மொகிதீன் அவர்களால் வெளியிடப்பட்டது. நிகழ்ச்சியில் பங்குதாரர்களுக்கு பங்கு சான்றிதழ் வழங்கப் பட்டது. இறுதியில் அறக்கட்டளையின் நிர்வாக குழு உறுப்பினர் ஆடுதுறை ஏ.எம். ஷாஜஹான் நன்றியுரை ஆற்றினார்.





# ஏப்ரல்; கூரியூர் ஜின்னா ஷஹீத் மாதம்

## நிறவெறியும், தீண்டாமையும்

**உலக அரங்கில் இரண்டு பெரும் அநீதிகள். இரண்டும் மனித இனத்திற்கு எதிரானவை.**

1. **நிறவெறிக் கொள்கை - Apartheid**
2. **தீண்டாமை - Untouchability**

ஒன்று மேலை நாடுகளில் வலம் வந்துகொண்டிருக்கும் நிறவெறிக் கொள்கை. இது மனித இனத்தை கறுப்பன், வெள்ளையன் எனப் பிரிப்பது.

வெள்ளையர்களே வாழவும், ஆளவும் பிறந்தவர்கள். கறுப்பர்கள் அவர்களுக்கு அடிமைப்பட்டு குற்றேவல் செய்திடப் பிறந்த வர்கள்.

கறுப்பர்களை வெள்ளையர் எப்படி வேண்டும் என்றாலும் பயன்படுத்தலாம் கறுப்பு நிறம் கொண்ட ஆண்களை மட்டுமல்ல, பெண்களையும் அப்படியே பயன்படுத்தலாம். அவர்களைத் தங்கள் பண்ணைகளில் விலங்கு களைப் போல் வேலை வாங்கலாம். பண்ணையில் உழைக்கும் ஆடு, மாடுகள், இதர மிருகங்கள் இவற் றிற்கும் அந்தப் பண்ணைகளில் உழைக்கும் கறுப்பர்களுக்கும், எந்த வேறுபாடுமில்லை. பண்ணையை விற்பனை செய்யும்போது அதில் வேலை செய்யும் கறுப்பு நிறங்கொண்ட மனிதர்களையும் அதைப் போலவே விற்பனை செய்யலாம்.

நாகரிகம் அடைந்துவிட்டதாகக் கருதப்படும், இந்தக் காலக்கட்டத்தில்கூட, கறுப்பு நிறம் கொண்டவர்களை தெரு வீதிகளில், பட்டப்பகலில் சுட்டுக் கொலை செய்யும் கொடுமைகள் ஏராளம். ஏராளம்! மொத்தத்தில் அவர்கள் மனிதப் பிறவிகள் என்றே மதிக்கப்படுவதில்லை.

இந்த நிறவெறியைச் செயல்படுத்திடுபவர்கள் சில தனி மனிதர்கள் என்றில்லை. இந்த ஈனச் செயல்களை நிறைவேற்றிட அமைப்புகள், இயக்கங்கள், கட்சிகள், உளவு நிறுவனங்கள், கொலை கும்பல்கள் என்றெல்லாம் பலப்பல ஏற்பாடுகள்.

அத்தனை ஏற்பாடுகளும் நிரந்தரமானவை, ஆளும் வர்க்கத்தின் ஆசியோடு செயல்படுபவை. இது போன்றதொரு அமைப்புதான் ஐரோப்பிய நாடுகளில் இயங்கும் Ku klux klan - கூ கிளக்ஸ் - கிளான். இதனை சுருக்கமாக KKK என அழைப் பார்கள். வெள்ளை நிறத்தவர்களே உயர்ந்தவர்கள். ஏனைய நிறத்தவர்களெல்லாம், அவர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கவும், சேவகம் செய்யவும் பிறந்தவர்கள். இதை மறுத்தால் அழிக்கப்பட வேண்டியவர்கள். இதனை White supermacist, far right hate' group என வெள்ளையர்களின் மேலாண்மையை நிலைநிறுத்தும், வெறுப்புணர்வை வளர்க்கும் கும்பல் என்பார்கள்.

இந்தக் கும்பல் டிசம்பர் *24,1865* முதலே இயங்கி வருகின்றது. இது நிறவெறிக் கொலைகளை செய்யும் அமைப்பு.

**இரண்டாவது தீண்டாமைக் கொடுமைகள் அல்லது தீண்டாமை - Untouchability.**



இது இந்தியாவில் மட்டுமே தலைவிரித்தாடும் கொடுமை. மனித இனத்தை ஐந்து வர்ணங்களாகப் பிரித்து வைத்து அடிமைப்படுத்துவது ஒரு ஜாதி, உயர்ந்த ஜாதி மற்றவர் களுக்கு கீழே! - அதில் இறுதி ஜாதியாக வரும் மக்கள் - அடிமைகள் - கொத்தடிமைகள். மனிதர்களாக மதிக்கப்பட வேண்டியவர்களல்ல. மேலே நாம் நிறவெறிக்கு எடுத்து

காட்டிய அத்தனை அநீதிகளுக்கும், கொடூரங் களுக்கும் உள்ளாக்கப்பட வேண்டியவர்கள். இதற்கு உலக அரங்கில், இன்னொரு பெயர் உண்டு, அது Hidden Aparthied பிரகடனப்படுத்தப்படாத நிறவெறி. ஆனால் உண்மையில் இது மேலை நாடுகளிலிருக்கும் நிறவெறியைவிட கொடுமை யானது. குரூரமானது, பழைமையானது, புரையோடிப்போனது.

இந்த வெறிக்கு எதிராகப் போராடியவர்களைக் கொலை செய்திட கறுப்பர்கள் சிலரை கருத்து வேறுபாடுகள் என்ற பெயரில் பயன்படுத்தி இருக்கின்றன. இது விதிவிலக்கு.

ஆனால், இங்கே, இந்த வருணாசிரத்தைச் செயல்படுத்திட இந்தத் தீண்டத்தகாத மக்களை பலவேறு வடிவங்களில் பயன்படுத்தி வருகின்றார்கள்.



நிறவெறியில் எந்தக் கட்டத்திலும், தாழ்வாகக் கருதப்படும் பெண்களின் மார்பகத்திற்கு வரி (முலை வரி) விரித்ததாக வரலாறு சொல்ல வில்லை. இங்கே ஒடுக்கப்பட்ட மக்களின் மார்பகத்தின் வளர்ச்சிக்குத் தகுந்தபடி வரி ஏற்றப்படும் நிலை இருந்திருக்கின்றது.

பெண்கள் மேலாடை அணிந்தால் குரூரமான தண்டனைகள் இருந்திருக்கின்றன.

இப்போதும், இரட்டைக் குவளை முறை, தனி இருக்கை, நடமாடக்கூடாத தெருக்கள் என்றெல்லாம், தீண்டாமை தலைவிரித்தாடு கின்றது.

இந்தத் தீண்டாமையைச் செயல்படுத்திட பல்வேறு அமைப்புகள், இயக்கங்கள், கொலை வெறிக் கும்பல்கள், செயல்பட்டுக் கொண்டிருக் கின்றன. அத்தனையும் ஆளும் வர்க்கத்தின் ஆசியோடு அன்று முதல் இன்றுவரை இயங்குகின்றன.

மேலை நாடுகளில் ஒரு கூ கிளக்ஸ் கிளான் - என்றால் இங்கே சங்கப்பரிவாரம் என்ற பெரிய குடையின் கீழ் பல நூறு அமைப்புகள்.

வெள்ளை நிற வெறியர்கள் தங்கள் வரலாற்றில்

இந்த இருதரப்பாரும், அதாவது நிறவெறிக் கொள்கைக்கு ஆட்பட்டு, அடிமைப்பட்டு நிற்கும் கறுப்பு நிற மக்களும்,

தீண்டாமைக் கொடுமைக்கு ஆட்பட்டு நிற்கும் மக்களும்,

தங்களுக்காகப் போராடுபவர்கள் பலரை, அதிலும் வீரியமுடன் போராடும், பல தளகர்த்தர் களைப் பெற்றே இருக்கின்றார்கள்.

அவர்களில் பெரும்பாலோர் இந்த ஆதிக்க வெறி கும்பல்களால் கொலை செய்யப்பட்டே இருக்கின்றார்கள்.

அப்படி கொலை செய்யப்பட்ட தலீத் போராளிகளுள் ஒருவரே கூரியூர் முஹம்மத் அலீ ஜின்னா ஷஹீத் அவர்கள்.

இதனை இப்படியும் சொல்லலாம். இறைவனின் பாதையில் தன்னை தந்தவர்.

**இப்படிக் கொலை செய்யப்பட்டவர்கள்...**

*1. கறுப்பர்களுக்கு உரிமை கொடுக்க வேண்டும் என வாதிட்டதற்காகக் கொலை செய்யப்பட்டவர் 16ஆவது அமெரிக்க குடியரசு தலைவர் ஆபிரகாம் லிங்கன். இவரை 1865, ஏப்ரல் 15-இல் கொலை செய்தார்கள்.*

*2.* அதே காரணத்திற்காகக் கொலை செய்யப் பட்டவர் *35*ஆவது அமெரிக்க குடியரசுத் தலைவர் ஜான் எஃப் கென்னடி. *1963* நவம்பர் *22*-இல் கொலை செய்யப்பட்டார்.


*3.* அமெரிக்காவின் நிறவெறிக் கொள்கைக்கு எதிராக இஸ்லாத்தை முன் வைத்துப் போராடிய தற்காக *1965*இல் சில கறுப்பர்களை ஏவியே கொலை செய்தார்கள். மால்கம்-X என்ற மாலிக் அல் ஷாபாஷ் ஷஹீத் *(1965)* கொலையை ஏற்பாடு செய்தவர்கள் Ku klux klan.

*4.* நிறைவெறிக்கெதிராக மனித உரிமைக் காகப் போராடியவர் மார்டின் லூதர் கிங் ஜீனியர். இவர் ஒரு கிறிஸ்தவர். கறுப்பர்களின் உரிமைக் காகப் போராடியதால் வெள்ளைக் கிறிஸ்தவத் தீவிரவாதிகளால் *1968*, ஏப்ரல் *4*-ல் கொலை செய்யப்பட்டார்.


*5.* இதே வரிசையில் இடம் பெறுகின்றார் கூரியூர் ஜின்னா ஷஹீத். தீண்டத்தகாத மக்களுக் காக இஸ்லாத்தை முன்வைத்துப் போராடியவர். *1995*, ஏப்ரல் *24*-இல் கொலை செய்யப்பட்டார்.

இவரைப்போல் இன்னும் பல ஷஹீத்கள் தென்னகத்தில் உண்டு. அவர்கள் இன்னும் வாய்வழி வரலாறாகவே வாழுகின்றனர். அவர்களின் வாழ்க்கையையும், தியாகங்களையும் வரலாற்றுத் தடங்களில் பதிக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இன்ஷாஅல்லாஹ், இப்போது இந்த வரலாறு நமக்கு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என வருகின்றது.

ஏப்ரல் மாதத்தில் கூரியூர் ஜின்னா அவர்கள் ஷஹீதாக்கப்பட்டதால் இந்த மாதம் முழுவதும் அவர் மாதம் என அறிவித்துள்ளது தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் மற்றும் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம். இதன்மூலம் இஸ்லாமே தீர்வு என்பதை மக்கள் முன் வைக்கின்றது.




நூல் : கூரியூர் முஹம்மத் அலீ ஜின்னா ஷஹீத்,
ஆசிரியர் : மு. குலாம் முஹம்மத்
பக்கம் : *84*
விலை : ரூ. *60* /-
வெளியீடு : வேர்கள் பதிப்பகம், *52/1*, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - *600 001*
தொடர்புக்கு : *81481 29887, 90420 39594*


தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887

அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத். தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்திரமாக மீட்டார்.

"ஹஜ்" பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தோடு.

*16* ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். லட்சக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, "கேசியஸ் கிளே" என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குழு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்-X அவர்களை பிப்ரவரி *21-1965* இல் கொலை செய்து விட்டார்கள்.

# தீண்டாமை ஒழிய ஒரே வழி...




**உயர்திரு. ஜான்சன்,** விடுதலை சிறுத்தைகள் கட்சி, 15-10-2023 தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் நடத்திய நூல் வெளியீட்டு விழாவில் நடத்திய உரை

தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் சார்பில் நடத்தும் "ஒரே நொடியில் திண்டாமை ஒழிந்து விடும்" என்ற நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சி களக்காட்டில், 2வது முறை நடத்தப்படுகிறது என்று நினைக் கிறேன். இந்த நூல் 2வது நூலாக இருக்கும் என நினைக்கிறேன்.

கடந்த ஒரு 3, 4 மாதங்களுக்கு முன்பு அருணா திருமண மண்டபத்தில் ஒரு நூல் வெளி யிடப்பட்டது. அதிலும் பேசுவதற்கு எனக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்படட்து. அதுவும் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரட்ஸ் சார்பாகவே நடத்தப்பட்டது.

இது மீண்டும், களக்காட்டில் தாழ்த்தப் பட்டோர் சீர்திருத்த சங்கத்தில் நடைபெறும் இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவரையும் விடுதலைகள் சிறுத்தைகள் சார்பாக வருக வருக என்று வரவேற்றுக்கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியிலும் வாழ்த்துரை வழங்க எனக்கு வாய்ப்பு தந்த தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்-க்கு எனது சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஒரு நொடியில் தீண்டாமை ஒழிந்து விடும்" என்ற இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு தலைமை பொறுப்பேற்று நடத்திவிட்டு அமர்ந்து இருக்கும் தாருஸ் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்-ன் நெல்லை, குமரி மாவட்ட தலைவர் "முஹம்மது அலி ஜின்னா" அவர்களே! வரவேற் புரை ஆற்றி அமர்ந்திருக்கும் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்-ன் மதுரை மாவட்டச் செயலாளர் ரபீக் அவர்களே, ஏற்புரை ஆற்ற அமர்ந்திருக்கும் இந்த நூலின் ஆசிரியர், மூத்த வழக்கறிஞர் திராவிட தமிழர் கட்சியின் தலைவர் ஐயா பெரும் மதிப்பிற்குரிய பெ.சின்னசாமி அவர்களே!

நூலை வெளியிட்டு இந்த நூலிற்கும், களக்காட்டிற்கும் இந்த களக்காடு வாழ் மக்களுக்கும் பெருமை சேர்க்க வருகைதந்து காத்து இருக்கின்ற எங்கள் களக்காடு வட்டார தாழ்த்தப்பட்ட, சீர்திருத்த சங்கத்தினுடைய செயல்மிக்க தலைவர் மதிப்பிற்குரிய தோழர் மா.பெ.சுகுமாரன் அவர்களே! மற்றும் நன்றியுரை ஆற்ற வந்திருக்கின்ற ஐக்கிய முஸ்லிம் ஜமாஅத் தலைவரும், என் அன்பு நண்பருமான சித்தீக் அஸீசு ரஹ்மான் அவர்களே! மற்றும் இந்த சங்கத்தின் மூத்த நிர்வாகி அன்பு அண்ணன் நடராஜ் அவர்களே! சமுதாயத்தின் சமூக நீதிக்கான வழக்கறிஞர் அப்துல் ரஹ்மான் அவர்களே! அன்பு சகோதரி பாத்திமா அவர்களே! அன்பு தம்பி செல்வம் அவர்களே! அன்பிற்கினிய அண்ணன் காளிதாசன் அவர்களே! மற்றும் அன்பு நண்பர்களே! உங்கள் அனை வருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விட்டு,

"ஒரு நொடியில் தீண்டாமை ஒழிந்து விடும்" என்கிற தலைப்பை பார்க்கும்போது, அல்லது படிக்கிற போது, உண்மையிலேயே இந்த நூலினுடைய ஆசிரியர், மரியாதைக்குரிய வழக்கறிஞர் அவர்களை நெஞ்சார பாராட்ட வேண்டும். நான் இந்த தலைப்பை பார்க்கிறபோது, இரண்டாயிரம் ஆண்டுகள் தீண்டாமையை ஒழிக்க முடியவில்லை. 2000 ஆண்டுகளுக்கும் மேலாக இங்கு தீண்டாமை கட்டவிழ்க்கப்பட்டு இருக்கிறது.

ஆனால், நம்முடைய ஆசிரியர் சொல்கிறார், ஒரு நொடியில் அதை நான் ஒழித்துவிடுவேன் என்று இந்த நூல், அதை வலியுறுத்துகிறது.



இந்த நூலின் தலைப்பே ஒரு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.

ஏன் இதை நாம் சொல்கிறோம் என்றால் தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும்.

தீண்டாமை எங்கு இருக்கிறது என்பது தெரியாமல் அதை எப்படி நாம் ஒழிக்க முடியும்? தீண்டாமை எங்கு இருக்கிறது என்பதை முதலில் அறியாமல், அதை ஒழிக்கும் வழியை நாம் அறிந்திட முடியாது.

தீண்டாமை என்றால் ஏற்றத் தாழ்வு, அந்த தீண்டாமையை கற்பிக்கிற ஒரு கோட்பாடுதான், தீண்டாமையை நிலை நிறுத்தியும் வைத்திருக்கிறது. நிறைய பேர் இதற்காக போராடி கொண்டும் இருக்கிறார்கள். 2000 ஆண்டுகளாக இதற்கு எதிரான போராட்டங்களும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. இன்னும் குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் அநேக தலைவர்களும் தீண்டாமைக்கு எதிராகத்தான் குரல் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

புரட்சியாளர் அம்பேத்கர், த.தா. இரட்டைமலை சீனிவாசன், அயோத்தி தாசர், பண்டிதர், ஜோதிராம், தந்தை பெரியார் இன்னும் அடுக்கிக் கொண்டே போகலாம். இவர்கள் சொல்கின்ற அனைத்து கருத்துமே தீண்டாமைக்கு எதிரான கருத்துதான், வேறெதுவும் இங்கு கிடையாது.

தீண்டாமைக்கு எதிரான கருத்தியலும், சமூக நீதிக்கான கருத்தியலுமே இந்தியாவில் நிலை கொண்டிருக்கிறது. வேறெதுவும் இல்லை. இங்கு இவர்கள் அனைவரும் வலியுறுத்திய கருத்தியலும் தீண்டாமை இங்கு ஒழிக்கப்பட வேண்டும். சமூக நீதி இங்கு நிலைநாட்டப்பட வேண்டும் என்பதுதான்.

அப்படியெனில் தீண்டாமை எங்கு இருக்கிறது என்பதை நாம் அனைவருமே கண்டிப்பாக இங்கே அறிந்துகொள்ள வேண்டும். ஏன் என்றால், தீண்டாமையை கற்பிப்பதே ஒரு குறிப்பிட்ட மதத்தை மட்டும்தான் நாம் இங்கே சொல்ல முடியும்.

ஏதோ நீங்கள் பாருங்கள் ஒரு குறிப்பிட்ட மதம் மட்டும்தான் தீண்டாமையை கற்பிக்கும். இந்த தீண்டாமையை அவர்களின் இறைவனே சொல்கிறான், ஒருவனை உயர்ந்தவனாகவும், ஒருவனை தாழ்ந்தவனாகவும் படைத்திருக்கின்றேன் என்று குலத்தில் பெரியவனாக நான் படைத்திருக்கிறேன் என்று ஒரு இறைவனே சொல்கிறான் என்றால் அந்த கருத்தியல் எப்படிப்பட்டதாக இருக்கும் என்று நாமே சிந்தித்துக்கொள்ள வேண்டும். அதை உள்வாங்கவும் வேண்டும்.

ஏற்றத் தாழ்வுகள் இல்லை, அனைவரும் சமமானவர்கள், எல்லாருக்கும் எல்லாமும் என்பதுதான் சரியான இறைக்கொள்கையாக இருக்க முடியும்.

ஆனால், இங்கே ஒரு இறைவன் சொல்கிறான், நான்தான் மனிதர்களுக்கிடையே ஏற்றத் தாழ்வுகளை உண்டுபண்ணி இருக்கிறேன் என்று சொல்லும் இந்த கருத்தியல் எப்படி மனிதர்களுக்கு ஏற்றதாக இருக்க முடியும்?

இதை நாம்தான் சரியாக புரிந்துகொண்டு உள்வாங்கும் கட்டாயத்தில் இருக்கிறோம். இந்த கருத்தியலை ஒழிக்காமல் தீண்டாமை ஒழிக்க முடியாது.

முன்னால் இருந்த பல தலைவர்கள் இதற்காக உண்மையாக உளப்பூர்வமாக களப்பணி செய்தார்கள். போராடியதால்தான் நாம் இன்று ஓரளவாவது சமநீதியுடன் இருந்து கொண்டிருக்கிறோம். சமூக நீதியை குறித்து சொல்லிக்கொண்டும் இருக்கிறோம். புத்தகங்கள், பிரதிநிதிகள் மூலம் மக்கள் மத்தியில் கொண்டு போய் சேர்த்துக்கொண்டு இருக்கிறோம்.

ஆனால் இன்றைக்கு சமூக நீதியை பேசுகின்ற தலைவர்களும், சனாதனத்தை அழிக்க வேண்டும் என்று சொல்கிறவனும் எங்கே இருக்கிறார்கள் என்று பார்த்தால் தீண்டாமை உள்ளேயே இருந்துதான் பேசிக் கொண்டிருக்கிறார்கள், அதுதான் இங்கே சிக்கல், தீண்டாமைக் கோட்பாட்டின் வெளியே நின்று பேசினால் புரட்சி வெடித்து விடும். ஆனால் தீண்டாமைக்கு உள்ளே இருந்துகொண்டே சமூக நீதி பற்றி பேசுகிறார்கள்.

இப்பொழுதுகூட சமீபத்தில் தமிழக முதலமைச்சர் மகன் சனாதனத்தை பற்றி பேசினார். ஆனால் சனாதனம் எங்கே இருக்கிறது என்று பார்த்தால் அவர் வழிபடுகிற ஆலய வழிபாட்டிற்குள்ளே இருக்கிறது. அப்பொழுது எப்படி ஒழிக்க முடியும். அதனால் தான் புரட்சியாளர் அம்பேத்கர் சொன்னார், இந்து மதத்தை சீர்த்திருத்துவது நம்முடைய நோக்கமல்ல, அதை


vaigarai velicham official

சீர்திருத்தவும் முடியாது, தீண்டாமையை பிறப்பிக்கிற, ஏற்றத்தாழ்வுகளை கட்டவிழ்த்து விடுகின்ற கருத்திய லைக்கொண்டே இந்து மதத்தை சீர்த்திருத்த முடியாது. அதனால் இந்து மதத்தை சீர்திருத்துவதைவிட தீண்டாமையை ஒழிக்க சிறந்த ஒரு ஏற்பாடு சிறந்த ஒரு முன் எடுப்பு "மத மாற்றம்" தான்.

இதைதான் புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் வலியுறுத்தினார். அந்த கருத்தியலை ஏற்றுக்கொண்டதால் தான் பெருமளவில் நிறைய பேர் இஸ்லாத்தையும், கிறிஸ்தவத்தையும் ஏற்றுக்கொண்டார்கள். ஆனாலும், இன்றளவும் கூட அந்த இரும்புக் கோட்டைக்குள் இந்த தீண்டாமையை உள்ள நுழையவிடாமல் தடுக்கும் ஒரே மார்க்கம் இஸ்லாம்தான்.

நான் கிறிஸ்தவன்தான். ஆனால், கிறிஸ்தவத் தில்கூட கோட்பாடுகள், கருத்தியல் மாறாமல் தான் இருக்கிறது. நான் பகிரங்கமாகத்தான் சொல்கிறேன். ஒரு பறையன் Father (பாதிரியார்), நாடார் பாதிரியார் வீட்டு பெண்ணை திருமணம் செய்ய முடியாது. அங்கு எல்லாமே ஜாதிக் கட்டமைப்புக்குள்தான் இருக்கிறது. பெயர்தான் கிறிஸ்தவம். இது யதார்த்தமான உண்மை. நான் மிகவும் உயர்த்தி பேச வேண்டும், இஸ்லாத்தை உயர்வாக பேச வேண்டும் என்பதற்காக இந்த இடத்தில் பேசவில்லை. யதார்த்த "கள" ஆய்வை தான் நான் சொல்கிறேன். சமீபத்தில் களக் காட்டில் எங்கள் சமுதாயத்தில் இருந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட ஒரு பெண், இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட ஒரு மணமகனை மணம் முடித்தாள். எந்தக் கேள்வியும் யாரும் அங்கே கேட்கவில்லை. இஸ்லாமிய முறைப் படியே அந்தத் திருமணம் அங்கு நடைபெற்றது.

எங்கு இருந்து மதம் மாறினார்கள், எங்கு இருந்து வந்தார்கள், எந்த கேள்விக்கும் அங்கே இடமில்லை. ஆனால் நான் எனது மகனுக்கு பெண் எடுத்தால்கூட நான் யாரைதான் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. என்னுடைய "பறையர்" சமுதாயத்தில் இருந்துதான் பெண் எடுக்க முடியும். பின்னர் எப்படி தீண்டாமையை ஒழிக்க முடியும்.

தீண்டாமையை ஒழிக்கத்தான் நாங்கள் மதம் மாறுகிறோம். ஆனால், தீண்டாமை ஒழிக் கப்பட்டுள்ளதா என்றால் இல்லை, இல்லவே இல்லை. நிறம் மட்டும் மாறி இருக்கிறது. இந்து என்ற நிறம் மாறி கிறிஸ்தவம் என்ற நிறம் மட்டும் வந்திருக்கிறது. அவ்வளவுதான், வேறு எந்த மாற்றமும் நடைபெறவே இல்லை. ஆனால் அந்த மாற்றத்தை நடைமுறைப்படுத்தக் கூடிய வழி இஸ்லாத்திற்கு இருக்கிறது. இந்த உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் இதை மதமாற்றம் என்று சொல்வதைவிட ஒரு மனிதனின் வாழ்வியல் மாற்றத்தைக் கொடுப்பது தான் இஸ்லாம். அதைத்தான் இந்த நூலும் வெளியிடுகிறது. பலமுறை பல நிகழ்வுகளை நாம் பார்க்கிற பொழுது, இந்த சமூக நீதிக்கான களத்தில் தொடர்ந்து எழுச்சி தமிழர் தோழர் திருமாவளவனோடு நாங்கள் பயணிக்கிற பொழுது இஸ்லாம் ஒரு சிறந்த தீண்டாமையை எதிர்த்து ஓர் சீர்திருத்தத்தைக் கொண்டு வரக்கூடிய வலிமையை கொண்ட மார்க்கம் இஸ்லாம்தான். தீண்டாமையை எங்கிருந்து ஒழிக்க வேண்டும் சொல்லுங்கள்.

நாம் இருட்டில்தான் இருக்கிறோம். தாழ்த் தப்பட்டவன் என்று பாதிக்கப்படுகிறோம். அதே கொள்கையை ஏற்று இங்கேயே வாழ்ந்து கொண்டு, தீண்டாமை இருக்கிறது தீண்டாமை இருக்கிறது, தீண்டாமையை ஒழிக்கவேண்டும் என சொல்லிக்கொண்டே இருந்தால் தீண்டா மையை எப்படி ஒழிக்க முடியும் இதைவிட்டு வெளியே வராத அளவிலே தீண்டாமையை ஒழிக்கவே முடியாது. மாற்றமே நிகழாது. ஏன் என்று சொன்னால் அதை ஆளுகை செய்து இருக்கிற ஒரு கருத்தியல், தீண்டாமை ஏற்றத் தாழ்வுகளை கற்பிக்கின்ற ஒரு கருத்தியல்.

இந்துவாக இருந்துக்கொண்டு என்னாலே தீண்டாமையை ஒழிக்கவே முடியாது. இந்து என்கிற மதத்தையும் என்னால் சீர்திருத்தவும் முடியாது. எனவே தீண்டாமையை ஒழிக்க மதமாற்றம் ஒன்றுதான் நிரந்தர வழி என்று சொல்லி, புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களே மதமாற்றத்தின் நிகழ்வை நடத்திக் காட்டி இருக்கிறார்கள். அதனால் இந்த நூலை மிகச் சிறந்த நூலாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய ஐயா வழக்கறிஞர் அவர்கள் திராவிட தமிழர் கட்சியுனுடைய புத்தகத்தை படிக்கின்ற பொழுது தொடர்ந்து இந்த சமூகத் திற்கான களப்பணியை செய்து கொண்டிருக் கிறார். தொடர்ந்து இந்த சமூகத்திற்கு தேவையான ஒரு நபராக நாம் பார்க்கிறோம். தொடர்ந்து தீண்டாமைக்கு எதிரான ஒரு செயல்பாட்டை தொடர்ந்து ஐயா அவர்களும், திராவிட தமிழர் கட்சியும் தொடர்ந்து செய்ய வேண்டும் என்று சொல்லி வாழ்த்துரை வழங்க வாய்ப்பளித் தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

# ஐ.ஏ.எஸ்-இல் முஸ்லிம்கள் கொடி நாட்டியது மிகப்பெரிய நிம்மதி

1. 10 Bilal Mohi Ud Din Bhat
2. 22 Muzammil Khan
3. 25 Shaikh Tanveer Asif
4. 28 Hamna Mariyam B A
5. 39 Zaffar Iqbal
6. 48 Rizwanbasha Shaik
7. 62 Sheik Abdul Rahaman S
8. 74 Arif Ahsan
9. 86 Syeed Fakhrudin Hamid
10. 115 Bisma Qazi
11. 177 S M Qasim Abidi
12. 191 Razeem K
13. 206 Gaush Alam
14. 435 Md Adil Ashraf




15. 450 Pathan Adeeb
16. 472 Saqib Yousuf
17. 509 Haseen Zahera Rizvi
18. 525 Jabeen Fathima J
19. 538 Anam Siddiqui
20. 554 Sheikh Sami Ur Rahman
21. 556 Mohammad Arshad
22. 584 Minhaj Uddin Nizami
23. 603 Shaik Shahabaaz
24. 604 Inabat Khaliq
25. 610 Faisal Javaid
26. 646 Haris Bin Zaman
27. 674 Iraj Raja
28. 697 Ezaz Ahmed
29. 753 Maner Nasir Iqbal
30. 755 Abdul Raheem A
31. 781 Naseef Abdul Kader
32. 805 Muhammed Shabeer
33. 822 Jabbar
34. 827 Tasleem Ahmed
35. 828 Shardul
36. 836 Md Mustaque
37. 882 Rena Jamil
38. 885 Shuhaib T
39. 898 Muhammed Haneef
40. 1028 Md Sarfaraj Alam
41. 1042 Sajad Bashir
42. 1087 Amir Bashir

*அனைவருக்கும் வாழ்த்துக்கள்...*

*ஒவ்வொரு முஸ்லிமும் தன் பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும் இன்ஷா அல்லாஹ் இனிவரும் காலங்களில் அல்லாஹ் மீண்டும் முஸ்லிம்களுக்கு புகழைத் தருவான்.*

*ஆமீன்.....*


vaigarai velicham official

# சிறுபான்மையினருக்கு ஒதுக்கப்படும் நிதி குறைந்து வருவது ஏன்?

## தகவல் உரிமைச் சட்டம் அளித்த பதில்

**ஒவ்வொரு** ஆண்டும் இந்திய அரசு வரவு செலவு பட்ஜெட் தாக்கல் செய்வது வழக்கம். வருட தூரம் சிறுபான்மை நலத்துறை அமைச்சர் ஒதுக்கப்படும் தொகை சுமார் 4000 கோடியாக இருப்பதாக பி அரசு புள்ளி விவரங்கள் தெரிவிக்கிறது.

இதில் முக்கிய திட்டமாக பார்க்கப்படுவது கல்வி உதவித் தொகை திட்டம் ஃப்ரீ மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் என்று உதவி தொகை இரண்டு திட்டங்களில் வழங்கப்படுகிறது இதற்காக ஒதுக்கப்படும் தொகை சுமார் 1500 கோடி கடந்த 10 ஆண்டுகளாக இந்த தொகை உயர்த்தவே இல்லை என்பது ஒரு கவலையாக தெரிந்தாலும் முக்கிய பிரச்சனையாக இந்த தொகை கடந்த ஆண்டு யாருக்கும் கொடுக்கவே

Good Morning Sir/Madam

Would like to seek clarification on Pre and Post matric scholarship program. Because for the year 2022 to 23 although the revised estimate for Pre matric was 400 crore rupees but the expenditure shows 95.84 crores.

For post matric the revised estimate budget was 1000 crore but only 85.02 crore was spent towards.

Could you please share any reason for the budget not utilized towards the welfare schemes unlike all other previous year?

Also could you please share what is the current expenditure in 2024 to 25 as of?

| | |
|---|---|
| Received Date | 22/02/2025 |
| Public Authority | Ministry of Minority Affairs |
| Status | REQUEST DISPOSED OF |
| Date of action | 11/03/2025 |
| Reply :- It is stated that the Budget Estimates of Rs. 433.00 crore for Pre-Matric Scholarship, and Rs. 1065.00 crore for Post Matric Scholarship were kept for 2023-24 and Revised under RE 2023-24 as Rs. 400.00 crore and Rs. 1000.00 crore respectively under the schemes with the anticipation that these schemes shall be approved for implementation beyond the year 2021-22. However, the approval of competent authority could not be received. Hence, expenditure of only Rs. 180.86 crore could be made under these heads and that too towards | |

**Ministry of Minority Affairs**

The expenditure made under Nai Manzil in the last five years is provided below:

(Rs. in crore)

| Financial Year | Budget Estimates | Actual Expenditure |
|---|---|---|
| 2018-2019 | 140.00 | 93.73 |
| 2019-2020 | 140.00 | 34.44 |
| 2020-2021 | 120.00 | 59.84 |
| 2021-2022 | 87.00 | 48.86 |
| 2022-2023 | 46.00 | 7.62 |

படவில்லை என்பது வேதனை அளிக்கிறது

1500 கோடி ஒதுக்கிய திட்டத்தில் வெறும் 180 கோடி மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது ஏன் என்று நாம் தகவல் உரிமை சட்டத்தின் கீழ் கேள்வி எழுப்பிய போது அவர்களின் பதில் மேலும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது

ஒரு திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு அந்த அதிகாரிகள் ஒப்புதல் பெற வேண்டும் அது கிடைக்க எந்த காரணத்தால் இந்த தொகை யாருக்கும் வாங்கப்படவில்லை என்று அவர்கள் கூறியுள்ளார்கள்

நம்முடைய கேள்விகளும் தகவல் உரிமை அதிகாரி பதிலையும் இதில் இணைத்துள்ளோம் 2023-2024 ஒதுக்கப்பட்ட 1500 கோடியில் சுமார் 180 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது அது போன ஆண்டு ஒப்புக் கொள்ளப்பட்ட தொகை மேலும் புதிதாக யாருக்கும் வழங்கப்படவில்லை என்று கூறியுள்ளார்


மற்றொரு திட்டமான நைமஞ்சள் என்று ஒரு திட்டம் இது தகுதி வாய்ந்த சிறுபான்மை இன மக்களே அறிந்து அவர்களுக்கு தொழில் பயிற்சி அளிக்கும் திட்டமாகும் இதில் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகையும் செலவு செய்யப்பட்ட தொகையும் சொற்ப மாகவே உள்ளது

சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு 16 லட்சம் கோடியாக இருந்த இந்திய பட்ஜெட் இப்போது பல்வேறுபட்ட வரி திரிப்புகளால் 40 லட்சம் கோடியாக உயர்ந்த நிலையிலும் சிறுபான்மை நல அமைச்சகத்திற்கு கூறிய நிதி ஒதுக்கப் படாதது ஒரு சர்ச்சையாக இருந்தாலும் ஒதுக்கப்பட்ட தொகை கூட யாருக்கும் கொண்டு சேர்க்க முடியாத நிலையில் அதிகாரிகள் கைப்பூட்டப்பட்டுள்ளார்கள் எதிர்க்கட்சிகள் இதனை அறிந்து உள்ளார்களா அல்லது அவர்கள் இருக்கின்றார்களா என்ற கேள்வி உள்ளது. ■

## யாருய்யா அவன்... பா.ஜ.க.விட மொத்த ஹிஸ்டரிய ஒரே பத்தில் சுருட்டிட்டானே!

**இவ்ளோதாங்க பி.ஜே.பி.யோட அஜண்டா.**

- நாடா இருந்தா பிரிக்கணும்.
- தலைவர்கள் சிலையா இருந்தா உடைக்கனும்.
- கோவில் சிலையா இருந்தா திருடனுக்கு..
- மஸ்ஜிதா இருந்தா உடைக்கணும்.
- கட்சியா இருந்தா பிளக்கணும்
- பெயரா இருந்ததா மாத்தணும்.
- வரலாறு இருந்தா திணிக்கணும்.
- மனுசனா இருந்தா கொல்லணும்.
- அரசா இருந்தா சுரண்டணும்.
- நீதியா இருந்தா புதைக்கணும்.
- ஒற்றுமையா இருந்தா குலைக்கணும்.
- முஸ்லிமா இருந்தா விரட்டணும்.
- கிறிஸ்டியனா இருந்தா உதைக்கணும்.
- இந்துவா இருந்தா சாதிக்குள்ள வைக்கணும்.
- பொம்பளையா இருந்தா உறசணும்.
- படிப்பா இருந்தா கெடுக்கணும்.
- விலையா இருந்தா ஏத்தணும்.
- பணமா இருந்தா புடுங்கனும்.
- ஷூவா இருந்தா நக்கணும்.
- மசூரா இருந்தா வளர்க்கணும்
- மூத்திரமா இருந்தா குடிக்கணும்.





# வாதாடாமலேயே குற்றத்தை ஒப்பு கொள்ளுதல்

## முஸ்லிம் 'தீவிரவாதிகளின்' சாமர்த்தியமான முடிவு

**மார்ச் மாத தொடர்ச்சி....**

### ஈ) குற்றங்கள்

இந்த மூன்று குற்றவாளிகளும் பாகிஸ்தான் நாட்டைசேர்ந்தவரும்தற்போதுதுபாயில்வசித்து வருபவருமான காலித் கில்ஜி (KK), அமீரகத்தை சேர்ந்தவரான உம் முஹாஜிர் (எ) அல் ஃகனா (AQ) மற்றும் செயல்பட்டு கொண்டிருக்கும் இன்னபிற அறிந்த அறியாத ISIS உறுப்பினர் களுடன் இணைந்து செயல்பட்டனர். அவர்கள் ISIS சித்தாந்தத்தை பரப்புவதற்கும், இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் வாழும் மக்களை தூண்டி விடுவதற்கு ISIS அமைப்பில் சேருவதற்கு ஊக்குவித்தனர். அவர்களுடைய அரசு களுக்கு எதிராக இளைஞர்களை சேர்த்து வந்தனர், அவர்களின் நாடுகளிலிருந்து சிரியா விற்கு மக்கள் பயணம் செய்ய ஏற்பாடு செய்வது, பணம் வசூல் செய்து அதை இதைபோன்ற செலவுகளுக்கு பகிர்ந்தளிப்பது போன்ற செயல்களை செய்தனர். இந்த சதி ஆலோசனை யினை செயல்படுத்துவதற்காக அந்த மூன்று குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அவர்களுக்கு துணை நின்றவர்களும் பின்வருவனவற்றை செயல்பாட்டு முறையாக பின்பற்றினர்.

1) பல்வேறு நாடுகளில் வசிக்கும் அவர் களுக்குதுணை நின்றவர்கள் மற்றும் அவர்களுக்கு சொந்தமான பல மொபைல் போன்களை பயன்படுத்துவது.

2) பலவிதமான இமெயில் முகவரிகளை உருவாக்கியது.

3) பல்வேறு முகநூல் பக்கங்களையும், டிவிட்டர் கணக்குகளையும், வாட்ஸ் ஆப் குழுக்களையும் இன்ன பிற செய்தி அனுப்பும் சேவைகளையும் போலியான பெயர்களில் உருவாக்கியது.

4) தங்களுடைய உண்மையான தோற்றத்தை மறைத்து இணைய தளம் அளிக்கும் அநாமதேய தன்மையை பயன்படுத்தி பல்வேறு இணைய சமூக குழுக்களை உருவாக்கியது.

5) இதன்வழி அவர்கள் பாகிஸ்தான், வங்கதேசம், சவூதி அரேபியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளின் ISIS பயங்கரவாதிகளுடன் தொடர்பில் இருந்தனர்.

6) இதுபோன்ற சமூக வலை தளங்களை அதிகமாக பயன்படுத்தி ISIS பயங்கரவாத நடவடிக்கைகள் சம்மந்தமான செய்திகள், போட்டோக்கள், ஆடியோக்கள் மற்றும் வீடியோக்கள் ஆகியவற்றை பார்த்தது, பதிந்தது மற்றும் பகிர்ந்தது.

7) இணைய வழி சந்திப்புகளை நடத்தி ISIS ல் சேருவதற்கு மற்றும் சிரியாவுக்கு பயணம் செய்ய ஊக்குவித்தது.

8) அவர்களுக்கு இடையேயும் வெளிநாடுகளில் வாழும் ISIS சார்ந்தவர்களுக்கு பண பரிமாற்றம் செய்தது.

9) இந்தியாவில் இருக்கும் UAPA வழக்குகள் பதியப்பட்டு இருக்கும் பயங்கரவாதிகளுடன் தொடர்பில் இருந்தது.

## 2) குற்றத்துக்கு வலுச்சேர்ப்பதற்காக குற்றப் பத்திரிகையில் சேர்க்கப்பட்ட ஆதாரங்கள்

1) போலீஸ் காவலில் இருந்த போது குற்றம் சாட்டப்பட்ட வர்கள் வழங்கிய வாக்குமூலம்

2) குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட IMEI எண்கள் கொண்ட மொபைல் போன்கள் (கருவிகள்).

3) குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சிம் கார்டுகள்.

4) லேப்டாப்கள், டேப்லெட்கள் போன்றவை.

5) சில மொபைல் போன்களின் அழைப்பு பதிவுகள்.

6) சில மொபைல் போன்களில் சேமித்து வைக்கப்பட்ட ISIS நபர்கள் என கூறப்படும் சிலரின் மொபைல் எண்கள்.

7) வாட்ஸ் ஆப் குழுக்கள் உருவாக்கி அதன் மூலம் சட்ட விரோதமான தகவல்களை பரிமாறியது.

8) இமெயில், முகநூல், டிவிட்டர் மற்றும் பல சமூக வலை தளங்களில் பல நபர்களின் தொடர்பு பதிவுகள்.

9) குற்றம் சாட்டப்பட்ட மூவரின் பாஸ்போர்ட்கள் மற்றும் விசாக்கள்.

10) குற்றம் சாட்டப்பட்ட மூவரின் விமான பயணச்சீட்டுகள்.

11) குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கு சொந்தமான அமீரக நாட்டு கிரெடிட் / டெபிட் கார்டுகள்.

12) பணம் வைப்பு தொகை செலுத்திய ரசீது போன்றவை.



**எஸ்.எம். முஷ்ரிஃப், IPS**
முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல், மகாராஷ்டிரா காவல்துறை

மேற்சொன்ன ஆதாரங்களில் வரிசை எண் 8,9&10 அதாவது பாஸ்போர்ட்கள், விசா, விமான பயணச்சீட்டு மற்றும் கிரெடிட் / டெபிட் கார்டுகள் ஆகியவை குற்றம் சாட்டப்பட்டவர் களுடையது என்று அவற்றை நம்பத்தகுந்த ஆதாரங்களாக கொள்ளலாம். மற்ற ஆதாரங்கள் அனைத்தும் ஆதாரங்களாக எடுத்துகொள்ள தகுந்த மதிப்பு இல்லை. பின்வரும் காரணங்களால் அவற்றை நிராகரிக்கலாம்.

### குற்றம் சாட்டப்பட்டவர்கள் வாக்குமூலம்

சட்டத்தின் படி, காவல்துறையினர் முன் அளித்த வாக்குமூலம் தனிப்பட்ட ஆதாரங்களின் மூலம் உறுதிப்படுத்தாமல் கணக்கில் கொள்ளப் படாது. இந்த வழக்கில், வாக்குமூலம் காவல் துறை கட்டுப்பாட்டில் இருந்தபோது அளித்த தாகும். அதற்கு வலு சேர்க்கும் எந்த தனிப்பட்ட ஆதாரமும் அளிக்கப்படவில்லை.

### மொபைல் போன்கள்

குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட IMEI எண்கள் மற்றும் சிம் கார்டுகள் கொண்ட மொபைல் போன்கள் (கருவிகள்) அர்த்தமற்றவை. ஏனெனில், அவையாவும் ஆக்டிவேட் செய்யப்படவோ வாடிக்கையாளர் எண் வழங்கப்படவோ இல்லை. இதுவே வழக்கமான வாடிக்கையாளர் பயன்பாட்டு நடைமுறை ஆகும். மற்ற மொபைல் எண்களை பொருத்த வரையில், அவைகளின் உரிமையாளர் யார் என்பது தெரியாமல் அதன் அழைப்பு பதிவுகளை அவர்களுக்கு எதிராக உபயோகிக்க முடியாது.

இந்த வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் மொபைல் கம்பெனிகளுக்கு விண்ணப்பம் அனுப்பியதாகவோ அது ஏற்றுக் கொள்ளப்பட்டு


vaigarai velicham official

அவர்களுக்கு அந்த எண்களை வழங்க ஒப்புதல் அளித்ததாகவோ ஆதாரங்கள் இல்லை. அல்லது அவர்கள் இந்த எண்களை வேறு நபர்களின் பெயர்களில் மோசடி செய்து ஏமாற்றி வாங்கிய தற்கான ஆதாரமோ இல்லை. இத்தைகைய சூழலில், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக மொபைல் போன்களை ஆதாரமாக பயன்படுத்த முடியாது.

## வாட்ஸ் ஆப் குழுக்கள்

மொபைல் போன்களின் உண்மையான உரிமையாளர்கள் நிரூபிக்கப்படாத காரணத்தால் அதில் உள்ள வாட்ஸ் ஆப் குழுக்கள் குற்றம் சாட்டப்பட்டவர்களால்தான் உருவாக்கப் பட்டது என கூற முடியாது. ஆகையினால், அதிலுள்ள ISIS தீவிரவாத நடவடிக்கைகள் குறித்த செய்திகள், போட்டோக்கள், ஆடியோக்கள், வீடியோக்கள் போன்றவை பகிரப்பட்டதற்காக அவர்களை குற்றம் பிடிக்க இயலாது.

## இமெயில் ஐடிகளும் இமெயில் செய்திகளும்

குற்றப்பத்திரிக்கையில் கூறப்பட்டுள்ள இமெயில் ஐடிகள், முகநூல் மற்றும் டிவிட்டர் கணக்குகள் விஷயத்திலும் இதுவே உண்மை. IP அட்ரஸ், MAC அட்ரஸ், உருவாக்கிய இடம், நேரம், தேதி அல்லது உரிமையாளரை அறிவதற்கான எந்தவித முயற்சியும் விசாரணை அதிகாரிகளால் எடுக்கப்படவில்லை. அவர்களால் உருவாக்கப்பட்ட இமெயில் ஐடிகள் மற்றும் இமெயில் செய்திகளுக்கும் கைப்பற்றப்பட்ட லேப்டாப்களுக்கும் எவ்வித தொடர்பும் நிறுவப்படவில்லை. இமெயில் ஐடிகள் மற்றும் இமெயில் செய்திகளுடைய MAC அட்ரஸ் இருக்கும் வேறு எந்த லேப் டாப்போ கம்பியூட்டரோ ஆதாரமாக கைப் பற்றபடவில்லை. இத்தகைய அறிவியல் சார்ந்த அல்லது ஸ்திரமான ஆதாரம் இல்லாமல், குற்றம் சாட்டப்பட்டவர்கள் வெளிப்படுத்தினார்கள் என்பதற்காக மட்டும் அதை அவர்களுக்கு எதிராக உபயோகிக்க முடியாது. அதுவுமில்லாமல் அனைத்து மெயில்களும் போலியான அல்லது குத்து மதிப்பான பெயர்களிலேயே இருந்தது.

## முகநூல், டிவிட்டர் போன்றவை

இமெயில் ஐடிகளின் உண்மையான உரிமையாளர் நிரூபிக்க முடியாததால் முகநூல், டிவிட்டர் போன்ற தகவல் தொடர்பு சேவைகளின் பதிவுகளை ஆதாரமாக எடுக்க முடியாது. இமெயில்களை போலவே முகநூல் டிவிட்டர் பதிவுகள் அனைத்தும் போலியான அல்லது குத்து மதிப்பான பெயர்களிலேயே இருந்தது. இதுபோன்ற பதிவுகள் அல்லது செய்திகள் குற்றம் சாட்டப் பட்டவர்கள் (காவல்துறை விசாரணையின் போது) கூறியதால் மட்டுமே அவர்களின் மீது குற்றம் சுமத்த முடியாது.

## காலித் கில்ஜி (KK), அல் ஃகனா (AQ)

கற்பனை பெயர்களை கொண்ட நபர்களான KK மற்றும் AQ உண்மையில் இருப்பதற்கான நம்பத்தகுந்த ஆதாரமும் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. அவர்களின் பெயர்கள் மொபைல்போன்களில்சேமித்துவைத்ததனாலும் இவர்கள் காவல்துறை விசாரணையின்போது வாக்குமூலம் அளித்ததனாலும் மட்டும் இதற்கு ஆதாரமாக கொள்வதற்கான எந்தவித மதிப்பும் இல்லை.

## வங்கி வைப்புத்தொகை சீட்டுகள்

ISIS இயக்கத்தை சேர்ந்த வெளிநாட்டு உறுப்பினர்களின் வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தியதை நிரூபிப்பதற்காக அந்த வங்கி வைப்புத்தொகை சீட்டுகள் பயன்படுத்தப்பட் டுள்ளது. இங்கே இரு விசயங்களில் விசாரணை அதிகாரிகள் தோல்வி அடைந்துள்ளனர். ஒன்று, இந்த வைப்புத்தொகை சீட்டுகள் உண்மையானது தானா என சம்மந்தப்பட்ட வங்கிகளில் அவர்கள் சரிபார்க்கவில்லை. இரண்டாவதாக, அந்த வெளிநாட்டு நபர்கள் ISIS பயங்கரவாதிகள்தான் என்பதற்கு எந்த ஆதாரமும் பதிவு செய்யப்பட வில்லை. ஆகையினால், அந்த வைப்புத்தொகை சீட்டுகள் என்பது வெத்து காகிதமே அன்றி வேறில்லை.

## நம்பத்தகுந்த ஒரே ஆதாரம்

இத்தகைய ஆய்வுக்கு பின்னர், பாஸ்போர்ட்கள், விசா, விமான பயணச்சீட்டு மற்றும் கிரெடிட் / டெபிட் கார்டுகள் ஆகியவை குற்றம் சாட்டப்பட்டவர்களுடையது என்று அவற்றை நம்பத் தகுந்த ஆதாரங்களாக

மிஞ்சுகிறது. இதனை வைத்து, குற்றம் சாட்டப் பட்டவர்கள் அமீரகத்துக்கு பயணம் செய்துள்ளனர்; அங்கே சிறிது காலம் தங்கியுள்ளனர்; அமீரக வங்கிகளில் கணக்கு வைத்துள்ளனர் எனும் ஒரே மறுக்கவியலா உண்மை மட்டும் நிரூபனம் ஆகிறது. அதற்கு அதிகமாகவோ குறைவாகவோ எதுவும் இல்லை. அவர்கள் அமீரகத்துக்கு வேலை தேடி உரிய ஆவணங்களுடன் சென்றிருக்கலாம்; அங்கே சிறிது காலம் வேலை செய்திருக்கலாம்.

இந்த உண்மையை மற்ற நாடுகளில் வாழும் வக்கிரமான கருத்தியல் கொண்ட நபர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள் எனவோ, பற்பல சமூக வலைதள குழுக்களை உருவாக்கி னார்கள் எனவோ, ISIS கருத்தியலை பரப்பி னார்கள் எனவோ, பல்வேறு நாடுகளில் வாழும் இளைஞர்களை சேர்த்தனர் எனவோ, பணம் வசூல் செய்தனர் எனவோ, கூறும் தொலை தூரமான அளவுக்கு கொண்டு செல்ல முடியாது.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் ISIS இணைய தளங்களை கூட பார்த்திருக்கலாம். அதுவே, அவர்கள் ISIS இயக்கத்தில் சேர திட்ட மிட்டனர் என்றும் அதன் கொள்கையை பரப்பினர் என்றும் கூறுவதற்கு பொறுப்பேற்க வைக்காது. அது, ஆபாச இணைய தளங்களை பார்த்ததற்காக இளைஞனை கற்பழிப்பு குற்றத்திற்கு தண்டிப்பது போலாகும்.

### வேண்டுமென்றே சிக்கலாக்கப்பட்ட குற்றப் பத்திரிக்கை

மேற்சொன்ன உண்மைகளிலிருந்து குற்றப் பத்திரிக்கையானது தயார் செய்யும் நிலை யிலேயே குப்பையில் வீசுவதற்கு தகுதியுடைய தாகும். ஆனால், இந்த குற்றப்பத்திரிக்கை வேண்டுமென்றே சிக்கலாக்கப்பட்டு காண்ப வரை குழப்பும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இணையதளத்தில் சைபர் உலகத்தில் தகவல் தொழில்நுட்பத்தில் சாதாரணமாக பயன்படுத்தும் சில வார்த்தைகள் தாராளமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இது அதனை பற்றி குறைவாக அறிந்த வக்கீல்கள் மற்றும் நீதிபதி களை குழப்பும் நோக்கத்திலேயே செய்யப்பட் டுள்ளது. இந்த திட்டம் பலித்தது; நீதிமன்றம் இந்த விஷயத்தின் சிக்கல்களை பற்றி புரியாமல் குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கு எதிராக IPC 120(B) மற்றும் சில UAPA பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டியது. அந்த மூவரும் குற்ற ஒப்புதல் அளிக்கவில்லை; குற்றங்களை மறுத்தனர்.

### குற்றம் சாட்டப்பட்ட இருவர் முந்தைய மனுவை மாற்றி குற்ற ஒப்புதல் அளித்தனர்

எனினும், ஒரு மாதத்திற்கு பின்னர், ஜம்மு–காஷ்மீரை சேர்ந்த அஸாருல் இஸ்லாம் (1ம் குற்றவாளி) மற்றும் மராட்டியத்தை சேர்ந்த முஹம்மத் பர்ஹான் ஷேக் (2ம் குற்றவாளி) ஆகிய இரு குற்றவாளிகள் தங்கள் மனுவை மாற்றினர். அவர்கள் இந்த வழக்கை வாதாடுவது வழக்கு விசாரணையில் சிக்கி சின்னா பின்னம் ஆகி விடுவோம் என்பதை குற்றப்பத்திரிகையை மீண்டும் மீண்டும் படித்து உணர்ந்து கொண்டனர். விடுதலைக்கான எந்த உத்தரவாதமும் இல்லாமல் இன்னும் பல ஆண்டுகள் சிறையில் கழிக்க வேண்டியது வரும் என புரிந்து கொண்டனர்.

எனவே, ஒரு மாத தீவிர சிந்தனைக்கு பின்னர் அவர்கள் தங்களுடைய மனுவை குற்ற மறுப்பிலிருந்து குற்ற ஒப்புதலுக்கு மாற்றினர். அந்த வகையில் அவர்கள் மனு தாக்கல் செய்து கருணை காட்டும்படி வேண்டுகோள் வைத்தனர். அதன்வழி அவர்கள் சட்டத்துக்கு உட்பட்டு ஏதேனும் தொழில் செய்து குடும்பத்தினருடன் வாழ்வதற்கு எண்ணினர். அரசு தரப்பு வழக் கறிஞரும் சமூகத்துடன் மீண்டும் இணைவதற் கான இந்த முயற்சியை பாராட்டி கருணை அளிக்க பரிந்துரைத்தார்.

*21 ஏப்ரல் 2017* அன்று நீதிமன்றம் இந்த இருவருக்கும் ஏழு வருட சிறை தண்டனை வழங்கி தீர்ப்பளித்தது.

### 3) இந்து தலைவர்களை கொல்ல சதி செய்த வழக்கு, நாந்தேட் 2012

உண்மைகளின் சுருக்கம்

*30 ஆகஸ்ட் 2012* அன்று நாந்தேட் பகுதியை சேர்ந்த பின்வரும் நால்வர் ஆயுதங்கள் வைத் திருப்பதாகவும் அவர்கள் சந்தேகிக்கும் வகையில் நடந்து கொள்வதாகவும் மஹாராஷ்டிரா ATS பிரிவுக்கு நம்பத்தகுந்த தகவல் கிடைக்கிறது:

1) முஹம்மத் முஸம்மில்,
   த/பெ. அப்துல் கனி (A1)

2) முஹம்மத் சாதிக்,
   த/பெ. முஹம்மத் பாரூக் (A2)




*3)* முஹம்மத் இல்யாஸ்,
த/பெ. முஹம்மத் அக்பர் (A3)

*4)* முஹம்மத் இர்ஃபான்,
த/பெ. முஹம்மத் கவுஸ் (A4)

எனவே, இரு அணிகளாக சென்று அவர்கள் நள்ளிரவு நேரத்தில் கைது செய்யப்பட்டார்கள். A1 மற்றும் A2 ஆகிய இருவரும் நாட்டு துப்பாக்கியும் வெடிமருந்தும் வைத்திருந்தனர். அவர்கள் இருவரும் தங்களுக்கு A3 மற்றும் A4 தான் ஆயுதங்களை அளித்ததாக தெரிவித்தனர். எனவே, நால்வரையும் **31** ஆகஸ்ட் **2012** அன்று குற்ற எண் 10/2012 u/s 3, 25 ஆயுத சட்டத்தின் கீழ் கைது செய்தது ATS.

அவர்கள் தங்கள் தலைவர் முஹம்மத் அக்ரம் (எ) இம்ரான் கான் (எ) காலித் த/பெ. முஹம்மத் அக்பர் மற்றும் சில வெளிநாட்டு நபர்களின் உத்தரவின் பெயரிலேயே செயல்படுவதாக விசாரணையின்போது தெரிவித்தனர். சரியாக ஒரு மாதம் கழித்து, அதாவது **30** செப்டெம்பர் **2012** அன்று முஹம்மத் அக்ரம் (A5) கைது செய்யப்பட்டார். அவர்களிடமும் அவர்களது வீட்டிலும் நடத்திய சோதனையில் பின்வரும் ஆட்சேபத்துக்குரிய பொருட்கள் கைப்பற்றப் பட்டன:

i) முஹம்மத் முஸம்மில் (A1): ஒரு நாட்டு துப்பாக்கி, எட்டு குண்டுகளுக்கான ரவைகள், அவரது பெயரில் ஒரு பாஸ்போர்ட், எல்ஜி நிறுவனத்தின் செல்போன், அதிலுள்ள **9860066861** எண் அடங்கிய ஏர்டெல் சிம் கார்டு ஆகியவை.

ii) முஹம்மத் சாதிக் (A2): ஒரு நாட்டு துப்பாக்கி, ஆறு குண்டுகளுக்கான ரவைகள், அவரது பெயரில் ஒரு பாஸ்போர்ட், இன்டெக்ஸ் நிறுவனத்தின் செல்போன், அதிலுள்ள **8798112867** எண் அடங்கிய யுனினார் சிம் கார்டு, ஒரு கம்ப்யூட்டர் ஹார்டு டிஸ்க் ஆகியவை.

iii) முஹம்மத் இல்யாஸ் (A3): தன் சகோதரன் முஹம்மத் அக்ரம் (A5) பெயரில் வழங்கப்பட்ட பாஸ்போர்ட், கார்பன் நிறுவனத்தின் K409 மாடல் செல்போன், அதிலுள்ள **9970789396** எண் அடங்கிய ஏர்டெல் சிம் கார்டு ஆகியவை.

iv) முஹம்மத் அக்ரம் (A5): ஒரு ஏசர் லேப்டாப், காலித் அஹ்மத் எனும் கற்பனை பெயரில் ஒரு தேர்தல் அடையாள அட்டை, ஆறு குண்டுகளுடன் கூடிய ஒரு 7.65 mm துப்பாக்கி, தலா ஐந்து குண்டுகள் அடங்கிய இரு துப்பாக்கி தோட்டா தாங்கிகள், மூன்று மொபைல் போன்கள், இரண்டு சிடிகள், ஒரு டிவிடி ரைட்டர் மற்றும் சில டாக்குமென்ட்கள்.

மேற்கொண்டு விசாரணை செய்ததில், கீழ்கண்ட தகவல்கள் வெளிவந்தன:

*1)* சவூதி அரேபியாவில் உள்ள லஷ்கர் அமைப்பின் உறுப்பினர்களும் தலைவர்களும் கேட்டுக்கொண்டதன் பேரில், கைது செய்யப்பட்ட குற்றவாளி மஹாராஷ்டிராவில் நாந்தத், ஹைதராபாத் மற்றும் பெங்களூரின் சில இந்து தலைவர்களை கொல்ல திட்டம் தீட்டினான்.

*2)* **1**ம் குற்றவாளியும் **2**ம் குற்றவாளியும் தங்களது தலைவரான **5**ஆம் குற்றவாளியுடன்

மின்னஞ்சல் மூலமாகவும் மொபைல் அழைப்புகள் மூலமாகவும் தொடர்பில் இருந்தனர்.

3) 1ம் குற்றவாளியும் 2ம் குற்றவாளியும் 5ம் குற்றவாளியின் அறிவுறுத்தலின் பேரில் நாந்தேத் மற்றும் ஹைதராபாத்தில் கொல்லப்பட வேண்டிய இலக்குகளை அடையாளம் காண கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

4) மஹாராஷ்ட்ரா மற்றும் இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ள அடையாளம் காணப்பட்ட நபர்களின் புகைப்படங்களை 5ம் குற்றவாளி தன் கூட்டாளிகளுக்கு அளித்தார். அதை வைத்து இலக்குகளான அந்த நபர்களை கண்காணித்து வர கூறினார்.

5) 5ம் குற்றவாளி தான் சவூதி அரேபியாவில் இருந்தபோது தன்னுடைய கொடும் திட்டத்தின்படி இந்து தலைவர்களை கொல்ல தேவையான தளவாடங்களை வாங்குவதற்கான நிதியை தன் கூட்டாளிகளுக்கு அனுப்பினார்.

6) லஷ்கரே தொய்பா அமைப்பு இந்தியாவில் மேற்கத்திய கலாச்சாரத்தை ஒழிப்பதற்காக இந்திய முஸ்லிம் முஹம்மதி முஜாஹிதீன் (IMMM) எனும் புதிய பிரிவை ஹைதராபாத்தை தலைமையிடமாகக்கொண்டு உருவாக்கியுள்ளது.

7) இந்த உண்மையானது, லஷ்கர் அமைப்பின் தலைவர் அப்துல் ரஹ்மான் மக்கியால் 2012 பிப்ரவரி 6ம் தேதி லாஹூர் அருகே முரித்கே பகுதியில் நடந்த லஷ்கர் வருடாந்திர மாநாட்டில் கூறியதன் மூலம் உறுதியாகிறது.

8) ஹைதராபாத் மற்றும் ஜூனாகாத் பகுதியில் தங்கள் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என லஷ்கர் அமைப்பின் தலைவர் ஹஃபீஸ் சையதும் அறிவித்துள்ளார்.

9) ஹைதராபாத்தில் உள்ள ஒரு பத்திரிக்கைக்கு ஒரு துண்டு காகிதத்தில் கிறுக்கிய குறிப்பு ஒன்று கிடைத்தது. அது IMMM உருவாகியதையும் சில குண்டு வெடிப்புகள்தான் அவர்களின் முதல் பணி என்பதையும் அது அறிவித்தது. 2012ம் ஆண்டு ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதம் நடந்த ஆர். எஸ்.எஸ். அனுதாபி ஒருவரின் இனிப்பு கடை மீதும், ஹைதராபாத்தின் லம்பா திரையரங்கம் மற்றும் வெங்கடேஷ்வரா திரையரங்கம், மஹாராஷ்ட்ராவின் நாந்தேத் பகுதியிலுள்ள ஷாரதா தியேட்டர் ஆகியவற்றின் மீதும் நடந்த தாக்குதல் தான் அவை.

10) நிஜாமாபாத் பகுதியை சேர்ந்தவரும், லஷ்கரின் மூத்த தலைவர்களில் ஒருவரும், 1993 மும்பை தொடர் குண்டுவெடிப்புகளுக்கு பின் காவல்துறையால் தேடப்பட்டு வரும் ஆஸாம் காரிதான் IMMMன் தளபதி. அவர் பாகிஸ்தானில் லஷ்கர் மையங்களில் பயிற்சி பெற்று 1998ம் ஆண்டு ஆந்திரா திரும்பியுள்ளார். அவர் 2012 ஏப்ரல் 6ம் தேதி கரீம் நகரில் காவல்துறையுடன் நடந்த மோதல் படுகொலையில் கொல்லப்பட்டார்.

மேற்சொன்ன விசயங்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட 5 குற்றவாளிகளும் சவூதி அரேபியாவை சேர்ந்த நான்கு தேடப்படும் குற்றவாளிகளும் ‘தீவிரவாத செயல்களுக்கு முந்தைய சதி செயல்களில் ஈடுபட்டது, தங்களது கொள்கையை சக சிந்தனை உள்ளவர்களிடம் பகிர்ந்து கொண்டது, மேலும் அவர்களை தடை செய்யப்பட்ட லஷ்கர் இயக்கத்தில் சேர்த்து கொண்டது‘ என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

## குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான ஆதாரங்கள்

1) 1ம், 2ம், 3ம் & 5ம் குற்றவாளிகளிடம் இருந்து கைபற்றப்பட்ட ஆயுதங்கள், வெடி மருந்துகள் மற்றும் குற்றசாட்டிற்குரிய பொருட்கள்.

2) குற்றத்தை ஒப்புக்கொண்டு குற்ற வாளிகள் அளித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம்.

3) u/s 164 Cr.P.Cயின் படி சில சாட்சியங்கள் அளித்த வாக்குமூலம்.

4) குற்றவாளிகளின் வீடுகளை சோதனை செய்தபோது உள்ள பஞ்சனாமாக்கள்.

5) குற்றவாளிகளிடம் இருந்து மீட்கப்பட்ட சில இந்து தலைவர்களின் புகைப்படங்கள்.

6) IMMM உருவாக்கம் குறித்து அறிவிப்ப தற்காக ஹைதராபாத் செய்தி நிறுவனத்துக்கு அனுப்பப்பட்ட துண்டு சீட்டு.

7) 5ம் குற்றவாளியின் அறிவுறுத்தலின்

பெயரில் 1ம் குற்றவாளி உருவாக்கிய இமெயில் ஐடி மற்றும் பாஸ்வேர்ட். மேலும் அதில் எழுதி வரைவு பெட்டியில் சேமித்து வைக்கப்பட்ட இமெயில் செய்திகள்.

8) காவல்துறையால் மீட்டு எடுக்கப்பட்ட குறியீட்டு செய்தி. அதில் 'நாந்தேத் மற்றும் ஹைதராபாத்தின் இலக்குகள் முறையாக கண்காணிக்கப்பட வேண்டும், மற்ற தளவாடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது' போன்றவை 1ம் குற்றவாளி & 2ம் குற்றவாளிக்கு 5ம் குற்ற வாளி அறிவுறுத்துவதாக இருந்தது.

9) 1ம் குற்றவாளி & 2ம் குற்றவாளி சென்ற இணையதள நிறுவனத்தின் வருகை புத்தகம் அவர்களது பெயர்களுடன்.

10) கம்யூட்டர் சென்டரிலிருந்து கைப்பற்றப் பட்ட கம்யூட்டர் ஹார்ட் டிஸ்குகள்.

11) மும்பையின் ஒரு விருந்தினர் மாளிகை உரிமையாளர் முன்னர் செய்யப்பட்ட அடையாள அணிவகுப்பின் அறிக்கை. அதில் அவர் 5ம் குற்றவாளி ஒரு அறை முன்பதிவு செய்திருந்த தாகவும், அதில் தங்குவதற்கு 2017 ஜூலை 17 அன்று 1 முதல் 3 வரை உள்ள குற்றவாளிகள் வந்திருந்ததாகவும், அவர்கள் தங்கள் திட்டத்தை செயல்படுத்தும் முறையை ஆலோசித்து ஏற்றுக்கொண்டதாகவும் தெரிவித்து இருந்தார்.

காவல்துறை கை வைக்க முடியாத அல்லது உருவாக்க முடியாத எந்த ஒரு ஆதாரமும் இதில் இல்லை. எந்த வகையில் கணக்கிட்டாலும், இந்த ஆதாரங்கள் உறுதியான, நம்பகத்தன்மை மிக்க, மறுக்க முடியாத ஆதாரமாக கொள்ள முடியாது. அதன் நிலையில் அது நம்பிக்கை ஏற்படுத்துவதாக இல்லை.

குற்றவாளிகள் அவர்களாகவே விரும்பி வாக்குமூலம் அளித்தார்களா அல்லது மிரட்டி வாங்கப்பட்டதா என்பது தெரியவில்லை. பஞ்சனாமா சாட்சிகளும் மற்ற இதர சாட்சிகளும் நேர்மையானது தானா அல்லது ஜோடிக்கப்பட்டதா என்பதும் தெரியவில்லை. அவர்கள் உண்மைகளை அகற்றிவிட்டார்களா அல்லது போலீஸ் கூறுவதை கிளி பிள்ளைபோல கூறினார்களா என்பதும் தெரியவில்லை. அந்த இன்டெர்நெட் சென்டரில் இருந்து பெறப்பட்ட வருகைப்பதிவு புத்தகத்தில் குற்றவாளியின் கையெழுத்து இருந்ததா? அவ்வாறு இருந் திருந்தால் கையெழுத்து வல்லுநரிடம் கருத்து கேட்கபட்டதா என்பதும் தெரியவில்லை.

எந்த அடிப்படையில் அந்த இன்டெர்நெட் சென்டரில் இருந்து ஹார்ட் டிஸ்குகள் பறிமுதல் செய்யப்பட்டது; அதன் பேரில் சைபர் பிரிவு வல்லுநரிடம் கருத்து பெறப்பட்டதா என்பதும் தெரியவில்லை. குற்றவாளிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட செல்போன்கள் அவர்களு டையது தானா என்பதும்; அவ்வாறெனில், அதன் CDR எனப்படும் அழைப்பு தகவல் பதிவுகள் பெறப்பட்டதா என்பதும் தெரியவில்லை. துப்பாக்கிகள் மற்றும் வெடி மருந்துகள் எங்கிருந்து பெறப்பட்டது என்பதும்; ஒவ்வொரு இமெயில் கணக்கு மற்றும் இமெயில் செய்தியின் ஐபி (IP) அட்ரஸ், MAC அட்ரஸ், இடம், தேதி மற்றும் நேரம் கண்டுபிடிக்கபட்டதா என்பதும் தெரியவில்லை. அதிலுள்ள இமெயில் செய்திகள் தயார் செய்து சேமித்து மட்டும் வைக்கப்பட்டதா அல்லது அனுப்பப்பட்டதா போன்றவை கண்டுபிடிக்கபட்டதா என்பதும் தெரியவில்லை. விசாரணை நடந்திருந்தால், சாட்சியங்களும் ஆதாரங்களும் கடுமையான கண்காணிப்புக்கு உட்படுத்தி இருந்தால் இவையெல்லாம் தெரிய வந்திருக்கும்.

ஆனால் முஸ்லிம்கள் மீது குற்றம் சுமத்தப் பட்டுள்ள குண்டு வெடிப்பு வழக்குகளாகட்டும் பயங்கரவாதம் சம்மந்தபட்ட வழக்குகளாகட்டும் அதிலுள்ள அனுபவம் மகிழ்ச்சிக்குரியதாக இல்லை. மும்பை புறநகர் குண்டுவெடிப்பு 2006, பெரும் வெடி மருந்து மற்றும் ஆயுத குவியல் வழக்கு (அவுரங்காபாத்) 2006, ஜெர்மன் பேக்கரி குண்டுவெடிப்பு வழக்கு (புனே) 2010, தில்சுக் நகர் குண்டுவெடிப்பு வழக்கு (ஹைதராபாத்) 2013 போன்ற வழக்குகளில் பகுதி 5 முதல் 8 வரை நாம் இதனை பார்த்தோம். இந்த வழக்கானது தில்சுக்நகர் வழக்கு போன்றதொரு வழக்கு ஆகும். அந்த வழக்கில் நீதிமன்றம் குற்றவாளிகள் வெளிப்படுத்திய இமெயில் ஐடிகளை ஏற்று கொண்டது. காவல்துறையினர் அந்த இமெயில் செய்திகளின் ஐபி (IP) அட்ரஸ், MAC அட்ரஸ், இடம், தேதி மற்றும் நேரம் ஆகிவற்றை கண்டறியாத போதும், லேப்டாப் போன்ற

கருவிகள் எதையும் கைப்பற்றாத போதும் நீதிமன்றம் ஏற்று கொண்டது. அவ்வாறு செய்திருந்தால், அவை அந்த இமெயில் கணக்குகளை உருவாக்கிவர், செய்திகளை அனுப்பியவர் மற்றும் செய்திகளை பெற்று கொண்டவர் என அனைவரையும் அது காட்டி கொடுத்திருக்கும். குற்றவாளிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள் எனும் அடிப் படையிலேயே நீதிமன்றம் அவற்றை ஏற்று கொண்டது.

இத்தனைக்கும் அவர்கள் தங்களது வாக்கு மூலத்தை திரும்பப் பெறுவதாக மனு செய்திருந் தனர்; அதை நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.


குறுக்கு விசாரணையின் போது சாட்சிகளின் நம்பகத்தன்மை கேள்விக்குறியான பின்னரும் மீட்கப்பட்ட, கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் நடந்த சம்பவங்கள் ஆகியவற்றின் ஆதாரங்களை நீதிமன்றம் ஏற்று கொண்டது.

தில்சுக்நகர் வழக்கில் குற்றவாளிகளின் மொபைல்களிலிருந்து பெறப்பட்ட அழைப்பு தகவல் பதிவுகள் மற்றும் TV9 சேனலில் வந்த ஒரு உண்மையான சாட்சியின் வீடியோ பதிவு ஆகியவை மிக முக்கியமான ஆதாரமாகும். இதை வைத்தே குற்றவாளிகள் அந்த வழக்கில் சம்மந்தப் பட்டுள்ளனரா அல்லது நிரபராதியா என்பதை அறிந்து கொள்ள முடியும். ஆனால் அரசு தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் அழைப்பு பதிவு தகவல்களை சமர்பிக்கவுமில்லை; அந்த வீடியோவை போட்டு காட்டவுமில்லை; நீதிமன்றம் இவற்றை செய்யும் படி கோரவு மில்லை. பலகீனமான எளிதில் தகர்க்க கூடிய ஆதாரங்களின் அடிப்படையில் நீதிமன்றம் ஐந்து குற்றவாளிகளுக்கும் மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்தது.

தில்சுக்நகர் வழக்கின் தீர்ப்பு ஒரு வழிகாட்டி என்று கொண்டால் நாந்தத் வழக்கின் தீர்ப்பு ஒரு முன்கூட்டியே எடுக்கப்பட்ட தீர்மானம் போன்றதாகும். இந்த வழக்கின் குற்றவாளிகள் வழக்கை வாதாடுவதன் பயனற்ற தன்மை பற்றியும் மேலும் பல ஆண்டுகளை வீணாக கழிக்க வேண்டும் என்பது பற்றியும் உணர்ந்து இருந்தனர். அவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றங் களுக்கு அதிகபட்சமாக ஏழு வருட கடுங்காவல் தண்டனை தான் வழங்கப்படும்; மரண தண்டனை அல்ல என்பதை எண்ணிய அவர்கள் குற்ற ஒப்புதல் அளித்து இதிலிருந்து விடுபட முனைந்தனர். அதன்படி அவர்கள் நீதிமன்ற த்தில் மனு ஒன்றை தாக்கல் செய்தனர். அதன் மீது கருத்துரை வழங்குமாறு ATSஐ கேட்டு கொண்டது நீதிமன்றம். இந்த சமயத்தில் ATS, NIA மற்றும் IB ஆகிய அதிகார அமைப்புகள் நடப்பவை குறித்து எச்சரிக்கையாக இருக்க துவங்கிவிட்டனர். இதுபோல அடுத்தடுத்த வழக்குகளில் குற்ற ஒப்புதல் அளிப்பது அவர்களுக்கு நன்றாக இருக்காது.

ஏனெனில், அது அவர்களின் நம்பகத் தன்மையை கேள்விக்குறி ஆக்கிவிடும். ஆகவே, IB மற்றும் NIA வின் ஆலோசனையின் பேரில் மஹாராஷ்ட்ராவின் ATS குற்றவாளிகளின் ஒப்புதல் வாக்குமூலத்திற்கு எதிராக ஆட்சேபம் தெரிவித்தது.

**அடுத்த இதழில் தொடரும்..**



# நான் மதீனாவில் கண்டதும் கேட்டதும்



**இந்நகரின்** பழயப் பெயர் "யத்ரிப்" இந்நகரில் நபிகள் நாயகம் (ஸல்) வாழ்ந்து பல்வேறு நாடுகளிலிருந்து வரும் தூதுக் குழுவினரை வரவேற்று உபசரித்து, முன்மாதிரியான ஆட்சி நிர்வாகம் நடத்திய இடமாகையால் இது அரபியில் மதீனா என பெயர் பெற்றது. நாங்கள் வசித்த நகாஸா பகுதியிலிருந்து பேருந்து மூலம் 30-12-2008 காலை சுமார் 11 மணிக்கு புறப்பட்டு ஹாஜிகள் தங்கும் விடுதிகளுக்கு சென்று ஹாஜிகளை ஒவ்வொரு விடுதியிலும் சென்று எடுத்து இரவு சுமார் 10 மணிக்கு மதீனா வந்தடைந்தோம்.

"மஸ்ஜிதே இஜாபாவுக்கு சிறிய தூரத்தில் நாங்கள் தங்கிய தங்கு விடுதி. இங்கு ஏழு பேருக்கு ஒரு அறை என ஒதுக்கியிருந்தார்கள். என்னோடு மூன்று பேர் மேலும் மௌவி. R.M. அல்தாப் ஹூஸன் தாவூ ஈரோட்டைச் சார்ந்த இரு பெண் ஹாஜிகள் ஓர் ஹாஜி ஆக ஏழுபேர் ஒரு ரூமில் இருந்தோம். பேருந்தை விட்டு நாம் தங்கப் போகும் தங்கு விடுதி வந்ததும் நீங்கள் யாரோடு தங்க போகிறீர்கள் என அரசு சார்பான நபர்கள் வந்து ஹாஜிகளை கேட்டு அறை ஒதுக்கிறார்கள். வழிப் பிரயாணக்களைப்பு ஒதுக்கப்பட்ட அறைகளில் பிரயாண சாதனங்களை வைத்து எல்லோரும் குளித்து இஷா தொழுது தூங்கினோம். காலையில் எழுந்து குளித்து புத்தாடை (வெண்மையான ஆடை) அணிந்து நறுமணம் பூசி, மதீனா பள்ளியில் சொல்லப்படும் "தஹஜ்ஜத்" பாங்கு கேட்ட உடன் தங்கு விடுதியில் இருந்து ஹாஜிகள் புறப்பட்டு "மஸ்ஜிதுன் நபவிக்குச்" சென்றோம். காலையில் தங்கு விடுதிகளிலிருந்து ஹாஜிகள் பனிமழையையும் பொருட்படுத்தாமல் சாரை சாரையாக "மஸ்ஜிதுன் நபவிக்கு" போவது மகிழ்ச்சியை தருகிறது. நாங்கள் தங்கு விடுதியை விட்டு மஸ்ஜிதுந் நபவி மினாரவை பார்த்த உடன் மட்டில்லா மகிழ்வு, சிறிது தூரம் வந்ததும் பெருமானார் துயில் கொள்ளும் பச்சைகுப்பாவை பார்த்ததும் நம்மை அறியாமல் ஆனந்தக் கண்ணீர் ஏற்படுகிறது. சுபுகுத் தொழுகை பாங்கு போடப்பட்டதும் மக்கள் சுன்னத்



**பீ.எம். அப்துல் கரீம்**
*(ஆலோசனைக்குழுத் தலைவர் இ.இ.மு.சங்கம், குளச்சல்)*

தொழுது முடிந்த சிறிது நேரத்தில் இகாமத் சொல்லப்பட்டதும் இமாம் தொழுகையை ஆரம்பிக்கிறார். இமாம் நிதானமான முறையில் பாத்தியா, சூராக்கள் ஓதி தொழ வைக்கிறார். மதீனாவில் பாங்கானாலும், தொழுகையானாலும் ரொம்பவும் நிதானமாக உள்ளது. காலை சுபுகு தொழுகைக்குப் பின் மக்கள் கூட்டம் கூட்டமாக பெருமானார் தோழர்களான ஆபூபக்கர் சித்தீக் (ரழி), உமர் (ரழி) ஆகியோர் நல்லடக்கமாகியுள்ள இடங்களுக்கு வரிசையாக நின்று செல்லு கின்றனர். அலை மோதும் கூட்டத்தை ஒழுங்கு படுத்த அரசு சார்பானவர்கள் சவூதிபோலீஸ் நிற்கின்றனர். அரசு சார்பானவர் ஒருவர் உயரமான இடத்தில் நின்று "ரவ்ளாஷரீபை" நோக்கி துஆச் செய்யாதீர்கள். கஃபா பக்கம் துஆச் செய்யுங்களென சப்தமாக சொல்கிறார். பெருமானாருக்கு முன்னால் சப்தமிட்டு பேசாதீர்கள் என்ற மறை எச்சரிக்கை. இவ்வளவு சப்தமிடுவதை ரவ்ளாஷரீபு பக்கம் தவிர்கலாம்.

மக்கள் (ஹாஜிகள்) வரிசையாக சென்று "சலாம்" சொல்லி வெளியே வந்து துஆச் செய்கினர். வெளியே வந்து துஆச் செய்யுமிடங் களிலும் அரசு சார்பானவர்கள் வந்து கஃபாவை பார்த்து துஆச் செய்யுங்கள் என சொல்கிறார்கள். பல நாட்டவர்ரும் பரவலாக வெளிப்பகுதிகளில் குழுமியிருந்து பாத்திஹா யாஸீன் சூரா ஆகியவை ஓதிவிட்டு துஆச் செய்கிறார்கள். இவர்களிடம் அரசு சார்பானவர் வாக்குவா தங்களில் ஈடுபடு கின்றனர். பகல் பொழுதா இரவு பொழுதா என அறிய முடியாத மின் விளக்கு அலங்காரம் றவ்லா ஷரீபில்.

"மஸ்ஜிதுன் நபவிய்யில் ஹஹம் ஷரீபை போலில்லாமல் பெண்கள் தொழ தனி இடம் உள்ளது. ஐவேளைத் தொழுகை, தஹஜ்ஜத் உட்பட ஹஹம் ஷரீபில் ஆறு வேளை பாங்கு சொல்லப்படுகிறது, கழிவறை, குளியலறை உலூ செய்யும் இடம் நல்லவசதி சவூதி அரசு செய்துள்ளது.

ஒவ்வொருத் தொழுகை முடிந்ததும் மக்கள் நபிகள் நாயகம், தோழர்களின் அடக்க இடம் சென்று சலாம் சொல்லி. துஆச் செய்வதும் வழமையாக நடைபெறும் நிகழ்வு. துருக்கியர் பேட்ரியினால் ஆன மைக் வைத்து அவர்கள் குழுவினர் ஓர் இமாம் கூட்டு துஆச் செய்வார். நானும் சில நேரங்களில் பங்கு பெற்றுள்ளேன்.

நாங்கள் தங்கியிருந்த விடுதிக்கு மஸ்ஜிதுன் நபவியிலிருந்து புறப்பட்டு ஜன்னதுல் பஃகியை ஒட்டிய பாதை ஓரமாக சென்று பாலத்தை அடைய தார் ரோட்டை கடந்து சென்றால் ஓர் பெரிய மைதானம் வரும் அதில் நடந்து சென்றால் நாங்கள் தங்கிய பகுதி வரும். எங்கள் தங்கு விடுதிக்கு போகும் பொழுது ரோட்டோரமாக "மஸ்ஜிதே இஜாபா" உள்ளது. ஒவ்வொரு நாளும் ஐவேளை பாங்கு, தஹஜ்ஜத் பாங்கு கேட்டு தங்கு விடுதியிலிருந்து புறப்பட்டு "மஸ்ஜிதே இஜாபா" ஓரமாக நடந்துரோடு, பாலம் கடந்து பஃகீவழியாக மஸ்ஜிதுன்நபவிக்குச் செல்வோம். இறைவனருளால் நாற்பது நேர தொழுகை மஸ்ஜிதுன்நபவியில் தொழும் பாக்கியம் கிடைத்தது. அல்ஹம்துலில்லாஹ்.

நாங்கள் மஸ்ஜிதுன் நபவியில் தொழுது விட்டு தங்குவிடுதிக்கு போகும் போது ஓர் நீக்ரோ ஆலிம் ஜன்னதுல்பஃகீ அருகே வெளிப்பகுதியில் நின்று அங்கு அடங்கியுள்ள பெருமானார் தோழர்கள் உதுமான் (ரழி) அப்துல்லாஹ் இப்னுமஸ்ஊத் (ரழி) அலீமத்துஸ்ஸஃதிய்யா, நபியின் மனைவியர் மகன் இப்ராஹீம் நபிக் குடும்பத்தார், மாலிக்இமாம் நபுவி இமாம் என்று பல பெரியார்கள் பெயர்களை குறிப்பிட்டு துஆச் செய்தார். நாங்கள் அதில் கலந்து கொண்டோம். அங்கு கூடிய மக்கள் சவூதி ரியாள் எல்லோரும் கொடுத்தோம். அவர் துஆ ஓதிய முறை அடங்கியுள்ள முக்கிய நபித்தோழர்களின் பெயர்களை குறிப்பிட்டதிலிருந்து அவர் விபரம் அறிந்தவர் என்பதை புரிந்து கொண்டோம்.

ஜன்னதுல் பகீஹ் கபர்ஸ்தானங்கள் மேல் முகடு, மீசான் எதுவுமின்றி மைதானமாக காட்சியளிப்பதைப் பார்த்தால் டெல்கி ஜூம்ஆ மஸ்ஜிதின் ஓர் வாசலுக்கு நேராக பார்த்தால் அழகிய ரோசா செடிகள் பல்வேறு பூவகைகள் அலங்கரிக்கும் தோட்டத்தில் இந்திய அரசின் முதல் கல்வி அமைச்சர் மௌலானா அபுல்கலாம் ஆசாத், சுபாஸின் ஆலோசகராகவும், மத்திய அரசில் மந்திரியாக இருந்த ஷாநவாஸ்கான் அடக்கமாகியுள்ள காட்சியும் ஒப்பிட்டு பார்க்கும் பொழுது வேதனை ஏற்படுகிறது. ஜன்னதுல் பகீஹில் இப்னு தைமியா கொள்கை இப்போதைய சவூதி அரசு அமுல்படுத்தியுள்ளது.


vaigarai velicham official

ஜன்னதுல் பகீஹியில் ஹஜ்ஜூக்குச் செல்லும் ஹாஜிகளில் மரணிப்பவர்களை அடக்கும் இடம் தனியாகவும், அவ்வூர் வாசிகள் மரணித்தால் தனியாக அடக்க இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் நம் நாட்டவர் மீசானுக்கு பகரம் இரு கல்லு சிறிய மண்மேடு போடப்பட்டு வைக்கப் பட்டுள்ளது. மதீனாவாசிகள் அந்நாட்டினர் கபுறுகளில் காங்கிரேட்டிலான மீசான்கல், அதில் ஸ்டீலான பெயர் குறிப்பு காணப்பகிறது. அந்நாட்டவர் அஸர் தொழுகைக்குப்பின் உள்ளே வந்து மீசான் கல்லில் விபரத்தைப் பார்த்து தாய் தந்தையர் மற்றோருக்காக "துஆச்" செய்கின்றனர். இது நாடோறும் அங்கு நடைபெறும் நிகழ்ச்சி யாகும். அதில் உலக இஸ்லாமிய மாநாடு மக்காவில் இப்னுசுவூத் தலையில் நடைபெற்றது. அவ்வமயம் நம் இந்திய இஸ்லாமிய குழுவுக்கு தலைமை ஏற்று சென்ற மௌலானா முகம்மதலி சவூதி அரசு நாதாக்கள் கபுறுகளை இடித்து சரித்திர சின்னங்களை தரைமட்ட மாக்கியதை கண்டித்து உரையாற்றினார் என்ற வரலாற்று நிகழ்வு நமக்கு ஆர்தல் தரவல்லது. இஸ்லாம் தக்வாவை வைத்து தான் உயர்வு, தாழ்வை சொல்கிறது மனிதர்களை இனம் பிரிக்கும் கொள்கை இஸ்லாத்தில் இல்லாதது.

மஸ்ஜிதுன் நபவியை சுற்றி கோல்ட் நகை கடைகள், பெருமளவு காணப்படுகிறது மற்று முஸல்லா, தஸ்பீஹ் மணி, தொப்பி, அத்தர் போன்ற மணப் பொருள் கடைகள் பெருமளவு காணப் படுகிறது. கொஞ்சம் தூரத்திலுள்ள பஜாரில் ஈத்தப்பழத்தின் பல வகையான தரம் உள்ள கடைக்கள் காணப்படுகிறது. மஸ்ஜிதுன் நபவியில் ஹிப்ளு மத்றஸா நடைபெறுகிறது. உஸ்தாதுமார்களில் அரபியும், அஜமிய்யும் காணப்படுகின்றனர். மாணவர்களும் அவ்வாறே உஸ்தாதுமார்களில் சில பேர் நாற்காலியிலும் சுற்றி மாணவர்களுமாக இருந்தும் குர்ஆன் மனனம் செய்கின்றனர். உஸ்தாதுமார் பெரும்பாலோர் தொப்பி தலைப்பாகையுடனும் அதே போன்று மாணவர்களும் காட்சியளிக்கின்றனர். தலையை திறந்த உஸ்தாதை காணமுடியவில்லை.

மதீனாவில் தொடர்ந்து இரு நாட்கள் கடும் குளிராக இருந்தது. பகல் 12 மணிக்கும் உடலை குளிர்வாட்டும். பனி உடுப்பு, கால் பகுதிக்கு உறையும் போட்டு தான் போக முடியும். நாங்கள்



வசித்தப்பகுதிக்கு சிறிது தூரத்தில் பேரீத்தம் தோட்டம் காணப்படும். மஸ்ஜிதுன் நபவிய்யைச் சுற்றி பள்ளிவாசல்கள் மஸ்ஜிதேபிலால் மஸ்ஜிதே இஜாபா மஸ்ஜிதே அபூபக்கர் மஸ்ஜிதே அலி மஸ்ஜிதே அபூஹூரைரா, மஸ்ஜிதுமாமா போன்றவை காணப்படுகிறது.

அகன்ற ரோட்டைச் சுற்றி செடி கொடிகள், ஈத்த மரக்கன்றுகள் வைக்கப்பட்டு அழகாக இருக்கிறது. நம் பகுதி மக்கள் பேரீத்தம் பழக் கடை, மற்றக் கடைகளில் பணி செய்வதைப் பார்க்கலாம். ஹோட்டல் பெரும்பாலும் மலையாளிகள் நடத்துகின்றனர். நம் நாட்டு இட்லி, தோசை, இடியாப்பம், ஆப்பம், சப்பாத்தி, புரோட்டா, இறச்சி சால்னா, சாம்பார், சட்டினி எல்லாம் உண்டு. மஸ்ஜிதுன் நபவிய்யில் திண்ணைத் தோழர்கள் வசித்த இடம் காணப் படுகிறது. பெருமானார் காலத்தில் மண் சுவரோடு, ஈத்தமரத்தால் தூண்களும், ஈத்தமர ஓலையால் வேயப்பட்ட மேற்கூரையுமாக இருந்த மஸ்ஜிதுன் நபயிய்யின் ஒருபகுதி திண்ணைத் தோழர்கள் வசித்த இடம். மஸ்ஜிதுந் நபவிய்யும் இப்பகுதியும் பொலிவுடன் காட்சியளிக்கிறது. திண்ணைத் தோழர்களின் இருப்பிடத்தில் இருந்து தொழுகை, யாஸீன் சூரா துஆ, திகிர் என ஹாஜிகள் ஈடுபடுகின்றனர்.

நானும் திண்ணைத் தோழர் இருப்பிடத்தி லிருந்து துஆச் செய்தேன். அந்நேரம் மனதில் ஏற்பட்ட சந்தோசமும் பரவசமும் வார்த்தை களால் சொல்ல முடியாதது திண்ணைத் தோழர் வசித்த இடத்தில் பெருமானார் ரவ்ளா ஷரீபுக் குரிய முக்கிய ஓர்வாசல் உள்ளது. அந்த வாசல் பகுதியில் மக்கள் வந்து கதவில் முத்தமிட முயலும் போது சவூதி போலீஸ் அதை அனுமதிப் பதில்லை.

திண்ணைத் தோழர்கள் வசித்த இடத்தில் ஹாஜிகள் பரக்கத்திற்காக சிறிது நேரம் இருந்து செல்கின்றனர். உள் பகுதி மினாராவில் புர்தாஷரீபு புகழ்பா அரபியில் எழுதப்பட்டுள்ளது. மற்றும் பெருமானார் புகழ் பாக்கள் காணப்படுகிறது. திண்ணை தோழர் இருப்பிடத்தில் அமர்ந்து துஆச் செய்தோம்.

முஹர்ரம் நோன்பு பிடிக்கும் பாக்கியம் மதீனாவில் கிடைத்தது. நோன்பு திறக்க மஸ்ஜிதுந் நபவிய்யில் ஸம்ஸம் நீர் பேரீத்தம் பழம் ரொட்டி வெண்ணெய் போன்றவை பெட்டியில் வைக்கல் பட்டு நோன்பாளிகளுக்கு கொடுக்க அழகிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மஃரிபு பாங்கு சொல்வதைக் கேட்டதும். நோன்பு திறப்பு நிகழ்வு நடக்கிறது. பிறகு மஃரிபு தொழுகை வழமைபோல் நடக்கிறது. ஹிஜ்ரி வருட பிறப்பை வைத்து மஸ்ஜிதுன் நபவிக்கு வரும் ஆட்களுக்கு அத்தர் போன்றவை இளைஞர்களால் பூசப்படுகிறது.

ரவ்ளாவில் இருக்கும் பொழுது வெயில் சாய்ந்ததும் மேல்பகுதி நகர்ந்து வெளி ஏற்படும். பகற்பொழுது மேற்பகுதி நகர்ந்து கூரையாகி விடும். மேற்கூரை அழகிய வேலைப்பாடுடன் காணப்படும். இது பார்ப்போரை வியக்க வைக்கும். ஸம்-ஸம் நீர் அருந்தும் வசதி ரவ்ளா ஷரீபில் செய்யப்பட்டுள்ளது.

மஸ்ஜிதுந் நபவிய்யில் ஓர் ஜூம்ஆ தொழுகை தொழும் பாக்கியம் கிடைத்தது. ஜூம்ஆவிற்கு நேரமே ரவ்ளா ஷரீபுக்கு சென்றாலே உள் பகுதியில் இடம் கிடைக்கும் முதல் இரண்டாவது பாங்கிற்கு பிறகு இமாம் குதுபா ஓதுகிறார். குதுபா ஓதும்போது இமாம் வடியுடன் காட்சி யளிக்கிறார். இமாம்குதுபாவில் இன்று உலகில் முஸ்லிம்களிடம் ஈமான் குறைந்து வருகிறது. முஸ்லிம்களிடம் ஈமான் பலகீனமாகிறபோது ஒரு காலம் உண்டாகும். அப்பொழுது பல நாள் பட்டினிக்குப்பின் ஒரு மனிதன் உணவு கிடைத்தால் எப்படிப்பட்ட உணர்ச்சியுடனும் அவா உடனும் உணவு உண்பானோ அதைப் போல முஸ்லிம்களை எதிரிகள் அழிப்பார்கள் என பெருமானார் (ஸல்) ஒரு பொழுது சொன்னபோதுயா! ரசூலுல்லாஹ், முஸ்லிம்கள் நாம் அப்பொழுது எண்ணிக்கையில் எப்படி இருப்போமென அருமைத் தோழர்கள் வினா எழுப்ப அப்பொழுது முஸ்லிம்கள் எண்ணிக் கையில் அதிகம் இருப்பார்கள். ஆனால் அவர்களின் ஈமான் காற்றாட்டு வெள்ளத்தில் காணப்படும் நுரையினை ஒத்ததாக இருக்குமென (பலகீனமாக) பெருமானார் சொன்னார்கள். இந்நிகழ்வை குறிப்பிட்டு தற்கால முஸ்லிம் களின் நிலையை சுட்டிக் காட்டினார். இரண்டாவது குதுபாவில் ஹாஜிகளுக்காகவும், உலக முஸ்லிம்களுக்காகவும் ஹறமைனி, ஷரீபைனிக்காகவும் துஆச் செய்தார்.

மஸ்ஜிதுன் நபவி பள்ளியை ஒட்டி 4-வது நம்பர்கழிவறையை ஒட்டி நேராக போகும்போது ஹமாமா பள்ளி அபூபக்கர் (ரழி) வீடு (பள்ளி) பராமரிப்பதைப் பார்த்தோம். இருவீடுகளிலும் நிற்கும் காவலாளிகளிடம் அனுமதி கேட்டு உள்ளே சென்று பார்த்தோம். பெருமானாரின் உற்றத்தோழர் சித்தீகுல் அக்பர்வீடு மேகம் குடை பெருமானாருக்கு.நிழல் கொடுத்த இடம் போன்ற சரித்திர பின்னணிகளை அறிந்த நமக்கு நம்மை அறியாமலேயே ஓர் உணர்வு ஏற்படுகிறது. பழயமண் சுவரின் சில பகுதிகளை உள்ளடக்கி காங்கிரேட்டு சுவரும் மற்று வேலைகளும் நடை பெறுகிறது.


ஹஸ்றத் அலி (ரழி) வீடு மஸ்ஜித் ஆக்கப்பட்டு பூட்டு போடப்பட்டுள்ளது. காம்பவுண்ட் கேற்று திறந்திருந்ததால் உள்ளே சென்று (மார்பிள் போடப்பட்டுள்ளதால்) சுத்தமாக இருப்பதால் நானும், ஈரோடு ஜாபர் ஹாஜியாரும் இருறக் அத்சுன்னத் தொழுதோம். இவ்வீடு ஏன்? பூட்டப் பட்டுள்ளது என விசாரித்ததில் ஈரானியர் இங்கு வந்து செய்யும் செயல் சவூதி அரசின் கொள்கைக்கு உடன் படாது. நாங்கள் தங்கிய மஸ்ஜிதே இஜாபா பகுதியை சுற்றிய பகுதிகளில் இந்தியர் பாகிஸ்தானியர் உணவு விடுதிகள் காணப்படுகிறது.

“மஸ்ஜிதே இஜாபாவுக்கு மிகவும் அருகே பழவகைகடைகள் ஜவுளி, தொப்பி சல்லாக் கடைகள் காணப்படுகிறது. மேலும் பேரீத்தப் பழம் அத்திப்பழம் விற்கும் கடைகளும் காணப்படுகிறது. நாங்கள் ஹாஜி மௌலவி அல்தாப்ஹூசைன் தாவூதி தலைமையில் ஒரு நபருக்கு பத்துரியால் வீதம் பேசி ஓர் பேருந்து ஏற்பாடு செய்து உஹது, அகழி யுத்தம் நடந்த இடம் மஸ்ஜிதேகுபா மஸ்ஜிதேஜின் மஸ்ஜிதே ஜூம்ஆ, இரட்டைக் கிப்லா பள்ளி வாசல் போன்றவை சுற்றிப் பார்த்தோம்.

-தொடரும்.


vaigarai velicham official

ஆங்கிலம் : JOHN FEFFER தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




**ஜான் பெஃபர் கூறுகின்றார்**

இஸ்லாமிய உலகம், அத்தனை வெறுப்புப் பிரச்சாத்திற்கிடையேயும் மேலும் வளர்ந்து வருகின்றது.

துருக்கியில், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களுக்கு இஸ்லாமே காரணம். அதேபோல் அதன் வேகமான பொருளாதார வளர்சிக்கும், இஸ்லாமே காரணம். அங்கே 21ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கும் அதுவே காரணம்.

இஸ்தான்புல் (அன்றைய துருக்கியின் தலை நகர்), 21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உழைப்பின் சிகரமாக இருந்தது. சிந்தனை வளத்தில், ஆராய்ச்சியில் இவற்றில் எல்லாம் முன்னே நின்றது. மேலை நாட்டவர்க்கும் அதேபோல் கீழை நாட்டவர்க்கும் ஒரே நேரத்தில் பெரும் சவாலாக இருந்தது. இரு பகுதிகளையும், அதாவது மேலை நாடுகளையும் கீழை நாடுகளையும், ஏக காலத்தில் விஞ்சி நின்றது. ஐரோப்பாவையும் விஞ்சியது, அமெரிக்காவை அதிர வைத்தது. துருக்கி மிகப்பெரியதொரு உற்பத்தி நகரமாக ஆனது.

அது, ஓர் இஸ்லாமியப் பழமை வாய்ந்த நாடாகும். ஆனால், அஃதோர் அமைதியான மாற்றத்திற்கும் புரட்சிக்கும் உள்ளாகி வந்தது.

இந்த அரசியல் மற்றும், பொருளாதார மாற்றங்கள் அனைத்தும் வளர்ந்து வரும் விஞ்ஞான அறிவோடு இணைந்து பிணைந்து வந்துது. முஸ்லிம் உலகில் ஏற்பட்ட அன்றாட விஞ்ஞான மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அல்-ஜெசீரா என்ற ஊடகம் - (தொலைக்காட்சி ஊடகம்) மிகவும் உறுதுணையாக நின்றது. முஸ்லிம் உலகம் முற்றாக, அல்ஜெசீராவோடு பிணைந்து நின்றது.

அல்ஜெசீரா பல்வேறு விதமான அறிக்கைகள், விவாதங்கள், இவற்றின் வழி தனது நேயர்களுக்கு பெரிய அளவில் அறிவைத் தந்தது. விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அல்ஜெசீராவின் தலைசிறந்த ஊடகவியலாளர்கள், அஹ்மத், அல்ஜிஹாதி, (சவூதி அரேபியா), அம்ர் ஹாலித் எகிப்து, அஜீம் (இந்தோனேசியா) இவர்களெல்லாம் பெரியஅளவில் பார்வையாளர்களின் ஆதரவைப் பெற்றிருந்தார்கள். உண்மையில் இவையெல்லாம் மக்கள் ஆதரவு.

இதனால் இஸ்லாமிய உலகில் இணைய தளத்தை பார்ப்பவர்களின் எண்ணிக்கை அதிகமானது. ஒவ்வொரு எட்டுமாதமும் அது இரட்டிப்பாகிக்கொண்டே இருந்தது.



இப்படி அல்ஜெசீரா அரபு உலகத்தை கற்பித்தது. தன் தகவல்களால் அரபு உலகத்தின் மேல், ஆதிக்கம் செலுத்தி வந்தது. 2000ஆம் ஆண்டுக்குப் பின் அல்ஜெசீரா அரபு உலகில் ஏற்படுத்திய ஆதிக்கத்திற்கும், தாக்கத்திற்கும் அளவில்லை. முகநூல், டிவிட்டர் இவையும் அல்ஜெசீரா அரபுக்களைச் சென்றடைய பெரிதும் உதவியன.

இவையெல்லாம் ஆதிக்க நாடுகளின் ஆதிக்கத் திற்கு எதிராக மக்களை கிளர்ந்தெழச் செய்தது. இதனை அரபுலக எழுச்சியை பார்த்தோம் (Arab Springs)

இந்தப் பின்னணியில்தான் அமெரிக்கா முஸ்லிம் உலகின் மேல் ஆதிக்கம் செலுத்த ஏற்பாடு செய்த 9/11/2001 தூர்ந்துபோனது.

9/11 யாரால்? யாரால்? என்ற பல இஸ்லாமிய ஊடகங்கள் வினாக்களை எழுப்பி உண்மையைப் புட்டுப் புட்டு வைத்தன.

அமெரிக்காவிலிருந்து உலக மக்கள் வரை அனைவரும் தங்கள் கருத்துக்களை மாற்றினார்கள்.

காலங்கள் நகர, நகர 9/11/2021 என்பது அதாவது அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டது அமெரிக்காவின் உள்ளிருப்பு வேலை என்பது தெளிவானது.

இறுதியில் அமெரிக்கா அதிபர்களின் பொய்களை நம்பி போருக்குப்போனவர்கள், குறிப்பாக அமெரிக்க மற்றும் பன்னாட்டு படைகளைச் சேர்ந்தவர்கள் இதனை உணர்ந் தார்கள். தங்களுக்கு வழங்கப்பட்ட விருதுகளை குப்பைத் தொட்டியில் வீசி எறிந்தார்கள்.

அதுவரை அல்ஜெசீரா தன்னுடைய போரை விடாமல் தொடர்ந்து கொண்டிருந்தது. ஆக முஸ்லிம் உலகில், அறிவியல் புரட்சி, தகவல் தொடர்பு புரட்சி, இவற்றிற்கு அல்ஜெசீராவும் அதுபோன்ற ஊடகங்களும் பெருமளவில் துணை நின்றன.

இறுதியில் இரட்டைக் கோபுரங்களின் இடிப்பு எதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறிடவில்லை. உண்மை யைச் சொன்னால் அது பயங்கரமான பல எதிர் விளைவுகளையே ஏற்படுத்தியது. அமெரிக்காவின் எதிர்கால - இஸ்லாமோபோஃபியாவின் வளர்ச்சிக்கு அது உதவி செய்திடவில்லை.

ஆக, இஸ்லாமிய அரசு ஒன்று ஜிஹாத் வழி உருவாக்கப்பட வேண்டும் என்ற தத்துவம் மாற்றப்பட்டு வருகின்றது. அது மக்கள் திரள் ஆர்ப்பாட்டங்கள் வழியாகவும் வந்திட இயலும் என்பது உறுதி செய்யப்பட்டது. இதற்கு அரபு எழுச்சி, தூனிசியா, எகிப்பது இங்கெல்லாம் எழுந்த மக்கள் எழுச்சி ஆதாரம்.

- இன்ஷாஅல்லாஹ் தொடரும்.

**குறிப்புகள்**

1. ஜான் பெஃபர் தன்னுடைய எழுத்துக்களில் John Exposito ஜான் எக்ஸ்போசிட்டோ என்பவரை குறிப்பிடுகின்றார். இந்த ஜான் எக்ஸ்போசிட்டோ அவர்களை நமது வைகறை வெளிச்சம் வாசகர்களுக்கு நீண்ட நாட்களாகவே அறிமுகப்படுத்தி வருகின்றோம். நாம் தொடங்கி, தொடர்ந்து நடத்தி வந்த விடியல் வெள்ளி காலந்தொட்டே இது நடந்து வருகின்றது.

இவர் (1940)இல் அமெரிக்காவின் புரூக்ஸின் என்ற இடத்தில் பிறந்தவர். இஸ்லாத்தின் வளர்ச்சி, இஸ்லாமிய இயக்கங்களின் வளர்ச்சி,


vaigarai velicham official



இவற்றைப் பற்றி ஆராய்ச்சிகளைச் செய்து வருபவர். இவர் பிரசித்திப் பெற்ற ஓர் அமெரிக்க ஆய்வாளர். இவர் மதங்களைப் பற்றி பிரஸ்தாபிக்கும் ஒரு பேராசிரியர். இவருடைய அதிகாரப் பூர்வமான பட்டயம்.

Professor of Religion, International affairs and Islamic studies at Georgetown University. and Founding director of the Prince Alwareer bin talal centre for Muslim Christian understanding.

இவர் இப்படி பல பட்டயங்களுக்கும் பட்டங்களுக்கும் சொந்தக்காரரர் என்றாலும், இவருடைய ஆய்வுகளின் நோக்கம் இஸ்லாம் மீண்டும் உலகாளும் கொள்கையாக மாறி விடாமல் தடுப்பது. இதை அவர் நேரடியாகச் சொல்வதில்லை. இவருடைய ஆய்வை விரிவாகப் படித்தால்தான் இவருடைய விஷமம் புரியும்.

இவர் 1988களில் Voices of Islamic Resurgence இஸ்லாம் மீண்டும் உயிர் பெறும் குரல்கள், என்றொரு நுலை வெளியிட்டார். இந்த நூலில் இஸ்லாம் மீண்டும் உலகை ஆளும் தத்துவமாக மாறிக்கொண்டிருக்கின்றது. உலகமே உஷார் என்ற பாங்கில்தான் அந்த ஆய்வு அமைந்தது. இந்த ஆய்வை நான் (MGM) சீதக்காதி நூல் நிலையத்தில் முழுமையாகப் படித்தேன். அதனை மையப்படுத்தி பல மாணவர் அரங்கங்களில் உரைகளை ஆற்றி இருக்கின்றேன்.

இஸ்லாத்திற்கெதிரான மேலை நாட்டவர்களின் "சதி" என்ற தலைப்பில் பல பயிலரங்கங்களிலும் பேசி இருக்கின்றேன். இது எமது யூட்யூப் சானல்களிலும் கிடைக்கும், பார்க்கலாம்.

முதலில் இஸ்லாம் மீண்டும் தலை தூக்குகின்றது என்ற இந்த நூலைத் தொடர்ந்து, 1987களில் இஸ்லாமிய அபாயம் உண்மையா? பொய்யா? என்ற தலைப்பில் இன்னொரு நூல் வெளிவந்தது (Islamic threat myth or reality) வெளிவந்தது.

இதில் இஸ்லாம், நிச்சயமாகவே மேலைநாட்டு ஆதிக்கத்திற்கும், பண்பாட்டிற்கும் மிகப்பெரிய சவாலாக இருக்கும் எனக் குறிப்பிட்டார்.

பின்னர் இந்த ஆய்வுகளை சாமுவேல் P. ஹண்டிங்டன் என்ற ஆய்வாளர் போர்த் திட்டமாக 1997இல் வெளியிட்டார். அதுவே The clash of civiliations and the remaking of world order என்றொரு போர் திட்டமாக வெளிவந்தது.

அந்தத் திட்டத்தின் அடிப்படையில்தான் இன்று இஸ்லாமிய உலகம் தாக்கப்பட்டு வருகின்றது.



# அன்னை உம்முல் முந்திர் (ரழி)

**எல்லாம் வல்ல** ஏக நாயன் அல்லாஹ்வின் திருத்தூதர் அண்ணல் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் (தியாகப் பயணம்) மேற்கொண்டு மதீனா செல்வதற்கு முன்னரே இஸ்லாத்தின் தூதுச் செய்தியை தன் சார்பில் மதீனா வாழ் மக்களுக்கு எடுத்துக்கூறிட சிலரை அனுப்பி வைத்திருந்தார்கள். அப்படிச் சென்றவர்களின் முஸ்அப் பின் உமைர் (ரழி) அவர்களும் ஒருவர்.

திருமறை வசனங்களையும் அண்ணல் நபியின் அருள்மொழிகளையும் மதீனா வாசிகளிடையே எடுத்துக் கூறி இஸ்லாமியப் பிரச்சாரப் பணியில் மதீனாவில் முழு மூச்சுடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். மூஸஅப்பின் உமைர் (ரழி) அவர்கள். அன்பாளன் அல்லாஹ்வின் வழிகாட்டுதல் தம் செவிகளைத் தழுவிச் சென்ற முதல் மணித்துளியிலேயே அல்லாஹ்வின் மார்க்கத்தை நோக்கி அணி அணியாய்த் திரண்டனர். ஆண்களும், பெண்களும், இஸ்லாம் எனும் அழகிய நெறியை ஏற்பதற்கு தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் தோல்வியின் நிமிடங்கள் என்று அவர்கள் கொண்டதால்தான், அந்த உற்சாகமும் துள்ளலும் அவர்களிடம் அப்போது ஒட்டியிருந்தது.

அவர்களில் ஒரு ஆரணங்கு. அவர் பெயர் ஸல்மா பின்த் கைஸ் என்பதாகும். எனினும் வரலாற்றின் வரிகள் ‘உம்முல் முந்திர்’ என்றே விண்டுரைக்கின்றன. மதீனாவின் வீதிகளில் இஸ்லாத்தின் அழைப்புத் தென்றலாய் தவழ்ந்து வந்த துவக்க நிமிடங்களிலியே இஸ்லாத்தினால் ஈர்க்கப்பட்டார். அன்று முதல் ‘நான் ஒரு முஸ்லிம்’ என்பதில் பெருமை கொண்டு வாழ்ந்திட ஆரம்பித்தார்.

இவர்களின் சகோதரர் சுலைத் பின் கைஸ் (ரழி) அவர்கள் மாநபி என்ற பல்கலைக்கழகம் கண்டெடுத்துக் காட்டிய குதிரை வீரர். பத்ரு, உஹது, அகழ்ப்போர் என வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் வாளெடுத்து சமர் புரிந்திட சளைக்காமல் சென்றவர். ஹிஜ்ரி பதினான்காம் ஆண்டில் (கி.பி.634, நவம்பர்) யூப்ரடீஸ் நதிக் கரையில் பாரசீகர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நடைபெற்ற (ஜஸ்ர்) பாலப் போர் எனும் யுத்தத்தில் அபூ உபைதா (ரழி) தலைமையில் போரிட்ட வீரத் தளபதி சுலைத் பின் கைஸ் (ரழி) அந்தப் போரில் தன்னுயிரைத் தந்து வீரத் தியாகியாகி அல்லாஹ்விடம் சென்றடைந்தார். இவரின் அன்புச் சகோதரிதான் உம்முல் முந்திர் (ரழி) அவர்கள். முறைப்படி அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சிறிய தாயார் ஆவார்கள்.

அண்ணலார் (ஸல்) அவர்களால் மதிக்கப்படுகின்ற மாண்புமிக்கவராகத் திகழ்ந்தார் உம்முல் முந்திர் (ரழி) அவர்கள். இவர்களின் இல்லத்துக்கு




vaigarai velicham official

அண்ணலார் அடிக்கடி சென்று வருவார்கள். அவர்களிடம் அளவளாவிக் கொண்டிருப் பார்கள். அவர்கள் வீட்டில் உள்ள கணவுகளை சாப்பிடுவார்கள். இங்கே சாப்பிடும் உணவு அருள்வளம் கொண்டது என்றும் பயன்மிக்கது என்றும் பூரிப்புடன் சுட்டிக் காட்டுவார்கள் சுந்தரத் திருநபி (ஸல்) அவர்கள்.

ஒருமுறை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அன்னை உம்முல் முன்திர் (ரழி) அவர்களுடைய இல்லத்துக்குச் சென்றார்கள். அவர்களுடன் ஹழ்ரத் அலீ (ரழி) அவர்களும் சென்றார்கள். இருவருக்குமே அது சிறிய தாயாரின் வீடுதான். அங்கே உணவுப் பொருள் நிரம்பிய பாத்திரம் ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அதனைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் அதை எடுத்து உண்பதற்கு முற்பட்டார்கள். ஹழ்ரத் அலீ (ரழி) அவர்களும் அதே உணவை சாப்பிட விரும்பி னார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், “அலீயே... நீங்கள் (சில நாட்கள் நலக்குறைவுடன் இருந்துவிட்டு) இப்போதுதான் நலம் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள். எனவே இந்த உணவை இப்போது நீங்கள் சாப்பிட வேண்டாம்” என்று கூறினார்கள்.

இதனைக்கேட்டுக் கொண்டிருந்த உம்முல் முன்திர் (ரழி) அவர்கள் ஹழ்ரத் அலீ (ரழி)யின் உடல் நிலைக்கு ஏற்றபடி ஒரு கோதுமை உணவையும், காய்கறிக் கூட்டு ஒன்றையும் உடனடியாகத் தயாரித்துக் கனிவோடு தந்தார்கள். அதனைப் பார்த்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள், “அலீயே... இதனை எடுத்து உண்ணுங்கள். இப்போது இதுதான் மிக்க பயன்தரும் உணவாகும்” என்றார்கள். பிறகு இருவரும் அங்கே உணவு சாப்பிட்டு விட்டு திரும்பினார்கள்.

தம் இல்லம் தேடி வரும் உறவினர்களை அன்னைபோல் உபசரித்து மனம் மகிழ வைப்பதில் தன்னிகரற்றுத் திகழ்ந்தார்கள் அன்னை உம்முல் முன்திர் (ரழி) அவர்கள்.

ஒழுக்கத்தின் உறைவிடமாக தவறுகளின் நிழல்கூட தன்னைத் தீண்டி விடாதபடி நற்பண்பு களினால் ஒளிர்ந்து நின்றார்கள். ஆரம்பத்தில் முதன் முதலாக அண்ணல் நபியிம் “பைஅத்” எடுத்துக்கொண்டபோது என்ன நடந்தது என்பதை அவர்களே கூறுகின்றார்கள்.

“நானும் மதீனா வாழ் பெண்கள் பலரும் அண்ணலார் (ஸல்) அவர்களிடம் வந்து சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டோம். அல்லாஹ் வுக்கு யாரையும் எதையும் இணையாக்கக் கூடாது; திருடக் கூடாது; விபச்சாரம் செய்யக்கூடாது; உங்கள் குழந்தைகளை நீங்கள் கொல்லக்கூடாது; உங்களுக்கு மத்தியில் ஒருவர் மற்றவர் மீது அவதூறு கூறக்கூடாது; நன்மையான விஷயங் களில் இறைத்தூதருக்கு மாறு செய்யக்கூடாது; கணவர்மார்களுக்கு மோசம் செய்யக்கூடாது என்றெல்லாம் அல்லாஹ்வின் திருத்தூதர் (ஸல்) அவர்கள் சொல்ல அதன்படி நாங்கள் பைஅத் எடுத்துக்கொண்டோம்.

பின்னர் நாங்கள் திரும்பி வந்துவிட்டோம். கணவன்மார்களுக்கு மோசம் செய்வது என்றால் என்னவென்றே எனக்குப் புரியவில்லை; தெரிய வில்லை. இதனால் என் தோழிகளில் ஒருத்தியிடம் “கணவர்மார்களுக்கு மோசம் செய்வது என்றால் என்ன?” என்று அண்ணல் நபியிடம் சென்று எனக்காக விசாரித்து விளக்கம் கேட்டுவிட்டு வரமாட்டாய? என்று கேட்டுக்கொண்டேன். சரி என்று ஒப்புக்கொண்ட என் தோழி அண்ணல் நபியிடம் சென்று விளக்கம் கேட்டார். அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்...

“கணவனின் செல்வத்தை எடுத்து அனுபவித்துக்கொண்டு இன்னொருவன் மீது அன்பு கொள்வதுதான் கணவனுக்கு செய்யும் மோசம் ஆகும்.”

மோசடி, துரோகம் என்றால் என்ன என்றே தெரியாத அளவுக்கு குர்குணங்களை விட்டுத் தூரத்தில் நின்று வாழ்ந்தார்கள் அன்னை உம்முல் முன்திர் (ரழி) அவர்கள்.

இஸ்லாத்தின் நெடிய வரலாற்றில் அஹ்ஜாப் போர் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. அதற்கு ஹன்தக் (அகழ்ப்போர்) என்றொரு பெயரும் உண்டு. இஸ்லாத்தின் எதிரிகள் அனைவரும் ஓரணியில் திரண்டு ஒரே வீச்சில் இஸ்லாத்தை அழித்திட வேண்டும் என்ற தன்முனைப்போடு களம் கண்டிருந்தனர். அந்த நெருக்கடியான காலகட்டத்தில் மதீனாவில் முஸ்லிம்களின் ஒப்பந்தக்காரர்களாக வாழ்ந்து வந்த பனூ குறைளா எனும் யூத குலத்தினர், தங்களுக்கு பாதுகாப்பான கண்ணியமான உயர்வான அந்த வாழ்க்கையை வழங்கிய முஸ்லிம்களுக்கே துரோகம் செய்திட துணிந்தனர்.

முஸ்லிம்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறி எதிரிகளுடன் இணைந்து கொண்டனர். எனினும் துரோகம் தோற்றது. வாய்மை வென்றது. எல்லாம்வல்ல அல்லாஹ் தன் மார்க்கத்தை நிலை நாட்டினான். மகத்தான வெற்றியை ஏகத்துவச் செம்மல்களாம் முஸ்லிம்களுக்கு அல்லாஹ் வழங்கினான். அகழ் யுத்தம் முடிந்ததும் ஆயுதங்களைக் கீழே வைக்காமலேயே பனூகுரைளாவினர் வசிக்கும் கோட்டைகள் நோக்கி செல்லும்படி இஸ்லாமியப் படைக்கு உத்தரவிட்டார்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள். அந்த துரோகப் பதர்களுக்கு தக்கதோர் பாடத்தைக் கற்பித்திட முஸ்லிம்கள் தீரத்துடன் சென்றனர்.

அந்த பனூகுரைளா கூட்டத்தினர் தாங்கள் திருந்தவே மாட்டோம் என்பதற்கு அடையாளங்களை காட்டிக் கொண்டிருந்தனர் முஸ்லிம்களிடம். எனவே அவர்களின் கோட்டை கொத்தளங்களை முஸ்லிம்கள் முற்றுகையிட்டனர். ஏறத்தாழ ஒருமாத காலம் வரை நீடித்த முற்றுகையால் முடங்கிப்போன பனூகுரைளா, ஸஅத்பின் முஆத் (ரழி) அவர்களின் தீர்ப்புக்குக் கட்டுப்படுவதாக இணங்கி வந்தனர். ஹழ்ரத் ஸஅது பின் முஆத் (ரழி) அவர்களின் பனூ குரைளாவின் நேசத்துக்குரிய தலைவராக இருந்தார்கள்.

அல்லாஹ்வின் மார்க்கத்துக்கும் அண்ணல் நபிக்கும் சிறிதளவு சேதாரம் கூட ஏற்படக் கூடாது என்று விரும்பிய ஸஅது (ரழி) தன் தீர்ப்பை வழங்கினார். “பனூ குரைளாக்களில் உள்ள சண்டை செய்ய சக்தியுள்ள ஆண்கள் அனைவரும் கொல்லப்பட வேண்டும். சிறுவர்களும் பெண்களும் (போரிட இயலாத முதியோரும்) சிறை பிடிக்கப்பட வேண்டும். சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும்” என்று இதையறிந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஸஅது (ரழி)யிடம் “ஸஅதே... நீங்கள் அல்லாஹ்வின் தீர்ப்பையே கூறியுள்ளீர்கள்” என்று பாராட்டினார்கள்.

அப்படிக் கைது செய்யப்பட்டோரில் ரிஃபாஆ அல் குரழி என்பவரும் ஒருவர். இவர் அன்னை உம்முல் முன்திர் (ரழி) அவர்களுக்கும் அவர்களின் சகோதரர் சுலைத் பின் கைஸ் (ரழி) அவர்களுக்கும் நெருங்கிய நண்பர். உற்ற தோழர், இந்த ரிஃபாஆ. தான் கைது செய்யப்பட்ட உடன் உம்முல் முன்திர் அவர்களிடம் தூது அனுப்பினார். “எப்படியாவது முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம் பேசி என்னை விடுவித்து விட ஏற்பாடு செய்யுங்கள். எனக்கும் உங்களுக்கும் உள்ள நட்பின் உரிமையுடன் கேட்கிறேன். உங்களால் இது முடியும். ஏனெனில் நீங்கள் நபி (ஸல்) அவர்களுடைய சிறிய தாய் ஆவீர்கள். நீங்கள் என்னை விடுவித்தால் உலகம் முடியும் வரை நன்றியுள்ளவனாக இருப்பேன்” என்று மன்றாடினார் ரிஃபாஆ.

இதனால் மனமுருகி விட்டார்கள் உம்முல் முன்திர் (ரழி). உடனே அண்ணல் நபியிடம் வந்தார்கள். அவர்களின் முகத்தில் குழப்பமும் தடுமாற்றமும் தயக்கமும் போட்டி போட்டுக் கொண்டு தென்பட்டன. நபி (ஸல்) அதனைக் கண்டுகொள்ளத் தவறவில்லை. “என உம்முல் முன்திர் அவர்களே... என்ன வேண்டும் உங்களுக்கு?” என்று கனிவு பொங்கக் கேட்டார்கள் காருண்ய நபி (ஸல்) அவர்கள்.

“அல்லாஹ்வின் திருத்தூதரே... ரிஃபாஆ என்பவர் எங்களின் அன்புக்குரியவர், நேசர், எங்களிடம் கண்ணியமாக நடந்து கொள்பவர். இப்போது அடிமையாகப் பிடிக்கப்பட்டுள்ள அவரை எனக்குத் தந்து விடுங்களேன்..” என்றார்கள் அன்னை உம்முல் முன்திர் (ரழி).

ஏற்கனவே ரிஃபாஆவையும் அவரின் குணங்களையும் அவர் உம்முல் முன்திரின் அன்பர் என்பதையும் நன்கறிந்த நபிகள் நாயகம் (ஸல்) “சரி அவரை நீங்களே அன்பளிப்பாக வைத்துக் கொள்ளுங்கள்” என்று கூறிவிட்டார்கள், மறுப்பு ஏதும் இன்றி.

பிறகு, உம்முல் முன்திர் (ரழி) “அல்லாஹ்வின் திருத்தூதரே... (ரிஃபாஆ) இவர் தொழுகின்றார் (அக்கால யூதர்கள் ஒட்டக இறைச்சி சாப்பிட மாட்டார்கள். ஆனால்) ஒட்டக இறைச்சி சாப்பிடுகிறார்.” என்றார்கள். இதனைக் கேட்டதும் புன்னகை பூத்த நபி (ஸல்) அவர்கள், “அவர் தொழுதால் அவருக்கே நல்லது. (முஸ்லிம்களிடம் பழகுவதால் முஸ்லிம்களின் கலாச்சாரத்தை மட்டும் பேணிக் கொண்டு தொடர்ந்து அவரது மார்க்கத்திலேயே அவர் நிலைத்திருந்தால் அது அவருக்குத் தீமையானது தான்” என்று கூறி அனுப்பி வைத்தார்கள்.

இதன்பின்னர் ரிஃபாஆ அல்குரழி


vaigarai velicham official


இஸ்லாத்தில் முழுவதுமாக தன்னை நுழைத்துக் கொண்டார். ஏற்கெனவே அன்னை உம்முல் முன்திர் (ரழி)யின் வழிகாட்டுதலால் இஸ்லாமியக் கலாச்சாரத்தை நோக்கி ஈர்க்கப்பட்ட ரிஃபாஆ. அந்த நிமிடம் முதல் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றவர்களின் அணியில் பாங்காக தன்னை இணைத்துக் கொண்டார்.


இவ்வாறு இஸ்லாமிய அழைப்புப் பணியிலும் முத்திரை பதித்து நின்றார்கள் உத்தமி உம்முல் முன்திர் (ரழி).

மதீனாவில் இஸ்லாம் சுடர்முகம் காட்டிய போதே பைஅத் எடுத்துக் கொண்ட இவர்கள் ஹுதைபிய்யா உடன்படிக்கை நேரத்தில் அல்லாஹ்வின் மார்க்கத்தை நிலைநாட்டி உயிரையும் தந்திடத் தயார் என்று பெண்களை ஒரு பெரும் கூட்டமாகத் திரட்டி வந்து அண்ணல் நபியிடம் பைஅத் செய்தார்கள். இதனால் “இரண்டு பைஅத்கள் எடுத்துக் கொண்டவர்” என்ற பெயருடன் அதன்பின் வரலாற்றில் நிலைத்தார்கள்.

சத்தியத்தை ஏற்பதில் விரைவு, நாடி வருவோரை கனிவோடு உபசரிக்கும் பாங்கு, நற்பண்புகளில் நிலைத்திருக்கும் நேர்த்தி, தீனை நிலைபெறச் செய்திட இன்னுயிரைத் தர வேண்டும் என்ற வேட்கை, நுண்ணிய அறிவுத் திறனுடன் அழைப்புப் பணி செய்வதில் ஆர்வம் என வரலாற்றின் ஏடுகளில் உயிர்ப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் அன்னை உம்முல் முன்திர் (ரழி).

அடுப்படியோடு தன் ஆயுளை அடக்கி விடாமல், அழைப்புப் பணியிலும், அறப் போரிலும் தன் பங்களிப்பை தந்து, வரலாறாய் வாழும் இந்த மாதரசி தாய்க்குலத்தின் தலைசிறந்த முன் மாதிரியன்றோ!



# உணவு விழுங்குவதில் சிரமம் ஏற்படுகிறதா?



டாக்டர் **சுதா,** காது, மூக்கு, தொண்டை நிபுரணர்

**உணவை** விழுங்குவதில் 10 முதல் 30% முதியோர்களுக்குச் சிரமம் (Dysphagia) ஏற்படுகிறது. பொதுவாக வயதாகும்போது, நாவின் சுவை மற்றும் நாசியின் நுகரும் தன்மை குறைகிறது. பல் வரிசையில் மாற்றம், பற்களின் சுகாதாரம் ஆகியவற்றால் உணவை நன்கு மெல்ல முடிவதில்லை. நாக்கு, உதடு மற்றும் தாடைப் பகுதியில் உள்ள தசைகள் சுருங்குவதாலும், உமிழ்நீர் குறைவாகச் சுரப்பதாலும் உணவை தொண்டைப் பகுதிக்குக் கொண்டு செல்வதில் சிரமம் ஏற்படுகிறது.

**உணவு விழுங்குவதில் சிரமம் ஏற்படக் (Dysphagia) காரணங்கள்**

மறதி நோய், அல்ஸுமர் நோய், பார்க்கின்சன்ஸ் நோய், பக்கவாதம் போன்ற பிரச்சனை உள்ளவர்களுக்கு உணவை விழுங்க உதவும் தசைகளுக்குச் செல்லும் நரம்பு பாதிக்கப்படுவதால் விழுங்குவதில் சிரமம் ஏற்படுகிறது.

வாய் மற்றும் தொண்டைப் பகுதியில் ஏற்படும் புற்றுநோய் மற்றும் அதற்கான அறுவை சிகிச்சை மற்றும் கதிர்விச்சு காரணமாகவும் விழுங்குவதில் தாமதம் ஏற்படலாம். சிலருக்கு மாத்திரை உட்கொள்ளும்போது மட்டும் விழுங்குவது கடினமாகிவிடுகிறது. (Pilldys phagia), உணவுக்குழாய் சுருங்குதல் (Stricture), வயிற்றில் அல்சர் மற்றும் கட்டியினாலும் டிஸ்ஃபேஜியா ஏற்படலாம்.

**விழுங்குவதில் பிரச்சனை என்பதை எப்படித் தெரிந்து கொள்வது?**

1. சாப்பிட அதிக நேரம் எடுத்தல்
2. குறைவாகச் சாப்பிடுதல்
3. விழுங்கும்போது புரை ஏறுதல்
4. அடிக்கடி நுரையீரல் தொற்று ஏற்படுதல்
5. எடை குறைதல்
6. ஊட்டச்சத்துக் குறைபாடு
7. நீர்ச்சத்துக் குறைதல்

**டிஸ்ஃபேஜியா உள்ளவர்கள் என்ன பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்?**

பொதுநல மருத்துவர் அல்லது முதியோர் நல மருத்துவர், நரம்பியல் மருத்துவர், காது, மூக்கு, தொண்டை நிபுணர் மற்றும் பயிற்சியாளர்





vaigarai velicham official

(Speech and swallowing therapist) கொண்ட குழு, நோயின் தன்மையை அறித்து அதற்குத் தீர்வுகாண வேண்டும்.

காது, மூக்கு, தொண்டை நிபுணர்கள், ஃப்பீஸ் (FEES) மற்றும் புளூரோஸ்கோபி (Flouroscopy) என்ற பரிசோதனையை மேற்கொண்டு, வாய் மற்றும் தொண்டையின் எந்தப் பகுதியில் குறைபாடு உள்ளது, பிரச்சனையின் தீவிரம், நுரையீரலில் ஆஸ்பிரேஷன் ஏற்படுகிறதா?, எந்த வகை உணவை விழுங்குவதில் சிரமம் ஏற்படுகிறது என்பனவற்றைக் கண்டறிகின்றனர்.

**டிஸ்ஃபேஜியாவுக்கு தீர்வு என்ன?**


பிரச்சனையின் தன்மைக்கேற்ப மருத்துவர்கள் அதற்கான சிகிச்சையைப் பரிந்துரைப்பர், நம் பண்டைய வழக்கப்படி, தலையைக் குனிந்து, பின் தலையைத் தூக்கி உணவை உட்கொள்வதே சிறந்த முறையாகும்.


பயிற்சியாளர் பல்வேறு விழுங்குவதில் பயிற்சி, உணவுப் பதத்தில் மாற்றம், வைட்டல் டிஸ்டிம் சிகிச்சை (Vital Stim Therapy) ஆகிய முறைகளில் பயிற்சி அளிப்பார்.

**முதியோர்கள் என்ன மாதிரியான உணவுப் பழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்?**

1. நிமிர்ந்து உட்கார்ந்து உணவை உண்ண வேண்டும்.
2. சாப்பிடும்போது வேறு எதிலும் கவனம் செலுத்துதல் கூடாது.
3. உணவை மெதுவாக மென்று உண்ண வேண்டும்.
4. சாப்பிடும்போது பேசக்கூடாது.
5. தொண்டை வறட்சியாக இருந்தால் அல்லது மாத்திரை விழுங்கும் முன், சிறிது தண்ணீரை அருந்த வேண்டும்.

**நன்றி - முதுமை எனும் பூங்காற்று**



# பொறுமையின் நன்மைகள்

பொறுமை ஒரு முஸ்லிமின் வாழ்க்கையின் மிக முக்கியமான அடிப்படையாகும். பொறுமை தான் ஒரு முஸ்லிமின் உலக வாழ்க்கைக்கும் மறுமை வாழ்க்கைக்கும் வெற்றி அளிக்கிறது. ஒரு முஸ்லிம் பொறுமையைத் தன்னுடைய வாழ்க்கையை வழிநடத்திச் செல்லும் ஒளி விளக்காக ஆக்கிக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் வாழ்க்கையின் ஓட்டத்தில் அவன் பல நஷ்டங்களை, இழப்புகளை சந்திக்க நேரிடும்.

முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள்

“பொறுமையை முறைமையாக ஆக்கிக் கொள்பவனுக்கு அல்லாஹ் பொறுமையை வழங்குவான். இன்னும் பொறுமையை பெற்றவனைவிட சிறந்த சன்மானத்தை பெற்றவன் எவனுமில்லை” (புகாரீ)

“முஃமின்களே பொறுமையுடன் இருங்கள். (இன்னல்களை) சகித்துக்கொள்ளுங்கள். (ஒருவரை ஒருவர்) பலப்படுத்திக்கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள் (இம்மையிலும் மறுமையிலும்) நீங்கள் வெற்றியடைவீர்கள்” (ஆலஇம்ரான்:200)

(நபியே) நீர் கூறும்

“ஈமான் கொண்ட நல்லடியார்களே உங்களுடைய இறைவனுக்கு பயபக்தியாக இருங்கள். இவ்வுலகில் அழகாய் நன்மை செய்தோருக்கு அழகிய நன்மையே கிடைக்கும். அல்லாஹ்வுடைய பூமி விசாலமானது. பொறுமையுள்ளவர்கள் தங்கள் கூலியை நிச்சயமாக கணக்கின்றிப் பெறுவார்கள் ” (அல்ஜுமர்:10)

“இன்னும் அவர்கள் பொறுமையுடனிருந்து நம் வசனங்களை உறுதியாக நம்பி ஏற்றுக் கொண்டபோது நம்முடைய கட்டளைப்படி நேர்வழி காட்டும் தலைவர்களை அவர்களில் நின்றும் உண்டாக்கினோம்” (அல்ஸஜ்தா : 24)

“பொறுமையுடையோருக்கு (நபியே) நீர் நன்மாராயம் கூறுவீராக (பொறுமையுடையோராகிய) அவர்களுக்குத் துன்பம் ஏற்படும் போது உரியவர்கள் நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோம் என்று கூறுவார்கள். இத்தகையோர் மீதுதான் அவர்களுடைய இறைவனின் நல்லாசியும், நற்கிருபையும் உண்டாகின்றன. இன்னும் இவர்கள்தாம் நேர் வழியை அடைந்தார்கள்.”

(அல்பகரா : 155–157)

“(வறுமை, இழப்பு போன்ற) துன்பத்திலும் நோய் நொடிகள் போன்றவற்றின் கஷ்டத்திலும் யுத்த சமயத்திலும் உறுதியுடனும் பொறுமையுடனும் இருப்போரும் தான் நன்னெறியாளர்கள். இன்றும் அவர்கள்தாம் முத்தகீன்கள் (பயபக்தியுடையவர்கள்) – அல்பகரா : 177

“மேலும் எத்தனையோ நபிமார்களுக்குப் பின் இணைந்து அவர்களைப் பின்பற்றிய பலரும் போர் புரிந்துள்ளனர். அல்லாஹ்வின் பாதையில் அவர்களுக்கு ஏற்பட்ட (துன்பத்)திற்காக அவர்கள் மனம் தளரவோ, பலவீனப்படவோ அகத்தியத்திற்கு அடிபணியவோ இல்லை. மேலும் பொறுமையாளர்கள் அல்லாஹ் நேசிக்கின்றான் (ஆலஇம்ரான் : 146)

மேலும் அவர்கள் பொறுமையாக இருந்த காரணத்தால் சுவர்கத்தையும் பட்டாடையையும் அவர்களுக்கு கூலியாக வழங்குவான்.

(அத்தஹ்ர் : 12)

பொறுமையாளர்களுடன் அல்லாஹ் இருப்பதாகவும், பொறுமையாளர்களை அல்லாஹ் நேசிப்பவர்களாகவும் பொறுமையை கடைப்பிடிப்பதன் மூலம் அல்லாஹ் பொறுமையாளர்களுக்கு அவர்களுடைய கூலியை பன்மடங்கு ஆக்கித்தருவதாகவும் கூறுகிறான்.

இன்னும் முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள்

பொறுமை ஈமானின் ஒரு பகுதியாகும். பொறுமையை நம்முடைய வாழ்வின் எல்லா நிலைகளிலும் கடைப்பிடித்து வெற்றி அடையும் கூட்டத்தினராக அல்லாஹ் நம்மை ஆக்கி அருள்புரிவானாக, ஆமீன்.

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்



# வேர்கள்

## பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | **சிறையில் எனது நாட்கள்**<br>ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் | - ரூ.350.00 |
| 2. | **ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு**<br>மு. குலாம் முஹம்மது | - ரூ.140.00 |
| 3. | **சாதி ஒழிந்தது** - டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 4. | **End of Casteism** T.M. Mani | - ரூ.50.00 |
| 5. | **அஹமதாபாத் குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 6. | **டெல்லி குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 7. | **நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் விரிவாக்கப்பட்ட பதிப்பு** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 8. | **மால்கம்**-X, மு.குலாம் முஹம்மது | - ரூ.120.00 |
| 9. | **தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம்** டி.எம்.மணி | - ரூ.20.00 |
| 10. | **செந்தமிழ்நாட்டுச் சேரிகள்**, டி.எம்.மணி | - ரூ.40.00 |
| 11. | **கர்கரேயை கொலை செய்தது யார்?** | - ரூ.250.00 |
| 12. | **சிந்திப்பீர் செயல்படுவீர்**, நா.கோதண்டபாணி | - ரூ.15.00 |
| 13. | **ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்**, ப.கோபால கிருஷ்ணன் | - ரூ.40.00 |
| 14. | **சாதி ஒழிந்தது** (ஹிந்தி) டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 15. | **நாம் பிரிந்து விடவேண்டாம்**, பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.175.00 |
| 16. | **தாலிபானின் பிடியில்**, மு. குலாம் முஹம்மத் | - ரூ.150.00 |
| 17. | **தீண்டாமைக்குத் தீர்வு** | - ரூ.30.00 |
| 18. | **பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு**<br>மு. குலாம் முஹம்மத் | - ரூ.110.00 |
| 19. | **பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள்**, மு. குலாம் மஹம்மத், | - ரூ.90.00 |
| 20. | **இஸ்லாமிய நாகரிகம்**,<br>முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.130.00 |
| 21. | **கஷ்மீரின் பாதி விதவைகள்**, மு. குலாம் முஹம்மத், | - ரூ.70.00 |

| | | |
|---|---|---|
| 22. | **எது முதலில்?**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.450.00 |
| 23. | **சாதி ஒழிந்தது** (கன்னடம்) | - ரூ.50.00 |
| 24. | **அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?**<br>டி.எம். உமர் ஃபாரூக் | - ரூ.20.00 |
| 25. | **கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்?** மு. குலாம் முஹம்மத் | - ரூ.30.00 |
| 26. | **முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம்**<br>செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.15.00 |
| 27. | **இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும்** | - ரூ.50.00 |
| 28. | **இஸ்லாம் வழங்கும் தண்டனைகள்** | - ரூ.40.00 |
| 29. | **இஸ்லாமும் விஞ்ஞானமும்** | - ரூ.30.00 |
| 30. | **இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா?** | - ரூ.50.00 |
| 31. | **இஸ்லாமும் பெண்களும்** | - ரூ.60.00 |
| 32. | **இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா?** | - ரூ.70.00 |
| 33. | **தேசப்பிரிவினைக்கு யார் காரணம்?**<br>விரிவாக்கப்பட்ட பதிப்பு, மு. குலாம் முஹம்மத் | - ரூ.100.00 |
| 34. | **திருக்குர்ஆன் கூறும் பொறுமை**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.80.00 |
| 35. | 26/11- **விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்?** | - ரூ.220.00 |
| 36. | **ஒரு தலித் போராளியின் வாழ்வும்,**<br>**அவர் காட்டிய வழியும்** - அ.மார்க்ஸ் | - ரூ.20.00 |
| 37. | **முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்**<br>வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.10.00 |
| 38. | **நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?**<br>தி.லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.10.00 |
| 39. | **குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்?**<br>சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் | - ரூ.25.00 |
| 40. | **இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன்**<br>**லேப்டாப்பில் இருந்ததென்ன?** | - ரூ.20.00 |
| 41. | **கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான்**<br>கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் | - ரூ.25.00 |
| 42. | **கூரியூர் ஜின்னா ஷஹீத்** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 43. | **முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும்** | - ரூ.20.00 |
| 44. | **இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு,** எஸ்.எம். முஷ்ரிப், | - ரூ.30.00 |
| 45. | **சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம்,**<br>**காந்திஜி கொலை ஏன்? எப்படி?** | - ரூ.30.00 |

| | | |
|---|---|---|
| 46. | **பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்**<br>எஸ்.எம். முஷ்ரிப், IPS, தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.400.00 |
| 47. | **குஜராத் : 2002 பெண்கள் குழந்தைகளுக்கெதிரான கொடூரங்கள்,** தமிழில்: வளர்மதி | - ரூ.150.00 |
| 48. | **இஸ்லாம் ஒன்றே வழி!**<br>அனிசுத்தீன் அஹமத், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.120.00 |
| 49. | **இஸ்லாம் உங்கள் பார்வைக்கு**<br>ஹமுத அப்த் அல் அத்தி, தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.400.00 |
| 50. | **முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?**<br>ஹள்ரத் அபுல்ஹஸன் நத்வி (ரஹ்), தமிழில் : மௌலவி அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ | - ரூ.300.00 |
| 51. | **சீனாவின் பிடியில் உய்கூர் முஸ்லிம்கள்** | - ரூ.20.00 |
| 52. | **இஸ்லாம் நாங்கள் தேர்தெடுத்த மார்க்கம்** | - ரூ.100.00 |
| 53. | **முஹம்மது (ஸல்) நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி**<br>கரன் ஆம்ஸ்ட்ராங் | - ரூ.20.00 |
| 54. | **நானொரு RSS முழுநேர ஊழியன் எனது வாழ்க்கைப் பயணம்** | - ரூ.50.00 |
| 55. | **பொதுசிவில் சட்டம் முழு வரலாற்று பின்னணி** | - ரூ.50.00 |
| 56. | **அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும்** | - ரூ.40.00 |
| 57. | **எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர்** | - ரூ.60.00 |
| 58. | **சிக்கல் நாயக்கன்பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை** | - ரூ.60.00 |
| 59. | **பா.ரஞ்சித் அவர்களின் உரையும் ஜி.வி.உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும்** | - ரூ.25.00 |
| 60. | **முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார்** | - ரூ.20.00 |
| 61. | **அயா சோபியா உருவான வரலாறு** | - ரூ.50.00 |

## எமது விற்பனையில்...

| | | |
|---|---|---|
| 01. | **கோவை கலவரத்தில் எனது சாட்சியம்**<br>A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் | - ரூ.100.00 |
| 02. | **மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலித் படுகொலைகள்**<br>ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு | - ரூ.100.00 |
| 03. | **குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள்**<br>ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, | - ரூ.170.00 |
| 04. | **நாடார்கள் வரலாறு கருப்பா? காவியா?**<br>தி.லஜபதி ராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.140.00 |
| 05. | **பலி கடாக்கள்** | - ரூ.300.00 |

## BOOKS IN ENGLISH

| | | |
|---|---|---|
| 1. | **END OF CASTEISM** - T.M. Umar Farooq,<br>English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam | - Rs.50.00 |
| 2. | **THE GREAT BETRAYAL** - Elyass Davidson, By Pharos Media | - Rs.695.00 |
| 3. | **MUHAMMED THE PROPHET FOR OUR TIME**<br>Karen Armstrong | - Rs.325.00 |
| 4. | **KAFKA LAND - PREJUDICE LAW AND COUNTER TERRORISM** - Manisha Sethi | - Rs.350.00 |
| 5. | **WHO KILLED KARKARE**<br>The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, | - Rs.300.00 |
| 6. | **26/11 PROBE WAY JUDICIARY ALSO FAILED** - S.M. Mushrif | - Rs.275.00 |
| 7. | **ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION**<br>Kamaluddin Ahamed | - Rs.60.00 |
| 8. | **MUSLIMS AGAINST PARTITION OF INDIA**<br>Shamsul Islam, Pharos Media | - Rs.280.00 |
| 9. | **PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN**<br>(EPITOMS OF HINDU MUSLIM UNITY) - Syed Naseer Ahamed | - Rs.25.00 |
| 10. | **IMAGE AND SUBSTANCE-MODI'S FIRST YEAR OF OFFICE**<br>Nilofar Suhrawardy | - Rs.150.00 |
| 11. | **Innocent Prisoners** | - Rs.495.00 |
| 12. | **Brahminists Bombed Muslims Hanged** | - Rs.350.00 |
| 13. | **Kodikkal- TheLiving Witness of Social Justice** | - Rs.300.00 |

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது**

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது** - டி.எம். உமர் பாரூக் - ரூ.60.00
02. **நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி** - ரூ.30.00
கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்

# வேர்கள் பதிப்பகம்

52/1, கோனிக்கா பில்டிங், மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

GPay **8148129887** Vaigarai Velicham Official

தொடர்புக்கு : **8148129887, 7401213394**

வழியாக புத்தகம் ஆர்டர் செய்ய **9786214186**

**Vaigarai Velicham Official** **vaigarai velicham official**

**darultrust@yahoo.com** **Website : Darulislam.in**



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002